# பொருளியலாளன்

மலர் 2   இதழ் 1   டிசம்பர் 87 / மார்ச் 88


- ★ இலங்கையின் கைத்தொழில் விருத்தி
- ★ இலங்கையில் பிறப்புக்கள்
- ★ பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்
- ★ ஏற்றுமதி ஊக்குவிப்புக்கள்
- ★ சிறு ஏற்றுமதிப் பயிர்கள்
- ★ பொருளாதாரங்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சனைகள்
- ★ பொருட்கள்


Phone 23631
Jaffna

| ஆண்டு | நடைமுறைகாரணி செலவுவிலைகளில் | | வளர்ச்சி வீதம் நிலையானகாரணி செலவு விலைகளில் | |
|---|---|---|---|---|
| | மொத்த தேசிய வருமானம் (மில். ரூபா) | தலா வருமானம் (ரூபாய்) | தேசிய வருமானம் | தலா வருமானம் |
| 1970 | 12967 | 1036 | — | — |
| 1971 | 13486 | 1062 | 0.5 | 1.0 |
| 1972 | 14542 | 1123 | 3.4 | 1.4 |
| 1973 | 17737 | 1355 | 4.0 | 3.0 |
| 1974 | 23119 | 1740 | 3.2 | 1.8 |
| 1975 | 25478 | 1888 | 2.7 | 1.0 |
| 1976 | 27750 | 2023 | 2.8 | 1.2 |
| 1977 | 34432 | 2470 | 4.4 | 2.8 |
| 1978 | 40242 | 2836 | 8.8 | 6.8 |
| 1979 | 49542 | 3424 | 6.4 | 4.3 |
| 1980 | 61814 | 4194 | 5.6 | 3.6 |
| 1981 | 77625 | 5179 | 4.1 | 2.5 |
| 1982 | 92720 | 6104 | 4.9 | 3.5 |
| 1983 | 110664 | 7179 | 4.0 | 2.5 |
| 1984 | 136638 | 8759 | 5.1 | 3.9 |
| 1985 | 144921 | 9151 | 5.3 | 3.7 |
| 1986 | 159852 | 9918 | 4.5 | 2.7 |

ஆதாரம்:– இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள்

961

# பொருளியலாளன்

காலாண்டு சஞ்சிகை

மலர் 2 இதழ் 1 டிசம்பர் 87 / மார்ச் 88

ADVISORY COMMITTEE:

**Prof: S. Rajaratnam**
B. A. Hons (Cey.) M. Sc. (Lon)
Head, Dept of Commerce and Management
University of Jaffna

**Prof N. Balakrishnan**
B. A Hons (Cey.); M. Phil (Leeds)
Dean Faculty of Arts.
University of Jaffna

**Mr. M. Sinnathamby**
B. A Hons (Cey.) M. A. (Manchester)
Senior Lecturer. Dept. of Economics
University of Peradeniya

**Dr. V. Nithiananthan**
B. A Hons (Cey.): Ph. D (Reading)
Head Dept of Economics
University of Jaffna.

EDITORIAL BOARD:

**Mr. P Sivanathan**
B. A. Hons (Cey) M. A (Jaffna)
Lecturer in Economics
University of Jaffna

**Mr K. Kandiah**
B. A. Hons (Cey.) M. Sc. (Cey)
M Econ. (Thai)
Lecturer in Economics
University of Jaffna

**Mr. A. Senthivadivel**
B. A. Hons (Cey.) M. A. (Jaffna)
S. L. A. S.
Ministry of Finance and Planning
Colombo

EDITOR:

**N. Perinpanathan**
B. A Hons (Cey.) M. A. (Jaffna)
Lecturer, Dept. of Economics
University of Jaffna

ASSISTANT EDITOR:

**M. Sinnathamby**
B. A. B., Phil. Hons (Cey)

MANAGING EDITOR:

**C. S Anantham**
B. A. Hons (Cey.): H. N. Dip. Acct.
Final Part I

'பொருளியலாளன்' முதலாவது இதழுக்கு தமிழ் மக்கள், மாணவர்கள் வழங்கிய ஆதரவை எண்ணி 'இளம் பொருளியலாளர் நிறுவனம்' மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது. அச்சிட்ட பிரதிகள் அனைத்தும் விரைவில் விற்பனையாகியமை சமூகத்தில் இத்தகையதொரு சஞ்சிகைக்கு தேவையுண்டு என்பதை காட்டி நிற்கின்றது.

இரண்டாவது இதழுக்குரிய விடயதானங்கள் இருந்தும் நாட்டில் குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் ஏற்பட்ட பிரச்சனைகளால் டிசம்பர் 87 க்குரிய இதழை உரிய காலப்பகுதியில் வெளிக்கொணர முடியவில்லை. கால ஓட்டத்துடன் ஒத்துப்போக வேண்டுமென்பதால் இவ்விதழ் இரண்டு காலாண்டுகளுக்குரிய இதழாக மலர்கின்றது.

நாட்டின் மக்களைப் பெரிதும் பாதித்து வருகின்ற பணவீக்கப் போக்கு பத்திரிகைத் தொழிலையும் விட்டு வைக்கவில்லை. பத்திரிகைத் தாள்களின் விலையேற்றம் சஞ்சிகையின் விலையினை குறைவாக வைத்திருக்க விரும்பிய எங்களுக்கு இரக்கம் காட்டுவதாக இல்லை. ஓர் இதழுக்கான உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதால் எமது சஞ்சிகையின் விலையினையும் உயர்த்த வேண்டிய 'பலவந்த' நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். எனினும் பல வெளிநாட்டு சஞ்சிகைகள், பாடப்புத்தகங்கள் என்பவற்றுடன் ஒப்பிட்டு நோக்கும் போது 'பொருளியலாளன்' விலை மிகவும் குறைந்தது என யாவரும் எண்ணுவர். எனவே தொடர்ந்து எம்மக்கள் எமக்கு ஆதரவை நல்குவார்கள் என நம்புகிறோம்.

— ஆசிரியர்

வெளியீடு

இளம் பொருளியலாளர் நிறுவனம்,
37, அச்சுக்கூட ஒழுங்கை
கொக்குவில்
இலங்கை.

* கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே முழுப் பொறுப்பாளியாவர். இளம் பொருளியலாளர் நிறுவனமல்ல.

**சந்தா விபரம்**

வருட சந்தா ரூ. 60
வருட சந்தா மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

* காசுக்கட்டளைகள் தபாற் கட்டளைகள் பின்வரும் பெயருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ந. பேரின்பநாதன்
37, அச்சுக்கூட ஒழுங்கை
கொக்குவில்.

YOUNG ECONOMISTS ASSOCIATION
Social Justice Through Knowledge
SRILANKA

# பொருளியலாளன்

டிசம்பர் 87 / மார்ச் 88

திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி : கொள்கைகளும் சாதனைகளும்.
கலாநிதி வி. நித்தியானந்தன் 3

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்
சி. தண்டாயுதபாணி 12

இலங்கையில் பிறப்புக்களும் அவற்றிற்கான காரணிகளும்.
கார்த்திகேசு குகபாலன் 17

பொதுப்படு கடன் மூலங்கள் 23

1977 ன் பின்னுள்ள காலப்பகுதியிலான இலங்கை அரசின் ஏற்றுமதி ஊக்குவிப்புகள்.
மா. சின்னத்தம்பி 26

சிறு ஏற்றுமதிப் பயிர்கள்
அ. குமாரவேலு 35

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள்
ந. பேரின்பநாதன் 38

பொருட்கள் 46

1988 பாதீட்டின் வரிமுறை மாற்றங்கள் 53

* பொருளியல் அறிஞர்களிடமிருந்து பொருளியல் சார் கட்டுரைகள் எதிர்பார்க்கப் படுகின்றன.
* தரமானவை என ஆசிரியர் கருதும் கட்டுரைகள் மாத்திரம் பிரசுரமாகும்.

# கட்டுரை வழங்கியவர்கள்

○ **கலாநிதி வி. நித்தியானந்தன்** B. A. Hons (cey) ; Ph. D (Reading)
தலைவர் பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

❀

○ **கார்த்திகேசு, குகபாலன்** B. A. Hons (cey) M. A (Jaffna) D. P. S (Madras)
சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

❀

○ **மா. சின்னத்தம்பி** B. A. B, Phil Hons (Cey)
வலய ஆலோசக ஆசிரியர்
உதவி ஆசிரியர். பொருளியலாளன்

❀

○ **சி. தண்டாயுதபாணி** B. A Hons (Cey) Dip. in Edu.
பொருளியல் சிறப்பு பட்டதாரி
ஆசிரியர், திருகோணமலை இந்துக்கல்லூரி

❀

○ **ந. பேரின்பநாதன்** B. A. Hons (Cey), M. A. (Jaffna)
விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பிரதம ஆசிரியர். பொருளியலாளன்

❀

○ **அ. குமாரவேலு** B. A. Hons (Cey)
பொருளியல் சிறப்புப் பட்டதாரி
அபிவிருத்தி உத்தியோகத்தர்

யின் கீழிருக்க ஏனைய யாவும் திறந்த பொது அனுமதிப் பத்திர முறையின் கீழ் வந்தன. இவ்வாறான பொருட்களின் மீதான நேரடிக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக, புதிய தீர்வை அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் ஒருபகுதியாக உள்நாட்டில் நிறுவப்படும் கைத்தொழில்களுக்கு 'நியாயமானளவு'பயனுள்ள பாதுகாப்பு வழங்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தீர்வைச் சீர்திருத்தத்தின் ஒரு பிரதான அம்சம் தீர்வைச்சீர்திருத்த ஆணைக்குழு என்றபெயரில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். அதுவே 1980ம் ஆண்டு ஜனாதிபதி தீர்வை ஆணைக்குழு என உருமாற்றத் திற்குட்பட்டது. அதன் முக்கிய கடமைகளாக முற்றான பாதுகாப்பின் அளவினைக் குறைப்பதும் பலவேறு கைத்தொழில்களிடையிலும் பாதுகாப்பைச் சமப்படுத்தும் வகையில் முற்றான தீர்வை அமைப்பைத்திருத்துவதும்குறிக்கப்பட்டன.

இவ்வாறான வர்த்தக தீர்வைச்சீர்திருத்தங்களின் மூலம் இதுவரை நிலவி வந்த குறைபாடுகளாகிய கைத்தொழில்களின் இயலளவுப் பயன்பாட்டுக் குறைவு, மிகையான நிர்வாக ஒழுங்குக் கட்டுப்பாடு என்பவற்றை அகற்றி சரியான உள்நாட்டுக் கைத்தொழில் அமைப்பொன்று உருவாவதை ஊக்குவிக்க முடியுமெனக் கருதப்பட்டது. அத்துடன் உள்ளூர்க் கைத்தொழில்களின் உயர் மூலதனச்செறிவு, இறக்குமதி உள்ளீடுகளில் தங்கியிருக்கும் தன்மை என்பவற்றைக் குறைத்து ஏற்றுமதிசார் உற்பத்தியை மேம்படுத்த வேண்டுமென்பதும் குறிக்கோள்களாயிருந்தன.

### (ii) செலாவணி விகிதச் சீர்திருத்தம்

வர்த்தகத் தாராண்மையின் ஒரு பிரதான அம்சமாகவே அதுவரை நடைமுறையிலிருந்த செலாவணி விகிதத்திற் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன்படி 1968 மே மாதம் முதல் அமுலிலிருந்து வந்த அந்நியச் செலாவணி உரிமைச்சான்றிதழ் திட்டம் (பீக்ஸ்) நீக்கப்பட்டு அதனுடன் இணைந்திருந்த இரட்டை விகித முறைக்குப் பதிலாக மீண்டும் ஒருமித்த மாற்று விகிதமுறை நடைமுறைக்குவந்தது. ஆனால் புதிய பரிமாற்ற விகிதம் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக ரூபாவை 42 1 சத விதத்தினாற் பெறுமதிக்குறைப்புச் செய்யப்பட்டதொன்றாயிருந்ததுடன் அந்நியச் செலாவாணிச் சந்தையில் இடம்பெறும் அடிப்படை அபிவிருத்திகளின் பிரதிபலிப்புகளுக்கேற்பத் தளம்பும் நிலையிலும் விடப்பட்டது. ஆகவே நிலையான நாணய மாற்று மாற்றுவிகித முறைக்குப் பதிலாகத் தளம்பும் நாணய மாற்றுவீத முறையொன்று இலங்கையில் அமுலுக்கு வந்திருந்தது.

### (iii) விலைக்கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை

1960கள் முதல்படிப்படியாக அதிகரித்து வந்திருந்த விலைக் கட்டுப்பாடுகள் ஒரு சில அத்தியாவசிய நுகர் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பலதரப்பட்ட பொருட்களையும் பொறுத்தவரை நீக்கப்பபட்டன. அதன் மூலம் அரசாங்கத்தின் நிர்வாகத் தீர்மானங்களுக்கமைய லாபங்கள் நிர்ணயிக்கப்படுவதற்குப் பதிலாகச் சந்தைச் சக்திகளுக்கும் ஒருவரின் தனிப்பட்ட திறமைக்குமேற்ப லாபம் உழைப்பதற்கு வழி பிறக்குமெனக் கருதப்பட்டது.

### (iv) நேரடி அந்நிய முதலீடுகளைக் கவருதல்

கைத்தொழில்மயவாக்கத்தைப்பொறுத்தவரை திறந்த பொருளாதாரக் கொள்கை நேரடியாக அந்நிய முதலீடுகளைக் கவரும் செய்முறைக்கு ஒரு முக்கிய இடத்தினை அளித்திருந்தது. இது அருமை நிலையிற் கிடைத்துக் கொண்டிருந்த உள்நாட்டு மூலதனம், தொழில்நுட்பத்திறமை, முகாமைத் திறமை என்பவற்றைக் குறை நிரப்புவதற்குதவுமெனக் கருதப்பட்டது. அதேநேரத்தில் அந்நிய நிறுவனங்கள் கைத்தொழிற் பொருட்களுக்கான புதிய சந்தை வாய்ப்புக்களைப் பெறுவதில் உதவக்கூடியனவாயிருக்குமென்ற நோக்கமும் கூடவே செயற்பட்டது.

அந்நிய முதலீடுகளைக் கவருவதற்கான ஒரு சாதனமாகவே முதலீட்டு மேம்பாட்டு வலயங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் முன்வந்தது. இது தொடர்பாகச் சேவையாற்று

வதற்கென இரு அமைப்புகள் உருவாக்கப்பட்டன. கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு [GCEC] என்ற பெயரிற் புதிதாக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு முதலீட்டு மேம்பாட்டு வலயங்களை முகாமை செய்வதற்கான ஒரு சட்டரீதியான நிறுவனமாயிருந்தது. அதற்குப் புறம்பான முறையில் அமைந்த அந்நிய முதலீட்டு ஆலோசனைக் குழு [FIAC] என்பது ஏற்கனவே இயங்கியதொன்றாயிருந்த போதும் இப்போது அதற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

## (v) பொதுத்துறை முதலீடுகளைக் கட்டுப்படுத்திச் சீர்ப்படுத்தல்

திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் பொதுத்துறையானது தனியார் துறை முயற்சியாளரைப் பொதுவாகக் கவராத மிகக் கூடிய மூலதனம் வேண்டப்பட்ட அல்லது லாப அளவு குறைந்த தொழில்களில் மாத்திரம் கவனம் செலுத்த வேண்டும் என்பதே நோக்கமாயிருந்தது. பொதுத்துறை பற்றிய 1977 வரையிலான அனுபவம், திறமைக் குறைவு, நட்டத்தில் இயங்கல் என்பதாக இருந்த காரணத்தினால் அவற்றைக் களைவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கென 1978ஆம் ஆண்டு அரசாங்கம் வெளியிட்ட நான்கு அம்சத் திட்டம் அவை பொருளாதாரத்தின் மீதுஒரு சுமையாகாமற்பார்த்துக்கொள்ளும் வகையில் அவற்றின் திறமையை அதிகரிப்பதுடன் லாபகர முயற்சிகளாக அவற்றை மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. திட்டத்தில் உள்ளடங்கியிருந்த நான்கு அம்சங்களாவன: (அ) நிதி ரீதியாகத் தன்னிச்சையாக இயங்கும் வகையிற் குறைந்தபட்சத்தரக் கட்டுப்பாடுகளை விதித்தல்; (ஆ) தனியார் துறையுடன் எதுவித பாரபட்சமுமின்றிச் சமமாகப் போட்டியிட வேண்டுமென்ற நிபந்தனை; (இ) முகாமையின் உயர்மட்டத்தினைத் 'தொழிலுக்குரிய தாக்குதல்'; (ஈ) சிக்கனமும் திறமையும் அற்ற செயல் திட்டங்களை தனியார்மயப் படுத்துவது அல்லது முற்றாக மூடிவிடுவது.

சில தொழில்களை முன்போல பொதுத் துறைக்குரியதாக மாத்திரம் ஒதுக்கி வைக்கும் முறை கைவிடப்பட்டது. ஆகவே இப்போது தனியார்துறை ஈடுபடக்கூடிய கைத்தொழில்களுக்கு எதுவித கட்டுப்பாடும் இருக்கவில்லை.

## (vi) ஏற்றுமதி மேம்பாடு

அந்நிய முதலீடுகளை வரவழைப்பதுடன் இணைந்திருந்த ஓர் அம்சம் ஏற்றுமதியை மேம்படுத்தும் நோக்கத்துடன் உற்பத்தியிலீடுபடுவதாகும். அதற்குரிய வலுவான நிறுவன ரீதியான பின்னணியை வழங்கும் வகையில் 1979ஆம் ஆண்டு ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் இலக்கம் 40 ஆக்கப்பட்டது. அதன் கீழ் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்ற அமைப்பு 1980ல் ஏற்படுத்தப்பட்டது. அதன் முக்கிய கடமைகளாக ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து அவற்றை அமுலாக்குவதும் ஏற்றுமதி அபிவிருத்தி மேம்பாட்டிற்குப் பொறுப்புடைய ஏனைய அரசாங்க அமைப்புக்களின் கடமைகளை ஒருங்கிணைப்பதும் குறிக்கப்பட்டன. அத்துடன் ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் ஆதரவின்கீழ்க்குறிப்பான ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கையொன்றும் முன்வைக்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக நேரடிக் காசு உதவி வழங்கப்பட்டதுடன் இறக்குமதித் தீர்வையிற் கழிவும் கொடுக்கப்பட்டது. மேலும் உற்பத்தி அபிவிருத்தி, சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கருத்திற் கொண்டு வேறுபல நடவடிக்கைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை இலங்கை மத்திய வங்கியுடனும் ஏனைய சுதேசிய வணிக வங்கிகளுடனும் இணைந்து நிறுவனங்களின் ஏற்றுமதி நிலைச் சக்திக்கேற்ப நிலையான மூலதனம், நடைமுறை மூலதனம் என்பவற்றை வழங்கவும் முன் வந்தது. அதேநேரத்தில் அரசாங்கம் 1977ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியான படிமுறைகளில் ஏற்றுமதிக்கென இடம் பெறும் உற்பத்திகளுக்குரிய இறைத் தூண்டுதல்களை ஒழுங்குபடுத்தவும் சீர்திருத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வகையில் முற்றான வரி விடுதலை என்பது ஏற்றுமதி நோக்குடைய தொழில்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது.

மேற்கூறியவற்றை விட ஊதிய நிரம்பலைப் பொறுத்தவரை ஊதியச் சந்தையிலான கட்டுப்பாடுகளை அகற்றி அதனைச் சுமூக நிலைப்படுத்துவதும் அரசாங்கத்தின் நோக்கமாயிருந்தது. அதன் ஒரு பகுதியாக முறைசாரா வழிகளைக்கையாண்டு தொழிற் சங்கங்களின் தீவிரத் தன்மையை அழிக்க முயற்சிக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு வேலைநிறுத்தத்தின்போது ஏராளமான தொழிலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டமை இத்தகைய முயற்சியின் ஒரு வெளிப்பாடாகவே கொள்ளப்பட வேண்டும். அதன் மூலம் மெய் வேதன வளர்ச்சியையும் கட்டுப்படுத்தக் கூடியதாயிருந்தது.

ஆகவே மேற்கூறிய நடவடிக்கைகள் இதுவரை நிலவியிருந்த கட்டுப்பாட்டுக் கொள்கை வழிப்பட்ட கைத்தொழில்மயவாக்க முயற்சிகளின்றும் விடுபட்டு வேறொரு பாதையிற் கைத்தொழில் அபிவிருத்தியைத் திருப்பிவிடுமென எதிர்பார்க்கப்பட்டது.

## கைத்தொழில் வளர்ச்சிப் போக்கு

திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சிப் போக்கு அதற்கு முன்னிருந்ததைவிடக் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை வெளிப்படுத்துவதாயிருந்தது. 1970—77 காலப்பகுதியில் தேசியக் கணக்கு மதிப்பீடுகளைக் கொண்டு பார்க்குமிடத்துக் கைத்தொழில் உற்பத்தியானது வருடாந்தம் 4 சத வீத சராசரி வளர்ச்சி விகிதத்தைக் காட்டியது ஆனால் 1978—85 காலப்பகுதியில் அது 10 சத வீதமாக உயர்வடைந்திருந்தது. ஒவ்வொரு வருடத்திற்குமான வளர்ச்சி விகிதமும் 1970—77 சராசரியைவிடக் கணிசமானளவு உயர்வாகவே இருந்தது. இனக்கலவரங்களாற் பாதிக்கப்பட்ட 1983 மாத்திரம் அதற்கொருபுறநடையாயிருந்தது. அதே நேரத்தில் கைத்தொழிற்களின் இயலளவுப் பயன்பாடு 1970—77காலப்பகுதியில் 53சத வீதமாயிருந்து1978—82க்குமிடையில்73சத வீதமாகவும் 1982—85 க்குமிடையில் 75 சத வீதமாகவும் அதிகரித்தது. மறு புறம், கைத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை பலவேறு வகைத் தொழில்களிலும் 1977 வரை 70 ஆக மாத்திரமே காணப்பட்டது. ஆனால் 1985 இன் முடிவில் உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் ஒன்று சேர 209 நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருந்தன.

மேற்கூறிய சாதகமான குறிகாட்டிகளின் மத்தியிலும் 1977க்குப் பிந்திய கைத்தொழில் வளர்ச்சியும், வருடாந்த ரீதியாகப் பார்க்குமிடத்து, 1977க்கு முந்திய காலகட்டம் போன்றே ஒரு சிதறலான தன்மையைப் புலப்படுத்துவதாயிருந்தது. சிறந்த பொருளாதாரக் கொள்கை அமுலுக்கு வந்த அடுத்த வருடத்திற் (1978) கைத்தொழில் வெளியீடு 10.8 சத வீதத்தினால் அதிகரித்தது. எனினும் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இது குறைவடைந்தது மாத்திரமன்றி ஒரு நிலையான பாதையில் முன்னேறவும் தவறிவிட்டது. அதனால் தாராண்மைக்கொள்கை அமுலாக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சி விகித அதிகரிப்பு, உண்மையில், பொருளாதாரத்தின் நீண்டகால வளர்ச்சியைப் புலப்படுத்துகிறதென்பதை அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது. அதற்குப் பதிலாகக் கொள்கை மாற்றத்தால் உண்டான பொருளாதார நன்மைகளை அனுபவிப்பதற்கான ஒரு குறுகிய கால அசைவென்றே அதனைப் பெருமளவுக்கு வர்ணிக்க முடியும்.

அதே போல மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும் கைத்தொழில் வளர்ச்சியின் சராசரி விகிதாசாரத்தைப் பார்க்குமிடத்து 1978—82 காலப்பகுதியில் அது 1.04 ஆகக் காணப்படுகின்றது. அது ஒன்றுக்கு மிக அண்மித்ததொன்றாகக் காணப்படுவதிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்குச் சார்பான 'தனித்துவமான' வளர்ச்சிப் படிவமொன்றையும் கைத்தொழில் துறை வெளிப்படுத்தவில்லையென்பதை அறிய முடிகின்றது. 1978—83 காலகட்டத்தின் 6 வருடங்களில் இரு வருடங்களில் (1978, 1982) மாத்திரமே இந்த விகிதாசாரம் ஒன்றைவிடக் கணிசமானளவு உயர்ந்து முறையே 1.31, 1.80 எனக் காணப்பட்டது. 1970—77 காலப்பகுதியிற் கூட அது 1.21 ஆக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார வளர்ச்சிப் போக்கின் ஒரு பண்பு யாதெனில் வளர்ச்சியின் பெரும் பகுதி 'வர்த்தகத்திற்குட்படாத' நிர்மாணம், போக்குவரத்து, பொதுசன சேவைகள், வர்த்தகம் போன்ற துறைகளில் இடம் பெற்றிருந்தமையாகும். 1977ஆம் ஆண்டு இத்தகைய துறைகளின் ஒருமித்த பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 55 சத வீதமாயிருந்தது. ஆனால் 1977—83க்குமிடைப்பட்ட காலகட்டத்தில் அதிகரித்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அவற்றின் பங்கு 70 சத வீதமாகக் காணப்பட்டது. மறுபுறம், நேரடி உற்பத்தித் துறைகளாகிய (வர்த்தகத்திற்குரிய துறைகள்) விவசாயம், சுரங்கத் தொழில், உற்பத்திக் கைத்தொழில் என்பவை 1977இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 45சத வீதத்தைப் பெற்றிருந்தன. எனினும்1977-83 காலப்பகுதியில் அதிகரித்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அவற்றின் பங்கு 31 சத வீதமாக மாத்திரமே இருந்தது. இம் மாற்றங்களின் விளைவாக 1983 அளவில் 'வர்த்தகத்திற்குட்படாத' துறைகளின் ஒருமித்த பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 60சத வீதமாக அதிகரிக்க வர்த்தகத்திற்குரிய துறைகளின் பங்கு 40 சத வீதமாகக் குறைவடைந்திருந்தது. நேரடி உற்பத்தித் துறைகளின் சாதனையை நோக்குமிடத்து விவசாயம், சுரங்கத் தொழில் என்பவற்றைவிடக் கைத்தொழில் சிறப்பாகச் செய்திருந்த போதும் 'வர்த்தகத்திற்குட்படாத' துறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து அதன் நிலை எந்த வகையிலும் திருப்தி தருவதாயிருக்கவில்லை எனவே ஏற்றுமதிக்கெனப் பதப்படுத்தாத தொழிற்சாலைக் கைத்தொழில்களின் பங்கு மாற்றமடையாது தொடர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி 10 சத வீதமாயிருப்பதைக் காணலாம். ஏற்றுமதிக்கான பதப்படுத்தல், சிறு கைத்தொழில்கள் என்பவற்றைச் சேர்க்கும் போதே அது சராசரி 15 சத வீதம் வரை உயர்வடைய முற்படுகின்றது.

## கைத்தொழிற் சாதனை

இலங்கையின் கைத்தொழிற் சாதனை, அத்துறை உற்பத்திக்கேற்ப ஒன்பது பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு மொத்த உற்பத்திப் பெறுமதி, கூட்டிய பெறுமதி, இயலளவுப் பயன்பாடு போன்ற பல்வேறு தலைப்புக்களின் கீழ் மத்திய வங்கியினால் வெளியிடப்படுவது வழக்கமாயிருந்து வருகின்றது. 1977க்குப் பிந்திய திறந்த பொருளாதாரக் கொள்கை கைத்தொழிற் துறையின் சாதனை மீது எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதென்பதை அட்டவணையில் ஒப்பிட்டு வடிவிற் காட்டுகின்றது. அதன் தனித்துவ அம்சமாக துணி, ஆடை உற்பத்திப் பிரிவின் வளர்ச்சி காணப்படுகின்றது. 1970—1977 காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து இதுவே பட்டியற்படுத்தப்பட்ட ஒன்பது பிரிவுகளில் ஆகக் கூடிய வளர்ச்சியைப்புலப் படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. மொத்தக் கைத்தொழில் வெளியீட்டில் அதன் பங்கு 1977 ல் 7 சத வீதமாயிருந்து 1982 ஆம் ஆண்டு 15 சத வீதமாக அதாவது இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்திருந்தது. அதே நேரத்தில் மொத்த வெளியீட்டு அதிகரிப்பில் அதன் பங்கு 1977—1982 க்கு மிடையில் 37 சத வீதமாகக் காணப்பட்டது.

எனினும் இந்தப் பிரிவு வெளிப்படுத்தும் தனித்துவ முன்னேற்றத்தின் மத்தியிலும் அதிலான ஒரு முரண்பாடும் குறிப்பாக எடுத்துக்காட்டப்பட வேண்டும். இறக்குமதித் தாராண்மை மூலம் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களுள் துணி உற்பத்தி முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கிற்று. இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார மீளாய்வு அறிக்கைகளின் படி துணி உற்பத்தியில், அதுவும் குறிப்பாக நூல் நூற்றல், நெசவு என்பவற்றில் ஈடுபட்ட 1300 நிறுவனங்கள் 1978 ஆம் ஆண்டு காணப்பட்டன. ஆனால் 1980 ல் அவற்றில் 200 நிறுவனங்கள் தொடர்ந்தும் செயற்படாமை கண்டு பிடிக்கப்பட்டது. அதே போல நெசவுக் கைத்தொழில் அமைச்சின் மதிப்பீட்டுப்படி 1976 அளவில் நிலவியிருந்த ஏறக்குறைய 111,000 கைத்தறிகளில், 1980 ஆம் ஆண்டளவில் 30,000 தறிகள் வரைசெயயிழந்து போயின.

நெசவுக் கைத்தொழிலைப் பொறுத்தவரை மாத்திரமன்றி 'உற்பத்திக் கைத்

## இலங்கையின் கைத்தொழில் சாதனை 1970 - 1982

| கைத்தொழில் வகை | மொத்தக் கைத்தொழில் வெளியீட்டில் சதவீதப் பங்கு | | | சராசரி வருடாந்த வளர்ச்சி | | வளர்ச்சியிலான பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1977 | 1982 | 1970 — 77 | 1977 — 82 | 1970 — 77 | 1977 — 82 |
| 1. உணவு, குடிபானம், புகையிலை | 26.69 | 26.91 | 23.83 | 7.43 | 3.95 | 27.95 | 15.73 |
| 2. துணி, ஆடைவகை, தோற் கைத்தொழில்கள் | 23.08 | 6.80 | 14.99 | -2.36 | 29.33 | -16.34 | 37.00 |
| 3. மரம், மரப்பொருட்கள் | 0.71 | 1.77 | 1.58 | 24.09 | 7.33 | 3.36 | 0.75 |
| 4. காகிதம், காகிதப்பொருட்கள் | 3.22 | 3.78 | 3.01 | 12.54 | 3.75 | 4.69 | 0.93 |
| 5. இரசாயன, பெற்றோலிய, றப்பர், பிளாஸ்ரிக்பொருட்கள் | 22.33 | 45.91 | 45.82 | 28.71 | 3.68 | 80.95 | 45.49 |
| அவற்றுள் பெற்றோலியப் பொருட்கள் | (7.64) | (32.52) | (28.03) | (25.00) | (4.33) | (69.09) | (15.87) |
| ஏனையவை | (14.69) | (13.41) | (17.79) | (12.25) | (13.49) | (11.86) | (29.61) |
| 6. உலோகமல்லாத கனிப் பொருட்கள் | 7.56 | 3.91 | 3.69 | 5.37 | 3.22 | -1.21 | 3.09 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் | 2.03 | 2.28 | 1.37 | 15.55 | 2.57 | 2.70 | -1.11 |
| 8. கட்டுமான உலோகப் பொருட்கள், இயந்திர போக்குவரத்து உபகரணங்கள் | 12.64 | 8.25 | 5.53 | 3.28 | 0.45 | -0.56 | -1.80 |
| 9. ஏனையவற்றின் கீழ்க் குறிக்கப்படாத கைத் தொழில் உற்பத்திப் பொருட்கள் | 1.72 | 0.38 | 0.23 | 2.36 | -1.01 | -1.54 | -0.08 |
| 10. கூட்டிய மொத்தக் கைத் தொழில் உற்பத்தி வெளியீட்டுப் பெறுமதி | 100 | 100 | 100 | 8.64 | 5.85 | 100 | 100 |
| (ரூபா மிலலியன்) | 3544 | 6084 | 8341 | — | — | 2472 | 2262 |

ஆதாரம்: மத்திய வங்கி, பெருளாதார மீளாய்வு அறிக்கைகள்

தொழில், என்ற வரையறையின் கீழ் உள்ளடங்காத அங்கீகரிக்கப்படாத பல சிறிய ஏகத்தொழில்களுக்கும் இது பொருந்தும். தனியார் முயற்சியைப் பொறுத்த வரை மாத்திரமன்றி அரசாங்க உடைமையாயிருந்த துணி நெசவு ஆலைகளைக் கூடச் சில பல முயற்சிகளின் மத்தியிலும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் வெற்றிகரமாக இயக்க முடியவில்லை. அவற்றின் உற்பத்திப் பெறுமதி 1970 மாறா விலைகளின் படி 1978 ல் ரூபா 25.9 மில்லியன் அளவிலிருந்து 1983 ல் ரூபா 9.9 மில்லியனுகக் குறைவடைந்திருந்தது. ஆகவே இத் தகவல்களிலிருந்து பெறப்படும் உண்மை யாதெனில் 1977 க்குப் பிந்திய திறந்த பொருளாதாரக் கொள்கை துணி, ஆடை உற்பத்திப் பிரிவைப் பொறுத்தவரை பாரிய முன்னேற்றத்தைத் தூண்டி விட்டிருந்தாலும் கூட ஆடைகள் தயாரிப்பே அம் முன்னேற்றத்திற்கு முற்றிலும் பொறுப்பாயிருந்தது. என்பதாகும். ஆடைகளுக்கான ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புகள் அதற்குரிய அடிப்படையை வழங்கியிருந்தன.

துணி, ஆடை உற்பத்திப் பிரிவுக்கு அடுத்ததாகக் கணிசமான வளர்ச்சியை வெளிப்படுத்தும் பிரிவாக விளங்குவது இரசாயனம், பெற்றோலியம் மற்றும் றப்பர் பிளாஸ்ரிக் உற்பத்திகளாகும். பெற்றோலிய உற்பத்தி அரச உடைமையாகிய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தனியுரிமையாயிருக்க, இரசாயன உற்பத்திகள் பலவும் பல்தேசிய நிறுவனங்களின் துணை நிறுவனங்களின் ஆக்கப்படுவனவாயுள்ளன. இவ்விரு உப பிரிவுகளிலும் முன்னைய ஏற்கெனவே ஏறக்குறைய பூரண இயலளவு மட்டத்தை அடைந்திருப்பதால் வளர்ச்சி இயக்க விசையின் பெரும் பகுதி பின்னையதிலிருந்தே ஊற்றெடுக்கின்றது. மறுபுறம் றப்பர், பிளாஸ்ரிக் பொருட்களின் பங்கு இன்னமும் மிகக் குறைவாகவே இப்பிரிவு வெளியீட்டின் ஏறக்குறைய 5 சத வீதமாக உள்ளது.

கைத்தொழில் உற்பத்தியின் இந்த இரு பிரிவுகளையும் தவிர மிகுதி ஏழு பிரிவுகளின் வளர்ச்சியை நோக்கின் அது மிகமட்டுப்படுத்தப்பட்டதொன்றென்றே குறிப்பிடப்பட வேண்டும். அவற்றின் சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதம் மொத்தக் கைத்தொழில் வெளியீட்டின் சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதமாகிய 5.85 சத வீதத்தை விடக் குறைந்த தொன்றாகவே காணப்படுகின்றது. 1977 — 1984 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளியீட்டு அதிகரிப்புக்கு இந்த ஒவ்வொரு துறையினதும் வீதாசாரப் பங்களிப்பானது தொடக்க ஆண்டாகிய 1977 ல் மொத்த வெளியீட்டிற்கான வீதாசாரப் பங்களிப்பு நிலைமையை விட மிகவும் குறைந்ததொன்றேயாகும். அவற்றுள் சிலவற்றைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் இறக்குமதிக் கொள்கை தவறான ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதும் கவனிக்கத்தக்கது. உதாரணமாக, அட்டவணையில் 8 ஆவது பிரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டுமான உலோகப் பொருட்கள், இயந்திர போக்குவரத்து உபகரணங்கள் என்பவையும் பெரும்பாலும் உற்பத்தி செய்யப்பட்ட நுகர் பொருட்களை உள்ளடக்கும் 9 வது பிரிவாகிய ஏனைய உற்பத்திகளும் 1977 க்கு முந்திய இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையின் கீழ் முன்னுரிமை வழங்கப்பட்டு நன்கு வளர்ச்சி பெற்றிருந்தன. ஆனல் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழான கட்டற்ற இறக்குமதி அவற்றின் நலிவுக்குக் காரணமாக அமைந்துள்ளதெனலாம்.

மறுபுறம், மரம், மரப் பொருட்கள் (3) காகிதம், காகிதப் பொருட்கள் (4) உலோகமல்லாத கனிப் பொருட்கள் (6) அடிப்படை உலோகப் பொருட்கள் (7), என்பவற்றில் தனியார் முயற்சியை விடப் பொதுத்துறை முயற்சியே அகதிகளவான முக்கியத்துவம் பெற்றுள்ளது இவையும், பொதுத்துறை முயற்சிகளின் உள்ளார்ந்த குறைபாடுகளாக வளர்ந்து விட்டிருக்கும் ஒழுங்கற்ற திட்டங்கள், திறமையற்ற முகாமை போன்றவற்றின் காரணமாக இறக்குமதிப் பொருட்களின் போட்டியைத் தகுந்த வகையில் எதிர்கொள்ள முடியவில்லை. இப்பிரிவுகளைச் சார்ந்த பொருட்களுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த தீர்வைப் பாதுகாப்புக் கூட இது விடயத்திற் பலனளிக்கவில்லை. அதே போல இவற்றின் உற்பத்தி அலகுகளாகிய கூட்டுத்தாப

னங்களின் முகாமையைச்சீர்செய்துஅவற்றை லாபகர முயற்சிகளாக்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன என லாம்.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழான கைத்தொழில் அபிவிருத்தியில் தனியார் முயற்சிக்கு ஒரு முக்கிய பங்கு வழங்கப்பட்டு அதனை ஊக்குவிப்பதற்கான பலவேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட போதும், பொதுத் துறை முயற்சியின் முக்கியத்துவம் அதிகளவு குறைவடையாமை ஒரு முக்கிய பண்பாகத் திகழ்கின்றது. 1983 ஆம் ஆண்டு கூட கைத்தொழில் துறையின் 63 சதவீதம் வரை பொது முயற்சித் தொழில்களாகவே விளங்கியிருந்தது. 1977 – 1984 காலப்பகுதியில் மொத்த வெளியீட்டு அதிகரிப்பின் 66 சத வீதம் அரச கைத்தொழில்களிலிருந்தே ஊற்றெடுத்திருந்தது. ஆகவே இதிலிருந்து வெளிப்படும் ஓர் உண்மை யாதெனில் பொதுத் துறை முயற்சிகளின் பங்களிப்பு இந்தளவுக்கு இல்லாவிடில் 1977 க்குப் பிந்திய இலங்கையின் கைத்தொழிற் சாதனை எவ்வகையிலும் குறிப்பிடும்படி அமைந்திருக்க மாட்டாதென்பதேயாகும். அது உண்மையில், எதிர்க்கணிய வளர்ச்சியையே காட்டியிருக்கும் மறுபுறம், பொதுத்துறை உற்பத்திகளின் அளவு ரீதியான முக்கியத்துவத்தின் மத்தியிலும் அவை சரிவர இயங்காமையே, முழுமையாக நோக்குமிடத்து, நாட்டின் கைத்தொழில் துறை 1977 க்குப் பின்பு கூட மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றத்தை வெளிப்படுத்தியமைக்குப் பொறுப்பாயிற்றெனலாம்.

[அடுத்த இதழில் முடிவுறும்]

## இலங்கையின் வெளிநாட்டுக் கடன்கள்

| ஆண்டு | கடன் அளவு (மில். ரூபா) | படுகடன் சேவை விகிதம் |
|---|---|---|
| 1972 | 3249 | 21.8 |
| 1973 | 3725 | 23.0 |
| 1974 | 4446 | 17.8 |
| 1975 | 5625 | 22.9 |
| 1976 | 6826 | 20.1 |
| 1977 | 13321 | 16.0 |
| 1978 | 17276 | 15.0 |
| 1979 | 19279 | 13.0 |
| 1980 | 30001 | 12.4 |
| 1981 | 44601 | 16.8 |
| 1982 | 56142 | 18.6 |
| 1983 | 72179 | 21.6 |
| 1984 | 78413 | 17.5 |
| 1985 | 94303 | 21.0 |
| 1986 | 113308 | 26.3 |

வெளிநாட்டுப் படுகடன் அளவு 1977ன் முடிவில் மொத்த தேசிய வருமானத்தின் சதவீதமாக நோக்குகையில் 39 சதவீதமாகவும் 1986ன் முடிவில் 70 சதவீதமாகவும் அமைந்திருந்தது.

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

# பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்
# (REGIONAL RURAL DEVELOPMENT BANKS)

சி. தண்டாயுதபாணி
B. A. Hons. (cey), Dip. in Edu.

கிராமிய அபிவிருத்திக்குப் பங்களிக்கும் ஒரு நிறுவனமாக பிரதேச கிராமிய அபி விருத்தி வங்கிகளை, மத்தியவங்கி 1985இல் முதன் முதலாக நிறுவியது. 1985ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிச்சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் நாணயச்சபை இவ்வங்கிகளை உருவாக்கியது ஒரு மாவட்டத்திற்கு ஒரு வங்கி என்ற வகையில் இப்பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் உருவாக்கப்படுகின்றன.

## பின்னணி

கிராமியத் துறையில் விவசாய உற்பத்திப் பெருகத்திற்கும், உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்கும் நிறுவன ரீதியான கடன்கள் மிக முக்கியமானதொன்றாக வேண்டப்படுகின்றன. புதிய விவசாயத் தொழில் நுட்பங்களை பிரயோகிப்பதற்கும், செறிவான பயிர்செய்கை முறையை மேற்கொள்வதற்கும் இத்தகைய நிறுவன ரீதியான கடன்கள் கிராமியத்துறைக்கு அத்தியாவசியமானதாகும். ஆனால் இலங்கையில் வணிகவங்கிகளால் கிராமிய விவசாயத்துறைக்கு வழங்கப்படும் கடன்கள் உண்மையில் அத்துறைக்குத் தேவைப்படும். கடன்களை விடக்குறைவாகவே உள்ளன. தேவைப்படுகின்ற அளவுக்கு கடன்கள் கிடைக்காததனால் கிராமிய விவசாயத்துறையில் காணப்படும் வளங்கள் பூரணமான பயன்பாட்டிற்கு உள்ளாக்கப்படுவதில்லை. விவசாயத் துறையில் வேலை வாய்ப்புக்களையும் அதிகமாக உருவாக்க முடிவதில்லை. நிறுவன ரீதியான கடன்களை அதிகமாகப் பெற்றுக் கொள்ள முடியாமையினால் கிராமியத்துறை நிறுவன ரீதியற்ற கடன்களை நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் இத்தகைய நிறுவன ரீதியற்ற கடன்களையும் உயர்ந்த வட்டி வீதங்களிலேயே பெறவேண்டிய நிர்ப்பந்தத்தை கிராமிய விவசாயி எதிர் நோக்க வேண்டியவனாகின்றான்.

கிராமியத் துறைக்குத் தேவைப்படும் கடன்களுக்கும், கிடைக்கக் கூடிய கடன்களுக்குமிடையேயான "கடன் இடைவெளி" அகன்று கொண்டு போவதை உணர்ந்த மத்திய வங்கி கிராமியத் துறையிலே பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை உருவாக்கத் தீர்மானித்தது. கிராமிய வருமான நிலைமைகளை அதிகரிப்பதற்கும், கிராமிய மக்களின் பொருளாதார நலன்களைப் பேணுவதற்குமாக இப்பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் அமைப்பு, செயற்பாடு என்பன திட்டமிடப்பட்டன.

முதன் முதலாக 1985 இல் மாத்தறை, களுத்துறை, குருநாகல், அநுராத

புரம் ஆகிய மாவட்டங்களில் நான்கு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் உருவாக்கப்பட்டன. ஐந்தாவது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1986 டிசம்பர் மாதத்தில் திறக்கப்பட்டது. இவற்றின் வெற்றிகரமான செயற்பாடுகளைத் தொடர்ந்து ஆறுவது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி 1987 பெப்ரவரி மாதத்தில் கேகாலை மாவட்டத்தில் ஹெட்டிமுல்ல என்ற இடத்தில் திறந்து வைக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டில் மத்தியவங்கி மேலும் நான்கு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை காலி, பதுளை, புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களில் திறந்து வைக்க நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தது.

## கிளை அமைப்பு

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு வங்கி என்ற அடிப்படையில் உருவாக்கப்படும் இப்பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது மாவட்ட எல்லைக்குள் பல்வேறு கிளைகளை அமைக்கலாம். ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியும் ஆரம்பத்தில், ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரு கிளையையாவது திறக்க வேண்டும் என்பதனைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. 1985 ஆம் ஆண்டின் இறுதியில் 17 கிளைகளையும், 1986 ஆம் ஆண்டின் இறுதியில் 32 கிளைகளையும் இப்பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் கொண்டிருந்தன.

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | தலைமை அலுவலகம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | 1986 இறுதியில் மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 1985 | 1986 | |
| களுத்துறை | புளத்சிங்கள | 04 | 03 | 07 |
| மாத்தறை | யட்டியன | 05 | 02 | 07 |
| குருநாகல் | குளியாப்பிட்டி | 06 | 04 | 10 |
| அநுராதபுரம் | மிகிந்தலை | 02 | 04 | 06 |
| அம்பாந்தோட்டை | அம்பலாந்தோட்டை | — | 02 | 02 |
| மொத்தம் | | 17 | 15 | 32 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

## முகாமையும் நிதியும்

ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினதும்முகாமை ஐந்து பேரைக் கொண்ட ஒரு பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பணிப்பாளர்களில் மூவர் நிதியமைச்சரின் இசைவுடன் மத்தியவங்கியின் நாணயச் சபையினால் நியமிக்கப்படுபவர். மற்றைய இருவர் வங்கியின் பொதுச் சபையினால் தெரிவு செய்யப்படுபவர். நிதியமைச்சரின் இசைவுடன் பணிப்பாளர்களிடையேயிருந்து தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

ஒவ்வொரு பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கியினதும் ஒப்புதலளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ஒவ்வொன்றும் ரூபா 100 இனைக் கொண்ட 500,000 பங்குகளைக் கொண்ட ரூபா 500 இலட்சம் ஆகும். வழங்கப்பட்ட பங்கு மூலதனம் 100 இலட்சம் ரூபாவாகும். இது முழுமையாக மத்திய வங்கியினாலேயே உதவப்பட்டது. வங்கி உருவாக்கப்பட்ட இரு ஆண்டுகளின் பின், வழங்கப்பட்ட மூலதனத்தில் 49 வீதம் வரையிலானபங்குகளை மத்தியவங்கி நான்கு உள்நாட்டு வர்த்தக வங்கிகளுக்கும் கூட்டுறவு நிலையங்களுக்கும் வழங்கலாம்.

## தொழிற்பாடு

இவ்வங்கிகள் வர்த்தகவங்கிகளாகவும், அபிவிருத்தி வங்கிகளாகவும் தொழிலாற்றுகின்றன. ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியும் ஒரு மாவட்டத்தில் தனி வங்கியாகவும் தொழிற்பாடுகள், முகாமைத்துவத்தைப் பொறுத்தவரை சுயநிர்ணயம் உடையனவாகவும் இருக்கும் ஒரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி தனது பிரதேசத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கத்தக்க வகையில உள்ளூர்ப் பண்புகளைக் கொண்டவையாக விளங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரம் தவிர்ந்த வங்கித்தொழில் அலுவல்களை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. கிராமிய மக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டவும், வேளாண்மை, குடிசைக் கைத்தொழில், சிற்றளவுக் கைத்தொழில், வர்த்தகம் போன்றவற்றிற்காக தனிப்பட்டவர்களுக்கோ குழுக்களுக்கோ குறுகிய, நடுத்தர, நீண்டகால கடன்களை வழங்கவும் இவை அதிகாரம் கொண்டுள்ளன.

வேளாண்மை,குடிசைக் கைத்தொழில், சிற்றளவுக் கைத்தொழில், மீன்பிடித் தொழில், வர்த்தகம் மற்றும் கிராமியப் பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை விருத்தி செய்வதன் வாயிலாக கிராமியப் பொருளாதாரத்தை வளர்ப்பதே பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் குறிக்கோளாகும்.

அரிசி குற்றுதல், தையல்தொழில், ஓடு, கல் தொடர்பான தொழில், தச்சுத் தளபாடத்தொழில், பீடிக் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில் போன்ற கிராமிய மட்ட சிற்றளவுக் கைத்தொழில்களை மேற்கொள்வோர் இப்போது பி. கி. அ. வங்கிகளின் நிதியுதவியைப் பெறுவதனல் தமது உற்பத்தி நடவடிக்கைகளை விரிவாக்கக்கூடிய வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். இதனல் கிராமிய மக்களின் வருமான மட்டம் உயர்வடைய வழியேற்படுகின்றது.

இவ்வங்கிகள் உருவாக்கப்பட்ட கடந்த மூன்று ஆண்டுகளிலும் கிராமிய மக்களில் பெரும்பான்மையோர் பயனடையக் கூடிய வகையில் இவை பணியாற்றியுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது. தமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள கிராமிய மக்களின் அபிவிருத்திக்காக பல்வேறுபட்ட நடவடிக்கைகளை இவ்வங்கிகள் மேற்கொண்டுள்ளன.

## சேமிப்புக்கள்:-

கிராமிய சேமிப்புக்களை சேமிப்பு, நிலையான வைப்புக்களின் வடிவத்தில் இவ்வங்கிகள் பெருமளவு சேகரித்துள்ளன. இவ்வங்கிகள் பெருமளவுக்கு அப்பகுதி மக்களிடமிருந்து சிறு தொகையிலான வைப்புக்களை பெருமளவில் சேகரிப்பதற்கு முயற்சி செய்தது.

1986 ஆம் ஆண்டின் இறுதியில் களுத்துறை, மாத்தறை, குருநாகல், அநுராதபுரம், அம்பாந்தோட்டை ஆகிய ஐந்து பி.கி.அ. வங்கிகளாலும் சேகரிக்கப்பட்ட வைப்புக்களின் விபரம்:-

| வைப்பு | வைப்புக்களின் எண்ணிக்கை | வைப்புக்களின் மொத்தத் தொகை [ரூபா] |
|---|---|---|
| சேமிப்பு வைப்பு | 40642 | 15968000 |
| நிலையான வைப்பு | 256 | 4654000 |
| மொத்த வைப்புக்கள் | 40898 | 20622000 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

இந்த ஐந்து பி.கி.அ. வங்கிகளும் 1986 இன் இறுதியில் ரூபா. 206 இலட்சம் பெறுமதியான வைப்புக்களைக் கொண்ட 40898 கணக்குகளைத் திறந்தன. இவற்றில் 99 வீதமான கணக்குகள் சேமிப்புக் கணக்குகளாகும்.

ஒரு சேமிப்புக் கணக்கின் சராசரித் தொகை ரூபா. 393 ஆக 1986 இன் இறுதியில் காணப்பட்டது. இவ் வங்கிகள் மிகச் சிற்றளவினதான சேமிப்புக்களைத் திரட்டுவதை இது காட்டுகின்றது. 1986 இன் இறுதியில் ஒரு நிலையான வைப்பின் சராசரித் தொகை ரூபா. 18179 ஆக விளங்கியது.

சில பி.கி. அ. வங்கிகள் தமது வாடிக்கையாளருக்கு முழுமையான வங்கிப் பணிகளை ஆற்ற வேண்டுமென்பதற்காக கேள்வி வைப்புக்களையும் ஏற்றுக் கொண்டன.

## கடன்கள்

இவ்வங்கிகள் 1985 இல் 48 இலட்சம் ரூபாகொண்ட 1104 கடன்களையும், 1986 இல் 470 இலட்சம் ரூபா கொண்ட 7273 கடன்களையும் வழங்கியுள்ளன. 1986 இல் வழங்கப்பட்ட கடன்களின் நோக்க அடிப்படையிலான ஒரு விபரம் பின்வருமாறு:-

| நோக்கம் | தொகை [ரூபா] ('000) | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| வேளாண்மை | 21321 | 3418 | 45 |
| கால்நடை | 4536 | 593 | 10 |
| சிறு கைத்தொழில்கள் | 7180 | 1328 | 15 |
| வியாபாரமும் வர்த்தகமும் | 12615 | 1424 | 27 |
| ஏனையவை | 1362 | 510 | 3 |
| மொத்தம் | 47014 | 7273 | 100 |

மூலம: மத்திய வங்கி ஆண்டறிக்கை

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது குறிக்கோள்களைப் பேணும் பொருட்டு தமது தொழிற்பாட்டில் சில புதுவித வங்கித்தொழில் முறைகளைக் கையாண்டன. வைப்புக்களைத் திரட்டுவதற்காக இவ் வங்கியின் ஒவ்வொரு கிளைகளும் அவற்றின் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் கூட்டங்களை ஒழுங்கு செய்தன. இக் கூட்டங்களிலே கிளை முகாமையாளரும், ஏனைய உத்தியோகத்தரும் வங்கியின் குறிக்கோள்களையும், கிராமிய பொருளாதாரத்தில் அவற்றின் பங்கினையும் விளக்கினர். அக் கூட்டங்களிலேயே வைப்புக்கள் சேகரிக்கப்பட்டதுடன் அவற்றுக்கான புத்தகங்களை அவர்களின் வீடுகளில் பின்னர் வழங்குவதற்கும் வங்கி ஏற்பாடுகளை மேற்கொண்டது. வங்கிகள் தமது பணிகளை ஒழுங்காக மேற்கொள்ளாத இடங்களில் உள்ள பொது மக்களுக்கு நடமாடும் வங்கித் தொழில் பணிகளை வழங்கும் வசதிகளையும் சில பி. கி. அ. வங்கிகள் நடைமுறைப்படுத்தின. கடன்களுக்கான அனுமதிக்கு இலகுவான நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. அதுமட்டுமின்றி சிறிய கடன்களைப் பொறுத்தவரை இவ் வங்கிகள் பிணைகளை வற்புறுத்தாமலேயே கடன்களை வழங்கின.

## முடிவுரை

இலங்கையில் ஏறத்தாழ 80சதவீதமான சனத்தொகையினர் கிராமப் புறங்களிலேயே வாழ்கின்றனர். அத்துடன் நாலில் மூன்று பங்கு சனத்தொகையினர் விவசாயத்துடனும் அதனோடு தொடர்புடைய உற்பத்தி முயற்சிகளிலுமே ஈடுபட்டுள்ளனர். எனவே இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி கிராமிய அபிவிருத்தியில் பொதுவாகவும், விவசாய பொருளாதார அபிவிருத்தியில் சிறப்பாகவும் தங்கியுள்ளதெனலாம்.

இன்றைய கிராமியத் துறையில் காணப்படும் அகன்ற கடன் இடைவெளியை நிரப்புவதற்கு — அதாவது கிராமிய சமூகத்தின் கடன்தேவைகளை ஈடு செய்வதற்கு கிராமியத் துறையில் தனது முற்று முழுதானதும், தொடர்ச்சியானதுமான கவனத்தைச் செலுத்தக்கூடிய ஒரு நிறுவன அமைப்பு முறைமை தேவைப்படுகின்றது. அந்த வகையில் இப்பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் கிராமியத் துறையின் கடன்தேவைகளை நிறைவு செய்து கிராமியப் பொருளாதாரத்தின் உற்பத்தி, உற்பத்தித்திறன், வேலைவாய்ப்பு, வருமான மட்டம் என்பவற்றை விருத்தி செய்து செயற்படக்கூடிய ஒரு நிறுவனமாகத் தென்படுகின்றது.

கிராமங்களில் நிலவுகின்ற இரட்டைப் பிரச்சனைகளான வறுமை, வேலையின்மை ஆகியவற்றைப் போக்கக்கூடிய வகையில் இவ் வங்கிகள் கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நம்பக்கூடியதாகவுள்ளது.

## 1988ன் பாதீடு - பிரதான இலக்குகள்

நிதியமைச்சர் கௌரவ ரொனி டி மெல் அவர்கள் தற்போதைய அரசின் 11வது பாதீட்டைச் சமர்ப்பித்துள்ளார். இதில் 1988 – 1990ஆம் ஆண்டுக்கான மூன்றாண்டு நடுத்தவணைத் திட்டம் ஒன்றை அமுலாக்குவதை மையமாகக் கொண்டுள்ளார். இதனடிப்படையில் பாதீட்டின் பிரதான அம்சங்கள் வருமாறு:

(1) தற்போதைய வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை 3லிருந்து மூன்று வருடங்களில் 5 சத வீதத்துக்கு அதிகரித்தல்.

(2) வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையை மொத்தத் தேசிய உற்பத்தியின் 12 சத வீதத்திலிருந்து மூன்று வருடங்களில் 9 சத வீதத்துக்கு குறைத்தல்.

(3) சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கு பற்றுக்குறை என்பவற்றை 9 சத வீதத்திலிருந்து 6 சத வீதமாக குறைத்தல்.

(4) தற்போதைய பண வீக்கத்தை 8 சத வீதத்திலிருந்து 4 சத வீதத்துக்கு குறைத்தல்

(5) ஏற்றுமதிகளை அதிகரிக்க நிதித் திட்டமிடல் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட புதிய கைத்தொழிற் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

(6) முதலீடு, தொழில் வாய்ப்பு என்பவற்றை அதிகரிக்கக் கூடிய வகையில் வரிச் சீர்திருத்தங்களைக் கையாளுதல்.

(7) முதலீடு, தொழில் வாய்ப்பு என்பவற்றை அதிகரிக்கக் கூடியதாக தீர்வைகளில் சீர்திருத்தங்களைச் செய்தல்.

(8) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் நட்டங்களை இயன்றளவு குறைப்பதன் மூலம் பாதீட்டின் மீதான நிதிச் சுமையைக் குறைத்தல்.

(9) மிக அதிக கடன் சுமையுடனிருக்கும் எயர்லங்கா, கப்பல் கூட்டுத்தாபனம் போன்றவற்றை திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(10) இறக்குமதி அனுமதிப்பத்திர முறையை இயன்றளவுக்கு குறைந்த மட்டத்துக்கு குறைத்தல்.

(11) ஏற்றுமதி ஊக்குவிப்பினை பலப்படுத்தல்

(12) உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் திணைக்களங்கள் மட்டத்திலான நிர்வாக தாமதங்களை (சிவப்பு நாடா முறையை) அகற்றுதல்.

(13) முதலீட்டாளர்க்கான நிதிச் செலவினைக் குறைக்க பாதீட்டின் பற்றுக் குறையையும், பணவீக்கத்தையும் குறைத்தல்.

(14) திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அமைச்சுக்கள் ஆகியவற்றின் கணக்கீட்டு முறைகளை ஒழுங்குபடுத்தி அவற்றின் செலவைக் கட்டுப்படுத்தல்.

(15) நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் திட்டமிட்ட தனியார் மயமாக்கல் செயல்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல்.

# இலங்கையில் பிறப்புகளும் அவற்றிற்கான காரணிகளும்

கார்த்திகேசு குகபாலன்

குடித்தொகை எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதில் இறப்பு, இடப்பெயர்வு ஆகியவற்றுடன் பிறப்புகளும் முக்கியத்துவப்படுகின்றன. பிறப்புகளும் இறப்புகளும் மக்களின் உடற்கூற்றுடன் தொடர்புடைய இயற்கை நிகழ்ச்சியாகும். இறப்புக்கள் குடித்தொகையை குறைக்க உதவுவது போல பிறப்புகள் அதிகரிக்க வழிகோலுகின்றது. இறப்புகள் எல்லோருக்கும் பொதுவானதாகவும் மனிதவாழ்வில் ஏற்படுவதுமாகும். ஆனல் பிறப்புகள் பல்வேறு நிலைகளின் கூட்டுச் செயலாகவிருப்பதைக் காணலாம். நவீன விஞ்ஞான வளர்ச்சியும் சமூகவளர்ச்சியும் இணைந்து தொடர்ச்சியாக நேரடியாகவோ, அன்றில் மறைமுகமாகவோ பிறப்புகள் கட்டுப் படுத்தப்பட்டு வருகின்றன. பொதுவாக இனப்பெருக்கத்தை ஏற்படுத்தக்கூடியமணமான பெண்களுக்கு அவர்களது உடற்கூற்றோடு தொடர்புடைய செயலாக கருத்தரித்தல் நடைபெறுகின்றது பெண்களின் கருத்தரிக்கும் திறனை கருச்செழிப்புத் திறன் என அழைப்பர். பொதுவாக ஒரு பெண் 15 – 49 வயதுள்ள காலப்பகுதிகளில் பெற்றெடுக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு பிறப்புகள் கணிக்கப்படுகின்றன. பிறப்பானது மக்களது பொருளாதார, சமூக, கலாசார, அரசியல் மற்றும் உடற் கூற்றுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றன. அதாவது மணவாழ்வுக்காலம், வயது வகைப்பிரிவுகளிலுள்ள தாய்மார்களின் எண்ணிக்கை, அவர்கள் தம் பொருளாதார நிலை, வாழ்விடம், பழக்க வழக்கங்கள், பண்பாட்டு நிலைகள் ஆகியன பிறப்புகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

குடித்தொகைப் பண்புகளைப் பொறுத்தவரை வளர்முக நாடுகளுக்கு முன்னோடியாக இலங்கை விளங்கினும் பிறப்புக்களைப் பொறுத்தவரை மேலும் தொடர்ச்சியான முன்னேற்றப்பாதையில் செல்ல வேண்டியுள்ளது: இலங்கையில் பிறப்புகள் சம்பந்தமான தரவுகளும், தகவல்களும் வரலாற்று நோக்கில் மதிப்பீடுகளாகவே காணப்படுகின்றன. வரலாற்றில் வரண்ட பிரதேசத்தில் அதிகளவு மக்கள் வாழ்ந்துள்ளதாக பல்வேறு அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனல் காலப் போக்கில் வரண்ட பிரதேச அழிவு இறப்புக்களை அதிகம் ஏற்படுத்தி பிறப்புக்களை கட்டுப்படுத்தியதுடன் இயற்கை அதிகரிப்பையும் குறைத்துள்ளது.

சர்வதேச ரீதியில் மேலை நாடுகளில் 15ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து வாழ் நிலைப்புள்ளி விபரங்கள் சேகரிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் இலங்கை போன்ற வளர்முக

நாடுகளில் காலம் தாழ்த்தியே நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டது. பல வளர்முக நாடுகளில் இன்னும் இத்தகைய தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் முறை விருத்தி பெறவில்லை. இலங்கையில் 1867 ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1897ஆம் ஆண்டிலிருந்தே பதிவு முறை கட்டாயப் படுத்தப்பட்டதுடன் பதிவு செய்யாதவர்கள் குற்றவாளிகளாகக் கருதித் தண்டிக்கவும் சட்டம் இயற்றப் பட்டது. எனவே பிறப்புகள் உட்பட வாழ் நிலைப் புள்ளி விபரங்கள் பதியும் முறையில் முன்னேற்றம் கண்டது. 1967 இல் குடிக்கணிப்புத் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின்படி பிறப் புக்களுக்கான பதிவு 98. 7 வீதமும் இறப்புக்களுக்கான பதிவு 94. 5 வீத மும் பதிவாளர் நாயகத்தினால் பெறப் பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இன் றைய நிலையில் ஒருபுறம் பாடசாலை, மற் றும் பல்கலைக்கழக அனுமதி, கடவுச் சீட்டு பெறல், உணவு மானியம்பெறல், தொழில் வாய்ப்பு, பிரசாவுரிமையை நிரூபித்தல், போன்றவற்றிற்கு பிறப்புப்பதிவின் அவசி யம் வேண்டப்படுகின்றது. மறுபுறத்தில் சுகாதாரத்திற்கான திட்டமிடல், பிறப்பு களின் வேற்றுமைப் பண்புகளை அறிதல், பொருளாதாரத் திட்டமிடல், பாடசாலை களை நிறுவுதல், சேமிப்புக்கிடங்குகளில் உணவினைச் சேமித்தல், வைத்தியசாலை களில் வைத்தியரின் தேவைகளை அறிதல், எதிர்காலக் குடியிருப்புகளின் தேவையை பெற்றுக் கொள்ளல், வாழ்க்கை எதிர் பார்ப்புகளை பெற்றுக் கொள்ளல் பற்றிய தரவுகள், தகவல்களைப் பெற்றுக் கொள் வதற்கு பெரிதும் வேண்டப் படுகின்றது. இலங்கையில் பிறப்புகளுட்பட்ட வாழ் நிலைப்புள்ளி விபரங்களைப் பதியும் பொறுப்பு பதிவாளர் நாயகத்தின் மேற் பார்வையின் கீழ் அவரால் நியமிக்கப்படும் உதவிப் பதிவாளர், அவர்களின் உதவி யாளர்கள் மூலம் நிறைவேற்றப் படுகின் றன. இலங்கையில் 120 வருடகால வாழ் நிலைப்புள்ளி விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

அட்டவணை I

## இலங்கையில் பிறப்பு வீதம்-1871-1985

| காலப்பகுதி — | பருமட்டான பிறப்புவீதம் | காலப்பகுதி | ப.பி.வீ | காலப்பகுதி | ப.பி.வீ |
|---|---|---|---|---|---|
| 1871—1875 | 28.6 | 1916—1920 | 38.2 | 1961—1965 | 34.3 |
| 1876—1880 | 26·3 | 1921—1925 | 39.2 | 1966—1970 | 31.1 |
| 1881—1885 | 28.6 | 1926—1930 | 40.4 | 1971—1975 | 28.7 |
| 1886—1890 | 30.2 | 1931—1935 | 36.9 | 1976—1980 | 28.2 |
| 1891—1895 | 31.7 | 1936—1940 | 35.9 | 1981—1985 | 25.6 |
| 1896—1900 | 37.1 | 1941—1945 | 36.6 | 1984 | 24.8 |
| 1901—1905 | 38.6 | 1946—1950 | 38.9 | 1985 | 24.3 |
| 1906—1910 | 37.5 | 1951—1955 | 38.1 | 1986 | 22.3 |
| 1911—1915 | 37.0 | 1956—1960 | 36.5 | | |

ஆதாரம்: பதிவாளர் நாயகத்தின் அறிக்கை.

பொதுவாக ஒரு நாட்டு மக்களது பிறப்புகளை நிர்ணயிப்பதில் பல்வேறு கார ணிகள் துணைபுரிகின்றன. பெரும்பாலான மக்கள் கிராமவாசிகளாகவிருத்தல், கல்வி அறிவுக் குறைவு, மதநம்பிக்கையின் தாக் கம், இளவயதுத் திருமணம், வருமானக் குறைவு, சமூகப் பெறுமானம் (Social Values வருடத்தில்குறிப்பிட்டகாலப்பகுதிக ளில் தொழிலற்றிருத்தல், பொருளாதாரத் தில் விவசாயத்தைஅடித்தளமாகக்கொண் டிருத்தல், நோய்களின் தாக்கம், பொழுது போக்கின்மை, கணவன் மனைவியரிடையே

புரிந்துணர்வுநிலை, தொடர்புச்சாதனங்கள் கருத்தடைச் சாதனங்கள் ஆகியன மக்களி டையே சென்றடைவதில் உள்ள குறை பாடுகள், பால் விகித வேறுபாடு, அரசி யல் காரணிகள், குடிசை வாழ் மக்களின் பங்கு, கலாச்சார காரணிகள் போன்ற பல் வேறு காரணிகளே அவையாகும்.

அட்டவணை I இல் 1871 – 1986ம் ஆண்டு வரையிலான பிறப்பு வீதம் தரப்பட்டுள் ளது. இதன்படி இலங்கையின் பிறப்புக்களை நான்கு காலப்பிரிவுகளாகப் பிரித்தறிதல் சிறப்புடைத்து. (I) 1871–1895, (II) 1896 –1955, (III) 1956-1965, (IV) 1965 க்குப் பின் என்பனவே அவையாகும். முதலாவது காலப்பகுதியில் பிறப்பு வீதம் பின்னருள்ள காலப்பகுதியிலும் பார்க்கக் குறைவாகவே யுள்ளது. இதற்கு பல்வேறு காரணிகள் தெரிவிக்கப்படுகின்றன. 1867 ம் ஆண்டிலி ருந்து பிறப்புக்கள் பதியும் முறை நடை முறையிலிருந்ததாயினும் அது செவ்வனே பேணப்படவில்லை. அததுடன் ஆண்–பெண் விகிதாசாரத்தை கணிப்பிடும்போது பெண் கள் மிகக் குறைவாகவிருந்தமை, பெண் குழந்தைகளிடையே அதிக இறப்புக்கள் நிகழ்ந்திருக்க வாய்ப்பிருந்தமை, சுகாதார மருத்துவ வசதிக்குறைவினால் உயிர்ப்பிறப்பு களுக்கு இணைவாககருச்சிதைவு,சாப் பிறப்பு கள் காணப்பட்டமை, பிரசவத் தாய் இறப்புகள் அதிகமாகவிருந்தமை போன்ற காரணிகள் பிறப்புகளைக் கட்டுப்படுத்தி யிருந்தன எனலாம்.

1896 – 1955ம் ஆண்டுக்காலப் பகுதி யில் குறிப்பிட்ட சில வருடங்களைத் தவிர பிறப்புகள் அதிகரித்துக் காணப்பட்டன. அதாவது 1896—1900ல் 37.1வும், 1901—1905ல் 38.6வும் அதிகரித்திருந்தது 1926—1930ம் ஆண்டுகளிடையில் இலங்கையில் அதியுயர் பிறப்பு வீதமாக 1000:40.4 ஆகக் காணப்பட்டது. மேற்குறித்த காலப் பகுதியை இருபிரிவுகளாக வகைப்படுத்திக் கொள்ளின் விளக்கத்திற்கு சுலபமாகவிருக் கும். அதாவது 1896—1920, 1921—1956 என்ற காலப்பகுதியே அவையாகும். முதற் காலப்பகுதியில் பிறப்புகள் அதிகமாகவிருப் பினும் இறப்புகளும் ஏறக்குறைய நெருங்கிய பண்பினைக் கொண்டிருப்பதால் இயற்கை அதிகரிப்பு குறைவாகவே காணப்பட்டது. 1891—1901, 1901—1911, 1911—1921ம் ஆண்டுகளிடையே முறையே இயற்கை அதி கரிப்பு 1.72, 1.42, 0 91 ஆகவிருந்துள் ளது. 1906ல் பிறப்பு,இறப்புவிதம் முறையே 36.5, 35 1வும், 1911ல் 38.0, 34.8வும் 1919ல் 36 0, 37.6வும் காணப்பட்டுள் ளமை இக்காலத்தின் இயற்கை அதிகரிப்புக் குறைவுக்கு காரணங்களாகக் கொள்ளலாம். இக்காலப்பகுதியில் இலங்கையில் மட்டுமல் லாது தென் ஆசிய நாடுகளிலும் இயற்கை அதிகரிப்பானது எதிர்த்தன்மை கொண்ட தாகவேயிருந்துள்ளது.

இரண்டாவது காலப்பகுதியான 1921–1956 ஆம் ஆண்டுகளிடையே பிறப்புவீதம் ஏற்ற இறக்கத்தைக் கொண்டிருந்தபோதி லும் இறப்பு வீதம் படிப்படியாக வீழ்ச்சி அடைந்து சென்றமையாலும், வெளியேற் றத்திலும் பார்க்க உள்வரவு அதிகரித்த மையாலும் அதிகரிப்பு வீதம் உயர்வான தாகவிருந்துள்ளது. பிறப்பு வீதத்தில் ஏற்ற இறக்கம் தொடர்ச்சியாகக் காணப்பட்ட தற்கு மலேரியா மற்றும் குலைக்காய்ச்சல் என்பன காரணமாகவிருந்துள்ளன. சக்கா ரின் கருத்துப்படி நோய்கள், சுகாதாரநிலை ஆகியன நேரடியாகவும் மறைமுகமாகவும் பிறப்புகளைப் பாதித்துள்ளன என்கிறார். நேர டியான காரணிகளாக தொற்று நோய்கள் ஆண் – பெண்களிடையே காணப்படுமாயின் இயல்பாகவே இனப்பெருக்கத்திற்கான சக்தியைப் பாதிக்கின்றன எனவும் மறை முகமாக விவாகம் செய்வதில் ஏற்படுகின்ற தடைகளும் காரணங்களாகவிருந்துள்ளன. அதாவது, தமிழர் சிங்களவர்களிடையே குடும்பத்தில்ஏற்படுகின்ற இறப்புகள் விவா கத்தினைக் குறிப்பிட்ட காலத்திற்கு தடை செய்கின்றன. எனினும் 1930களிலிருந்து பிறப்புவீதம் படிப்படியாக குறைவடைந்த மைக்கு பல்வேறு காரணிகள் துணை புரிந் துள்ளன. டொனமூர் திட்டப்படி இலங் கையர்களை உள்ளடக்கிய அரசினால் மக்கள் நலன் பெருமளவிற்கு கவனத்திற்கொள்ளப் பட்டமை, இலவசக்கல்வி முறையினால் கற் றோரின் பங்கு அதிகரித்தமை, மலேரியா நோய் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை, சுகாதார மருத்துவசேவைகள் கிராமங்களுக் கும் விஸ்தரிக்கப்பட்டமை, வாழ்க்கைத்தர அதிகரிப்பு, சமூகத்தில் பெண்கள் ஆண்க

ளுக்கு நிகராக வரும் ஆர்வம், பெண்கள் சமுதாயத்தின் குடும்பநலனில் அக்கறை கொள்ளத் தொடங்கியமை போன்ற பல் வேறு காரணிகள் துணைபுரிந்தன எனலாம்.

மூன்றாவது கட்டமான 1956 — 1965 காலப்பகுதியில் இறப்புவீதம் வீழ்ச்சியடைந் தாலும் அதற்கேற்ப பிறப்பு வீதம் வீழ்ச்சி யடையாமையால் இயற்கை அதிகரிப்பு இதற்கு முன்னருள்ள காலப்பகுதி, பின்ன ருள்ள காலப்பகுதியோடு ஒப்பிடும் போது அதிகரித்துக்காணப்பட்டதுஅதாவது1956-ல் பிறப்புவீதம் 36.4 லிருந்து 1965ல் 35.8 ஆகவே வீழ்ச்சியடைய இறப்பு வீதம் 9.8 லிருந்து 8.2 ஆக மாறியது. இக்காலப்பகுதி யில் பிறப்புகளைக் கட்டுப்படுத்தத் தவறிய மைக்கு சமூக, அரசியற் காரணிகளே முக்கி யத்துவப்படுகின்றது. பெண்கள் கல்வி கற் கும் காலம் அதிகரித்திருத்தல், சமூக அந் தஸ்து அதிகரித்தல், தொழில்வாய்ப்பில் பெண்களின் நாட்டம், விவாக வயது பின் தள்ளப்படல் போன்ற பலகாரணிகள் பிறப் புக்களைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பினைக் கொண்டிருந்த போதிலும் பொருளாதார நலனைக் கருத்திற்கொண்டு குடும்ப நலத் திட்டத்தை நடைமுறைப் படுததுவதற்கு அரசியல்வாதிகளும், சமூக மதவாதிகளும் எதிர்த்தமையே முக்கியகாரணமாகக்கொள் ளலாம். குடும்பத் திட்டமிடல் பெரும் பான்மை இனத்தைச் சிறுபான்மையாக்க வழி வகுத்துவிடும் என இன்றைய முன்ன ணித் தலைவர்கள் 1950 களில் கடுமையாக எதிர்த்தனர். இதன் விளைவாக அக்கால அர சாங்கங்கள் திடமான குடித்தொகைக் கொள்கையினை நடைமுறைப்படுத்த முடிய வில்லை.

நான்காவது கட்டமான 1965 ஆம் ஆண்டுக்குப்பின்னர் பிறப்பு வீதம் படிப் படியாக வீழ்ச்சி அடைந்துள்ளது. அதா வது 1965 இல் 33.1ஆகவிருந்த பிறப்பு வீதம் 1985இல் 24.3 ஆகக் குறைவடைந் துள்ளது. இதற்கு நேரடியான, மறைமுக மான காரணிகள் துணைபுரிந்துள்ளன. முத லாவது காரணியாக குடும்ப நலத்திட் டத்தை அரசாங்கம் வெளிப்படையாக ஏற்றது மட்டுமல்லாது வெளிநாட்டு நிறு வனங்களின் உதவிகளைப் பெற்று நிறை வேற்றுவதில் அக்கறை கொண்டமையா கும். அதாவது 1965இல் பதவியேற்ற தேசிய அரசாங்கம் பிறப்புக்களைக் கட்டுப் படுத்த பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி னர். குடும்பத்திட்ட சங்கத்தினூடாக மட்டுமல்லாது சுகாதார அமைச்சினூடாக இவற்றை நிறைவேற்றினர் எனலாம். மறைமுகமான காரணிகளாக விவாக வயது பின்னடைய பெண்களின் கல்வி கற்கும் காலம் நீடிப்பு, அணமைக் காலங் களில் பெண்கள் விவாகத்தைப் பின்தள்ளி யேனும் தொழில் வாய்ப்பினை விருப்பி யேற்கும் நிலை, சமூகத்தில் பெண்களின் அந்தஸ்து அதிகரித்துச் செல்லல், கல்வி கற்ற குடும்பங்களிடையே கணவன் மனைவி யரிடையே பரஸ்பரம் புரிந்து கொள்ளும் உணர்வு, மத நம்பிக்கைக்கும் பிறப்புக்க ளுக்குமிடையிலான தொடர்பில் விரிந்து செல்லும் வேற்றுமைப் பண்பு. இலங்கை யர்கள் தமக்குரிய பாரம்பரியப் பண்பாட் டுடன் மேலைத்தேசப் பண்பாட்டையும் சேர்த்துக் கொள்ளும் முறைமை நகராக்க வளர்ச்சி உள்நாட்டு, சர்வதேச இடப் பெயர்வின் நிலை, அளவான குடும்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதன் பக்க விளை வுகள், மத்திய வகுப்பினர் அதிகரித்துச் செல்லல், பொருளாதார சமூக நிலை, மருத்துவ, சுகாதார வசதிகளின் விருத்தி, உணவு நுகர்வின் நிலையும் பிறப்புகளும் போன்ற பல்வேறு காரணிகள் பிறப்புக்க ளைக் கட்டுப்படுத்தி வருகின்றன.

இலங்கையில் பிறப்புகளை நிர்ணயிப்ப தில் முக்கிய இடத்தைப் பெறுவது விவாக வயதாகும். இலங்கையில் பொதுவாக சட்டரீதியிலான விவாகம் செய்யும் வயது ஆண்களுக்கு 16 கவும் பெண்களுக்கு 12 கவும் காணப்பட்ட போதிலும் முஸ்லீம் களுக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை. பெண் களுக்கான விவாக வயது 1963, 1971 1981 இல் முறையே 22.3, 23.5, 24.4 ஆகவுயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கான சராசரி விவாக வயது ஒரு வருடம் அதிகரிக்குமாயின் அவ்வாண் டில் நிகழும் பிறப்பில் 10 வீதம் குறை வடைய வாய்ப்புண்டு. நாட்டின் சராசரி விவாக வயது ஆண்களுக்கு 27.9கவும்

பெண்களுக்கு 24. 4 கவும் அமைந்துள்ளது. இதன் விளைவாக இளவயதில் விவாகம் செய்யாத பெண்களின் பங்கு அதிகரித்துச் செல்கின்றது. 20—27 வயதிடையில் விவாகம் செய்யாத பெண்களின் பங்கு 1971, 1981 இல் முறையே 53 3, 53.2 வும் 25—29 வயதிடைவெளில் 24.6 லிருந்து 30.1வும், 30—34 வயதிடையில் 10.9லிருந்து 16.0 வீதமாகவும் அதிகரித்துள்ளது. விவாக வயது அதிகரித்துச் செல்வதற்கு கல்வி கற்கும் காலம் அதிகரிப்பது மட்டுமல்லாது விவாகத்தை நெறிப்படுத்துவதற்கான பொருளாதார வசதிநிலையுடன் விவாகம் செய்யாத பெண்களுக்கு தொழில் வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கும் பண்பு, விவாகத்திற்கு பெண்களை ஆண்கள் நேரடியான முறையில் தெரிவு செய்யும் நிலை வளர்ச்சியடைந்தமை போன்ற பல்வேறு காரணிகளும் செயற்படுகின்றன.

இலங்கையில் கல்வி கற்கும் காலம் அதிகரித்திருப்பது மட்டுமல்லாது ஆண்—பெண் பாலாரிடையே கல்வி நிலை அதிகரித்துச் செல்லும் பண்பும் பிறப்புகளைக் கட்டுப்படுத்த உதவுகின்றது. எழுத்தறிவு நிலையானது 1971, 1981 இல் முறையே 78.5, 86 5 வீதமாகவிருப்பதும், பெண்களின் எழுத்தறிவுநிலை முறையே 70.9 80 5 ஆகவிருப்பதும் நோக்கற்பாலது. 4—9 வயதிடைப்பட்ட குழந்தைகள் பாடசாலைக்குச் செல்லும் நிலை 1971 இல் 60.9 ஆகவிருந்து 1981 இல் 84.4 அதிகரித்துள்ளது. 10—14 வயதிடையில் 69.8 லிருந்து 88.4வும் 15—19 வயதிடையில் 34.5 லிருந்து 42.0 வீதமாகவும் அதிகரித்திருப்பது பிறப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய மறைமுகக் காரணிகளாகும்.

• கணவன் — மனைவியது தொழில் நிலை பிறப்புகளைக் கட்டுப்படுத்தவல்லது நிர்வாக மற்றும் எழுதுவினைஞர்தரவரையிலான தொழிலுடைய கணவனைக் கொண்ட குடும்பங்களில் பிறப்புகள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதை பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பொருளாதார மற்றும் கல்வி ரீதியான ஆய்வில் இவைகளிடையே பிறப்புகள் வேறுபட்டமைந்துள்ளதை அட்டவணை II தெளிவு படுத்துகின்றது.

அட்டவணை II

## இன ரீதியாக பிறப்புகள்

| | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்திய தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|---|---|
| கல்வி அறிவுள்ளதும் பொருளாதார விருத்தி கொண்ட குடும்பம் | 4 15 | 5.24 | 3.50 | — |
| கல்வி அறிவு ஆனல் பொருளாதார வசதியற்ற குடும்பம் | 5.18 | 5.26 | 4.87 | 4.21 |
| கல்வி அறிவற்ற ஆனல் பொருளாலார விருத்தியுடைய குடும்பம் | 6.83 | 6.34 | 6.02 | 6.67 |
| கல்வி அறிவற்றதும் பொருளாதார விருத்தியற்றதுமான குடும்பம் | 6.57 | 6.13 | 6.29 | 6.93 |

ஆதாரம்: Dallas F. S. Fernando

இவ்வட்டவணைப்படி இனங்களிடையே மட்டுமல்லாது அவர்கள் தம் பொருளாதார மற்றும் கல்வி நிலையுடனும் பிறப்புகளின் அளவு தீர்மானிக்கப்பட்டுள்ளன என்பதைக்காணலாம். மதரீதியாகவும்பிறப்புகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதாவது இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகியமதத்தைப் பின்பற்றுபவார்கள் குடும்பத்திட்டமிடலை பூரணமாக எதிர்ப்பவர்களாகவிருகின்றனர். ஆனல் 1980களின் பின்னர் அவர்களும் தேசியவோட்டத்தோடு பங்குகொள்ளும் பாங்கினை குடும்பத்திட்ட சங்க அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. தேசியபிறப்பு வீதத்தோடு ஏற்படும்போது இந்தியத் தமிழரிடையேபிறப்புகள் அதிகமானபோதிலும் படிப்படியாக பிறப்பு வீதம்கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1963, 1971, 1981ல் முறையே ஆயிரத்திற்கு 33.0, 26.0, 24.0 ஆகக்குறைவடைந்து சென்றுள்ளது. பிறப்பு வீதம் இவர்களிடையே அதிகமாக விருப்பதற்கு ஆண்—பெண் இருபாலாருக்கும் இளவயதில் தொழில்வாய்ப்புகிடைக்கும் நிலை இதனல் பொருளாதார ரீதியில் விவாகம்செய்யும் ஆற்றல் ஏற்படல். மிகச்சிறியகுடியிருப்பினை வாழ்விடமாகக் கொண்டுள்ளமை, கல்வி அறிவுக்குறைவு போன்ற பல காரணிகள் இளவயது விவாகத்தை ஊக்குவிக்கின்றன.

இலங்கை விவசாய நாடாகவிருந்தபோதிலும் நகராக்கவிருத்தி பிறப்புகளைக் கட்டுப்படுத்தும் காரணிகளில் முக்கியமானதாகவிருந்துள்ளது. குறிப்பாக கொழும்பு நகரப்பகுதியில் சராசரி பிறப்பு 3.95 விருக்க அயற் கிராமங்களில் 4.48 ஆகவிருந்தது. நாட்டின் மொத்த மக்களில் 25 வீதமானவர் நகரவாசிகளானபோதிலும் நகராக்கப்பண்புகள் அதிகரித்த கிராமத்தவர்களிடையே பிறப்புகள் கணிசமாக குறைவடைந்து சென்றுள்ளது. மக்களிடையே பொழுது போக்கு வசதி விருத்தி பெற்றமை, வருமான உயர்வு, பெண்களிடையே சமூக அந்தஸ்து அதிகரித்தல், மருத்துவ சுகாதார வசதிகள், தொடர்புச் சாதனங்கள் கிடைக்கும் நிலை (1981இல் நாட்டில் 88 வீதமானேர் வானெலியை உபயோகிக்கின்றனர்) உணவு நுகர்வுநிலை போன்ற காரணிகள் பிறப்புகளைக் கட்டுப்படுத்தியுள்ளன எனலாம்.

நேரடியான காரணிகளில் குடும்ப நலத்திட்டம் விரிவு படுத்தப்பட்டமை, பிறப்புகளை கட்டுப்படுத்த உதவின. 1971 ஆம் ஆண்டில் குடும்பத்திட்டமிடலை ஏற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 49323 ஆகவிருந்தது. இது 1983இல் 173197ஆகவும் 1986இல் 137307 ஆகவும் காணப்பட்டது. பல்வேறு குடும்பத்திட்டமிடலைப் பயன் படுத்துவதற்கு குடும்பப் பெண்களிடையே காணப்பட்ட பய உணர்வு நீங்கியமை இதனைச் சாத்தியப்பட வைத்தது. 1980 களின் பின்னர் முஸ்லீம் பெண்களும் குடும்பத்திட்டமிடலை மேற்கொண்டு வருகின்றனர். இதைவிட கல்வி அறிவுடையோர் தாமாகவே பிறப்புகளைக் கட்டுப்படுத்தும் வல்லமையைப் பெற்றுள்ளனர் என அறிய முடிகின்றது.

இறுதியாக குடித்தொகைப் பண்புகளைப் பொறுத்தவரை வளர்முக நாடுகளுக்கு முன்மாதிரியாகவுள்ள இலங்கையின் பிறப்புகளை 1990 ஆம் ஆண்டில் 1000:20 ஆக குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபெருமளவிற்கு சாத்தியப்படக் கூடிய ஒன்றே. மருத்துவ ரீதியில் பிறப்புகளை கட்டுப்படுத்துவதிலும் பார்க்க சமூக, பொருளாதார, கலாசார மாற்றத்தின் விளைவினுலேயே தற்போதைய நிலையை பெருமளவிற்கு அடைய முடிந்தது என பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே பிறப்புகளைக் கட்டுப்படுத்தி குடித்தொகை அமுக்கத்தைக் குறைக்க வேண்டுமாயின் பொருளாதார, சமூக, கலாசார ரீதியில் மக்கள் செழிப்புநிலை பெறல் வேண்டும்.

அரச நிதி:

# பொதுப் படுகடன் மூலகங்கள்

இலங்கையில் பாதீடுகள் (வரவு செல வுத் திட்டங்கள்) அபிவிருத்தி நோக்கோடு பற்றுக்குறையாகத் தயாரிக்கப்படுகின்றன. அவ்வாறான பற்றுக்குறையை நிரப்புவதற் காக பணம் திரட்டுவது நிதியீட்டமாகும். அரசாங்கம் இதற்காக வணிகவங்கியிலுள்ள தனது காசு மீதியைப் பயன்படுத்தலாம். வெளிநாட்டிலிருந்து நன்கொடை பெற லாம்.

இவற்றைவிட கடன் பெறுவதும் ஒரு வழியாக காணப்படுகின்றது. அவ் வகைக் கடன்கள்

(i) உள்நாட்டுக் கடன்கள்
(ii) வெளிநாட்டுக் கடன்கள்

என இருவகைப் படுகின்றன. இவற்றில் உள் நாட்டுக் கடன்கள் பல வழிகளில் பெறப்படு கின்றன. அவற்றைப்பற்றி சுருக்கமாக இங்கு விளக்கப்படுகின்றது. இவற்றை உள்நாட்டு படுகடன் கருவிகள் என்றும் அழைக்க முடியும்.

வெளிநாட்டுப் படுகடன் மூலங்கள்பற்றி அடுத்த இதழில் தருவோம்.

உள்நாட்டுக் கடன்கள் தவணை அடிப் படையில் குறுந்தவணைக் கடன் என்றும், நடுத்தவணை, நீண்ட தவணைக்கடன் என் றும் இரண்டாக நோக்கப்படும். அவற்றில் ஒருவருடத்துக்குட்பட்ட தவணையிலானவை குறுந்தவணையிலடங்கும். இவை முன்பு மிதக் கும் கடன்கள் என்றும் அழைக்கப்பட்டன.

நடுத்தவணை, நீண்ட தவணைக்கடன் எனும்போது ஒருவருடத்துக்கு மேற்பட்ட தும் 15 வருடங்கள் அல்லது அதற்கும் மேற் பட்டதுமான தவணைக்கடன்கள் அடங்கும். இவை முன்பு நிதியிடப்பட்ட கடன்கள் என் றும் அழைக்கப்பட்டன.

### 1) குறுந்தவணைக் கடன்கள்

1.1 திறைசேரி உண்டியல்கள்
1.2 மத்திய வங்கி முற்பணம்
1.3 வரி ஒதுக்குச் சான்றிதழ்

### 2) நடுத்தவணை, நீண்ட தவணைக் கடன்கள்

2.1 ரூபாய்ப் பிணைகள்
2.2 வெளிநாட்டு நிர்வாகக் கடன் பாடுகள்
2.3 தேசிய அபிவிருத்தி முறிகள்.

### 1.1 திறைசேரி உண்டியல்

அரசின் சார்பில் பெறப்படும் பொதுப் படுகடன் கருவியில் முதன்மையானது. பாதீட்டுப் பற்றுக்குறைக்கு நிதியீட்டுதற்கு திறைசேரி உண்டியல் வெளியீடு உதவு கின்றது. உள்நாட்டு திறைசேரி உண்டியல் விதிச் சட்டத்தின்படி இது வெளியிடப் படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்திஞல் வெளியிடப்படும் இப்பத்திரம் திறைசேரியின் உதவி செயலாளரின் கையொப்பம் கொண்டதாகும். இது 6 மாத தவணைகளைக் கொண்டது. இதனுல் குறுந்தவணை நிதி பெறும் தற்கு உதவும் ஆவணமாகவுள்ளது. இது சராசரியாக 10%—14 வரையிலான வருட வட்டி உடையதாகும்.

இவை முகப் பெறுமதியிலிருந்து வட்டித் தொகை கழிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும். முதிர்வுக் காலத்தில் முகப் பெறுமதிப்படி மத்திய வங்கி பகிரங்க சந்தையில் அவற்றைக் கொள்வனவு செய்யும் நம்பிக்கையான முதிர்வுக்கு முன் கழிவு செய்யத்தக்க ஆவணம் என்பதால் இது மதிப்புடையதாயுள்ளது.

வங்கித் துறையான மத்திய வங்கி, வணிக வங்கிகள் என்பவற்ருலும் இவை கொள்வனவு செய்யப்படும். 1986இல் இவை 22,264 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களைக் கொண்டிருந்தன. வங்கியல்லாத் துறையும் இவற்றை அதிகம் கொள்வனவு செய்கின்றது. ஊழியர் சேமலாப நிதி, ஏனைய சேம நிதியங்கள், சேமிப்பு நிறுவனங்கள், காப்புறுதிக் கம்பனிகள், திணைக்கள வேறு உத்தியோக பூர்வமான நிதிகள் வங்கியல்லாத துறையில் முதன்மையானவை. 1986இல் இவை 3908.6 மில்லியன் ரூபா பெறுமதியான உண்டியல்களைக் கொண்டிருந்தன.

திறைசேரி உண்டியல் வெளியிடும் எல்லை முன்னைய அரசாங்கத்தில் 3000 மில்லியனுக மாத்திரம் இருந்தது. 1977இன் பின் வந்த அரசாங்கம் படிப்படியாக அதிகரித்து தற்போது 25,000 மில்லியன் ரூபாவாக காணப்படுகின்றது.

## 1.2 மத்தியவங்கி முற்பணம்

இலங்கை அரசின் பாதீட்டுப் பற்ருக் குறைக்கு நிதிகாண உதவும் குறுந்தவணைக் கடன்களில் இதுவும் ஒன்ருகும். இது நாணய விதிச்சட்டத்தின் 89 வது பிரிவின் கீழ் அரசாங்கத்துக்கு வழங்கப்படும் தற்காலிக முற்பணமாகும்.

இலங்கை சர்வதேச நிதி நிறுவனங்களில் அங்கத்தவராகும் போது அவற்றிலிருந்து இலங்கை அனுமதிப்பங்குகளை (Quotas) வாங்க வேண்டும். இதற்கு ஏற்ப இலங்கை பாராளுமன்றத்தில் காலத்துக்குக் காலம் சட்டங்கள் ஆக்கப்பட்டன. அவற்றின்படி அவற்றுக்கான அங்கத்துவக் கட்டணங்களை அந்நியச் செலாவணியில் செலுத்துவதற்கு உதவியாக மத்தியவங்கி அரசாங்கத்துக்கு முற்பணம் வழங்க வேண்டும் எனப்பட்டது. அத்தகைய விஷேட கடன்களை வழங்கும் போது மத்தியவங்கி, நிதித்திட்டமிடல் அமைச்சிடமிருந்து கேள்வி உறுதிப்பத்திரம் (Demamd promissory Note) ஒன்றை வாங்குவது வழக்கமாகும்.

பன்னுட்டு நாணய நிதியம் (IMF) சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கி (IBRD) ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) போன்றவற்றின் அங்கத்துவப் பணத்திற்காக இக்கடன்கள் பெறபபட்டுள்ளன. 1970/71 இறுதியில் 93 மில்லியன் ரூபாவாக இது காணப்பட்டது. 1986 இன் முடிவில் இக் கணக்கில் காணப்பட்ட பொறுப்பு 4626 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

## 1.3 வரி ஒதுக்குச் சான்றிதழ்

1957 ம் ஆண்டின் 22 ம் இலக்க வரி ஒதுக்குச் சான்றிதழ் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்திஞல் இச் சான்றிதழ் வெளியீடு பொறுப்பேற்கப்பட்டுள்ளது. வருமான வரி, இலாப வரி என்பவற்றைச் செலுத்துவதற்கான உதவி முறையாக இச்சான்றிதழ் பயன்படுத்தப் படுகின்றது. வருமானவரி, இலாபவரி, செல்வவரி, கொடைவரி என்பவற்றின் கொடுப்பனவுகளுக்காக இவை கையளிக்கப்படக் கூடியன. இதுபற்றிய ஏற்பாடுகள் மத்திய வங்கி, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் ஆகியோரால் ஒப்புக்கொள்ளப் பட்டனவாயுள்ளன. ஏனைய உள்நாட்டுக் கருவிகளுடன் ஒப்பிடும்போது இவை அதிகளவினதாயில்லை. இவை பெரிதும் நியதிப்படியான வட்டி விதங்கள் கொண்டவை. 1986ன் முடிவில் வெளிநின்ற இப் பொறுப்புக்கள் 9.1 மில்லியனுக மாத்திரமேயிருந்தன.

## 2.1 ரூபாய்ப் பிணைகள்

இலங்கை அரசின் நடுத்தர நீண்ட தவணைக் கடன்களில் இது முதன்மையானது. பாதீட்டின் பற்றுக் குறைக்கு நிதியீட்டுதற்கு இவற்றை வெளியிடுவதுண்டு. ஒதுக்கீட்டுச் சட்டம் (Appropriation Act) 2 (1) (b) பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டதன் படியே எல்லாக் கடன்களும் பெறப்படுகின்றன. அதில் அதிகாரமளிக்கப்பட்ட எல்லைக்கு மேலாக அவற்றை வெளியிட முடியாது. பதிவு செய்யப்பட்ட பங்குகள், பிணைகள் சட்டவிதியின்படியும் இக் கடன் திரட்டப்படும், மீட்கப்படும்.

புதிய வெளியீடுகள் பற்றிய பொது விதிகளை மத்திய வங்கியின் சிபார்சுடன் பொதுத் திறைசேரி மேற்கொள்ளும். இந்த ரூபாய்ப் பிணைகள் ஆறு வருட முதிர்வுடன் வருடாந்தம் 12 சத வீத வட்டி பெறுவன வாயுமுள்ளன. திறைசேரி உண்டியல் போல் நேரடியாக மத்திய வங்கி இவற்றை வாங்க முடியாது. ஆனால் பகிரங்க சந்தையில் நாணயக் கொள்கைத் தேவைகளுக்காக வாங்க முடியும்.

ரூபாய்ப் பிணைகளில் பிரதானமாக முதலிடுவோர் ஊழியர் சேமலாப நிதி, தேசிய சேமிப்பு வங்கி, இணை முதலீட்டு நிதி (Joint Investment Fund) என்ற நிறுவன முதலீட்டாளராவர். எனினும் 1984 இன் பின் அரசாங்கம் ரூபாய்ப் பிணைகளை மீட்பதற்கென ஆழ் நிதி ஒதுக்கும் முறையை நிறுத்தி விட்டதால் இணை முதலீட்டு நிதி ரூபாய்ப் பிணைகளில் முதலிடுவது நிறுத்தப்பட்டு விட்டது. ஊழியர் சேமலாப நிதியில் 2/3 பங்கு 1986 இல் இதில் நிதியிடப்பட்டது. ஆழ் நிதிகளை உள்ளடக்கிய தொகை 1985 டிசம்பரில் 36,570.2 மில்லியன் ரூபாவாகும். 1986 இல் இதன் மூலம் 7776 மில்லியன் திரட்டப்பட்டது. ஓய்வூதிய நிதி, தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு ஆழ்நிதி, தபாற்கந்தோர் பாதுகாப்பு நிதி போன்றனவும் ரூபாய்ப் பிணைகளில் முதலீடு செய்யப்படுகின்றன.

## 2.2 வெளிநாட்டு நிர்வாகக் கடன்பாடுகள்

இலங்கை அரசாங்கம் பாதீட்டுப் பற்றுக்குறைக்கு நிதி காண்பதற்குப் பெறக்கூடிய நடுத்தவணை, நீண்டதவணைக் கடன்பாடுகளில் இதுவும் ஒன்றாகும். இலங்கை மத்தியவங்கி மூலமாகவும், இலங்கை அரசவர்த்தக (திரண்ட ஏற்றுமதிகள்) கூட்டுத்தாபனம் மூலமாகவும் இலங்கை அரசாங்கம் பெறும் கடன்களாகும்.

வெளிநாடுகளிடமிருந்து பெறப்படுகின்ற போதும் உள்நாட்டு நிறுவனங்களூடாகத் திரட்டப்படுவதால் உள்நாட்டுக் கடன்பாடுகளில் அடங்குகின்றது. செலாவணி வீதங்களில் ஏற்படும் தளம்பல்கள் இந்தக் கடன் பெறுமதியைப் பாதிக்கின்றன.

இக்கடன்கள் பெருமளவுக்கு ஜேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு, ஈரான், லிபியா போன்ற நாடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. 1985 இன் முடிவில் 119 மில்லியனாக காணப்பட்ட இப்பொறுப்புக்கள் 1986 முடிவில் 147 மில்லியனாக அதிகரித்துக் காணப்பட்டன.

## 2.3 தேசிய அபிவிருத்தி முறிகள்

இலங்கை அரசின் பாதீட்டுப் பற்றுக் குறைக்கு நிதிகாணும் போது கடன்பெற உதவும் மூலங்களில் இதுவும் ஒன்றாகும். நடுத்தவணை, நீண்டதவணை நிதி மூலங்களில் இது அடங்கும்.

இவை 1961 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க நிதிச்சட்டத்தில், 19 (1) வது பிரிவின் கீழ் வழங்கல் படுவதாகும். உள்நாட்டு இறைவரி ஆணையாளரால் வழங்கப்படும் இம் முறிகள் வருடமொன்றுக்கு 5 சத வீத வட்டி கொண்டனவாக இருக்கும். முதன்முதலாக 1963 ஜூலை 29 இல் இது வெளியிடப்பட்டது.

இவை நிதியமைச்சரால் அனுமதியளிக்கப்பட்டு, அரசாங்க செய்தி மடலில் (கசெற்) வெளியிடப்பட்ட முயற்சிகளில் முதலிடுவதற்கு மாத்திரமே பயன்படுத்தலாம். வேறு நோக்கங்களுக்கு மாற்றப்படுவதில்லை.

இவை ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படவேண்டுமென்பதில்லை. பல வருடங்களாக இவை வழங்கப்படாமலும், மீளக் கொடுப்பனவுகள் நிகழாமலும் இருந்துள்ளன. 1978 க்குப் பிற்பட்டகாலப் பகுதிகளில் பெருமளவுக்கு இவை பயன்படுத்தப்படாதிருப்பதை நோக்க முடிகிறது.

# 1977ன் பின்னுள்ள காலப்பகுதியிலான இலங்கை அரசின் ஏற்றுமதி ஊக்குவிப்புக்கள்

மா. சின்னத்தம்பி B.A; B. Phil. Hons.

## ஏற்றுமதியின் முக்கியத்துவம்

இலங்கைப் பொருளாதாரத்தின் வருமான நிர்ணயம், வளர்ச்சியின் உறுதியான தன்மை என்பவற்றை தீர்மானிப்பதில் ஏற்றுமதி வியாபாரம் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறது. இலங்கையில் ஏற்றுமதி வியாபாரமானது மொத்த உள்நாட்டுற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. மொத்த தொழில் வாய்ப்பில் நான்கில் ஒரு பங்கை இத்துறை வழங்குகின்றது. அரச நிதியில் அரசவருமானத்தில் ஐந்தில் ஒருபங்கு இத்துறையினுல் வழங்கப்படுகிறது. ஏற்றுமதித்துறையில் ஏற்படுகின்ற எந்தவொரு மாற்றமும், பெரும்பாலும் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளையும் பாதிக்கிறது. ஏற்றுமதி தொடர்பான எந்தவொரு வீழ்ச்சியும் தவிர்க்கமுடியாத வகையில் உள்நாட்டு முதலீடுகளைப் பாதித்துள்ளது. நாட்டின் நுகர்பொருள் உற்பத்தியையும் அரசாங்கத்தின் வருமானம், செலவு என்பவற்றையும் பாதித்தே வந்துள்ளது. இலங்கை பெருமளவுக்கு நாட்டின் தொழிற்துறைக்குரிய மூலதனப் பொருட்களையும், கணிசமான அளவு நுகர் பண்டங்களையும் இறக்குமதி செய்யவேண்டிய நிலையில்த்தான் இன்னமும் காணப்படுகின்றது. இவை ஏற்றுமதி உழைப்பின் அளவில் தங்கியுள்ளன. நவீன கைத்தொழில்த்துறையின் செயலாற்றங்களின் அளவு எந்தளவாகவுள்ளது என்பதைக்கூட ஏற்றுமதியே தீர்மானிக்கின்றது. கடந்த காலங்களில் பொருளாதாரம் மேலும் மேலும் பன்முகப்படுத்தப்பட்டும் அகலப்படுத்தப்பட்டும் வருகின்றபோது, பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிப்பதிலும், நாட்டுமக்களின் பொதுவான நலன்கள், வாழ்க்கைத்தரம் என்பவற்றைத் தீர்மானிப்பதிலும் குறிப்பிடத்தக்க பங்கினை ஏற்றுமதி வகித்து வருகின்றது. இலங்கையின் நீண்டகால அபிவிருத்திக்கும், உறுதிக்கும் பலமான ஏற்றுமதியின் செயற்பாடு மிகவும் அவசியமானதாகவேயுள்ளது.

இலங்கையின் சென்மதி நிலுவைப் பிரச்சனையை சாதகமாக மாற்றுவதற்கு ஏற்றுமதித்துறை மிகவும் பிரதான பங்கு வகிக்கும் என்பதை 1977-ன் பின்பு ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் நன்குணர்ந்தது. இறக்குமதிப் பிரதியீடு தொடர்பான முன்னேற்றங்களையும் இது தீர்மானிக்கிறது. விவசாயத்துறை, வளப்பேறு (Resource Endowment), அமைவிடம் என்பன, இலங்கையின் இறக்குமதிப் பிரதியீடுகளின் விரிவாக்ககத்தை கட்டுப்படுத்தி வருகின்றன. 1960 களிற்குப் பிற்பட்ட காலத்திலிருந்தே இறக்குமதிப்பதிலீடு உள்முக நோக்குடைய உபாயமாகக் கையாளப்பட்டு வருகின்றபோதிலும் விரும்பத்தக்க விளைவுகளை உருவாக்கவில்லை. அவை மிக

வும் மெதுவான வளர்ச்சியையே காட்டின. குறைந்தளவு திறமையுடனேயே தொழிற்பட்டன. அவற்றின் இயலளவில் குறைந்தளவே பயன்படுத்தப்பட்டது. ஏற்றுமதியாக்கமானது ஒப்பீட்டு நலன் அடிப்படையிலான சிறந்த வள ஒதுக்கீடு, பெருமளவான இயலளவுப் பயன்பாடு, அளவுத்திட்ட சிக்கனங்களைப் பாவித்தல், உலகச் சந்தையின் போட்டியினுல் தூண்டப்படும் தொழில்நுட்ப மாற்றங்கள் போன்றவற்றின் நன்மைகளை அதிகரிக்கச் செய்வதாக உள்ளது.

இலங்கை போன்ற சிறிய நாட்டில், உள்நாட்டுச் சந்தையானது மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளது. ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சியானது கிடைக்கும் வளங்களில் பூரண பயன்பாட்டை ஏற்படுத்துவதுடன், மிகவும் விரைவானதொரு கைத்தொழில், விவசாய வளர்ச்சிக்கும் வழிகாட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல்வேறுபட்ட செயற்பாடுகள் பற்றிய ஆய்வுகள், துறைசார் வெளியீடுகளுக்கும், ஏற்றுமதிகளுக்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் இருப்பதைக் காட்டுகின்றன. மூலதனத்துக்கும் ஊழியரின் உற்பத்தித்திறனுக்குமிடையேயும், ஏற்றுமதிகளுக்கும் உள்நாட்டு சேமிப்புகளுக்கிடையேயும் நேர்க்கணிய தொடர்பு நிலவுகிறது. இலங்கை தன் வேகமான பொருளாதார வளர்ச்சிக்கான அந்நிய மூலதனத்தைக் கவர்ந்திழுப்பதற்கு ஏற்றுமதிகளின் விரிவாக்கம் மிகவும் உதவியாக இருக்கும். இதன்மூலம் இலங்கை தனது சென்மதி நிலுவை நிலைமையையும் மேம்படுத்திக்கொள்ளமுடியும்.

தேக்கமுடைய ஏற்றுமதி நிலைமையானது, பொருளாதார வளர்ச்சி, முதலீடு, தொழில் வாய்ப்பு என்பனவற்றில் மந்தமான நிலையை ஏற்படுத்துவதுடன், சென்மதி நிலுவையையும் பாதகமான தாக்கிவிடத்தக்கது. 1977 ற்குப்பின் ஏற்றுமதி வியாபாரத்திற்கு அதிக முதன்மையளிக்கப்பட்டது. கடந்த 30 வருடங்களாக இலங்கையில் வர்த்தகக் கட்டுப்பாடுகள் நிலவின. செலாவணிக்கட்டுப்பாடுகள் இருந்தன. அரசாங்கம் மேலதிகமாக தலையிட்டதன் மூலம் பொருளாதாரத்தில் ஏற்படவிருந்த மாற்றங்களும், வளர்ச்சியும் தாமதமாகின. உலக வர்த்தக அமைப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களை இலங்கை உள்வாங்கிக் கொள்ள முடியாமற்போய்விட்டது. தனியார்துறை நடவடிக்கைகளுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதாலும், வளங்களின் முகாமையிலான அரச தலையீடுகள் அதிகரித்திருந்ததாலும் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி மக்களின் நலன்களை எதிர்பார்த்தளவு உயர்த்துவதற்குப் போதாதிருந்தது. இத்தகைய திருப்தியற்ற போக்கு ஏற்றுமதியிலும் தென்பட்டது. 1977-ன் பாதீட்டுடன் பொருளாதார முகாமை பற்றிய முழுக் கருத்தும் மாற்றமடைந்தது. பொருளாதாரத்தில் பெரிதும் எல்லாத் துறைகளிலும் மீள ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டன. கைத்தொழில்களுக்கான தடைகள் அகற்றப்பட்டன. வெளிநாட்டு முதலீடு ஊக்குவிக்கப்பட்டது. உள்நாட்டு வர்த்தகம் தனியார் துறைக்கு திறந்துவிடப்பட்டது. நிதிச் சந்தைகள் தாராளமாக்கப்பட்டன. வெளிநாட்டு வியாபாரத்திலும் குறிப்பிடத்தக்களவு சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அனுமதிப் பங்குக்கட்டுப்பாடுகளுக்குப் பதிலாக, தீர்வைகள் ஏற்படுத்தப்பட்டன. சமாளிக்கக்கூடிய மிதக்கும் முறையிலான நடைமுறையுடன் பலவகையான நாணயமாற்று முறை அகற்றப்பட்டது. இத்தகைய தொடர்பில்தான் ஏற்றுமதி வியாபாரத்திற்கான பலவகைப்பட்ட ஊக்குவிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

## 1977 ன் பின்னுன தேவைகள்

1977ன் பின் வந்த அரசாங்கம் இறக்குமதி தராளமாக்கலுக்கு அனுமதியளித்த போது இறக்குமதிச் செலவினங்கள் கூடிய வீதத்தில் அதிகரிக்கலாயின. இதனுல் ஏற்றுமதி வருமானத்தின் அதிகரிப்பை வேகப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான தேவை கூர்மையடைந்தது. அரசாங்க முயற்சிகள் தொடங்கியிருந்தபோதிலும் இறக்குமதிச் செலவுக்கு ஏற்ப ஏற்றுமதி வருமான அதிகரிப்பு ஆரம்ப நிலையில் கணப்படவில்லை.

| பட்டியல் (1) வருடம் | ஏற்றுமதி வருமானங்கள் (அதிகரிப்பு வீதம்) | இறக்குமதிச் செலவினங்கள் (அதிகரிப்பு வீதம்) |
|---|---|---|
| 1979 | 16% | 54% |
| 1980 | 18% | 49% |

இதனுல் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகளுடன் 1981 'நடுப்பகுதியிலிருந்து இறக்குமதிகளை ஒழுங்குபடுத்தும் விதத்தில் நாணய நடவடிக்கைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது. ஆயினும் ஏற்றுமதிக்கான ஊக்குவிப்புக்களை பரவலாக்குவதை அரசாங்கம் உணர்ந்திருந்தது.

தற்போதைய அரசாங்கம் நாட்டின் தொழிலின்மையைக் குறைப்பதிலும் கூடிய அக்கறை எடுத்துக் கொண்டது. 1978–82 காலப்பகுதியில் தொழிலின்மை 26 சத வீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதற்கு அடிப்படையாக துரித மகாவலித்திட்டம், ஒரு மில்லியன் வீடமைப்புத் திட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டம் போன்ற பலவற்றையும் நடைமுறைப்படுத்தினர். இவற்றுக்கென நீண்டகால உதவி என்ற அடிப்படையில் வெளிநாட்டுதவி பெறப்படலாயிற்று. இந்த நிலையில் நேரடியாக அபிவிருத்திக்குத் தேவைப்படும் பொறிகளையும் கருவிகளையும் இன்றியமையாத மூலப்பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கான நிதியை அதிகரிக்கும் தேவையை கருத்தில் கொண்டு ஏற்றுமதி விரிவாக்க ஊக்குவிப்புக்கள் அதிகரிக்கப்படலாயின.

அந்நிய செலாவணி உழைப்புக்கான மற்ருெரு வழியான பணிகளின் ஏற்றுமதி உழைப்பு நம்பிக்கை தரத்தக்க முறையில் மாற்றமடையவில்லை. அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளில் உடல் உழைப்பாளருக்கு நீண்டகாலத்தில் தொழில் வாய்ப்பு கிடைக்கும் என்பது உறுதியற்றது. மலிவானவேறு ஆசிய நாடுகளின் மிகை ஊழியம் அங்கு நகர்த்தப்படுவது அதிகரித்து வருவதுடன் நிர்மாண வேலைகள் பெருமளவு முடிவுறும் நிலையை அடைந்து வருதல், ஈரான்– ஈராக் யுத்தம் போன்ற சூழல்களும் இலங்கையருக்கான தொழில் வாய்ப்பை பெரிதும் மட்டுப்படுத்துவனவாயுள்ளன. இதனுல் தனியார் மாற்றல்களாக கிடைக்கும் செலாவணி வருமானம் ஸ்திரமற்றதாகவே அமையும். இத்தகைய போக்குகளும் ஏற்றுமதி வியாபாரத்தை பலமான கட்டமைப்புடன் விரிவாக்குவதற்கான ஊக்குவிப்புகளை வழங்குவதில் தற்போதைய அரசாங்கம் அதிகளவு கவனம் செலுத்த வேண்டியதாயிற்று.

## ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

### (1) நிறுவன உதவி

ஏற்றுமதி ஊக்குவிப்பு தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளையும் ஒழுங்குமுறையுடன் மேற்கொள்வதற்குப் பல நிறுவனங்களைத் தொடக்குவதில் அரசு அக்கறை காட்டியது.

### 1.1 ஏற்றுமதி அபிவிருத்திச்சபை

ஏற்றுமதி அபிவிருத்திக்காக தொடக்கப்பட்ட முன்னணி நிறுவனம் இதுவாகும். 1979 ஜூனில் ஜனுதிபதியைத் தலைவராகக் கொண்ட அமைச்சர் குழாமின் வழிகாட்டலின் கீழ் இது தொடக்கப்பட்டது.

இந்நிறுவனம் கொள்கை அறிவுறுத்தல், செயல் திட்டம், தேசிய திட்டம் போன்றவற்றைப் பொறுப்பேற்றல், ஏற்றுமதியின் உற்பத்திக்கு உதவுதல், சந்தைப்படுத்தல், ஏற்றுமதியைத் தடைப்படுத்தும் உற்பத்தி, நிதி சார்ந்த பிரச்சினைகளை அடையாளம் கண்டு, தீர்க்க உதவுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் பொறுப்புடன் செயல்படுவதாகும்.

இதன்முயற்சியினுல் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(1) பல ஏற்றுமதி விடயங்களின் தடைகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் அபிவிருத்திக்கு உதவியும் மேலதிக ஊக்கமும் வழங்கும் செயல்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

(2) ஏற்றுமதிப் பண்டங்களின் உற்பத்திக்கு நியாயமான வட்டியில் கடன்

வழங்கும் திட்டம் தொடக்கப் பட்டது.

(3) ஏற்றுமதிக்காக ஆபரணங்களைத் தயாரிப்பவர்களுக்கு வேண்டிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

(4) இறக்குமதித் தீர்வை சலுகைத் திட்டத்தை (Import Duty Rebate Scheme) தயாரித்து, அதன்படி தீர்வைகளை மீள வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டது.

(5) ஏற்றுமதி விரிவாக்க கொடைத் திட்டம் (Export Expansion Grant Scheme), ஜனாதிபதி ஏற்றுமதிப் பரிசுத் திட்டம் (Presidential Export Award Scheme) போன்றவற்றை அறிமுகம் செய்தது.

(6) சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர் ஆகியோர் பங்கு கொள்ளத்தக்க வரையறுக்கப்பட்ட கம்பனிகளை உருவாக்குவது பற்றிய சாத்தியக் கூறுகளை அறிவதில் கவனம் செலுத்தியுள்ளது.

(7) சந்தைப்படுத்தல் அபிவிருத்தி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டுவரும் பழங்களைத் தகரத்திலடைக்கும் தொழிற்சாலை நடவடிக்கைகளை பொறுப்பேற்பதிலும், மாதிரிச்செயல் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கும் முயன்றது.

(8) சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சிகளில் கலந்து கொள்ள நிதி உதவுதல்.

(9) கடற் பொருட்களின் ஆராய்ச்சிக்கான ஆய்வுகூடம் ஒன்று நிறுவுவதில் கவனம் செலுத்துகிறது.

(10) கைத்தறிக் கைத்தொழிலின் சந்தைப் படுத்தல் அபிவிருத்திக்கென செயல் திட்டம் தொடங்குவதில் கவனம் செலுத்துகிறது.

(11) பொதுநலவாய செயலகத்துடன் இணைந்து சிலவகை உற்பத்திகளின் நிரம்பல் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வதில் கவனம்செலுத்துகிறது.

(12) சபையின் பல்வேறு நோக்கங்களுக்குமாக ஏற்றுமதி அபிவிருத்தி நிதி (Export Development Fund) ஒன்றை 1980ல் உருவாக்கியது.

இந்த நிறுவனம் 1979—1986 காலப் பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1983—87 காலப்பகுதிக்கென தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் (National Export Development Plan) ஒன்றை தொடக்கியது வருடாந்தம் 11சதவீத ஏற்றுமதி அதிகரிப்பை 12பில்லியன் [12000மில்லியன்] ரூபா மொத்த முதலீட்டு உதவியுடன் ஏற்படுத்த இத் திட்டம் முனைந்தது. எனினும் 1986வரை,மரபுவழி ஏற்றுமதிகளின் வீழ்ச்சியினால்,குறைந்தளவான வளர்ச்சியே கிடைத்தது.

ஏற்றுமதி நிதியைப் பொறுத்தவரை, மத்திய வங்கியின் நடுத்தவணை, நீண்டதவணை நிதியூடாக,ஏற்றுமதிசார்ந்த செயல் திட்டங்களுக்கு, மீள்நிதித்திட்டமிடல் அடிப்படையில், சலுகை நிதியைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்தி வந்துள்ளது இதன்படி முதலீட்டுத் தேவையில் 70% வரை—5மில்லியன் ரூபாவரை— 11% வட்டிப்படியும், 5மில்லியனுக்கு மேல்12% வட்டிப்படியும் பெறமுடியும். 1986ல் மாத்திரம் 35மில்லியன் மொத்த முதலீடு செய்தது.பலவிடயங்களில் ஏற்றுமதிசார் முயற்சிகளில் அடிப்படை மூலதனமாக, பங்கு மூலதனத்தில் 30% வரையிலான பங்குகளை இது கொள்வனவு செய்துள்ளது.

சுங்கத்தீர்வைச் சலுகைத்திட்டம் அண்மைக் காலங்களில் மேலும் அதிகரிக்கப்பட்டு 523 வகைக்கு வழங்கப்பட்டது. சுங்கத் தீர்வைச்சலுகை முறைக்குப்பதிலாக பிணைத் திட்டம்(Bond Scheme)தயாரிப்புத் தொழில்களுக்கு 1985, 1986 காலப்பகுதிகளிலும் வழங்கப்பட்டது.

ஏற்றுமதித் தொழிலுக்கான மூலப் பொருட்களை தீர்வைகள், மொத்த விற்பனை

வரிகள் என்பன செலுத்தாமல் இறக்குமதி செய்வதற்கான சான்றிதழ்கள் இச்சபையி ஞல் வழங்கப்பட்டன. 1986ல் 50ஏற்றுமதி நிறுவனங்களுக்கு இவ்வாறு 52 சான்றிதழ் கள் வழங்கப்பட்டன.

ஏற்றுமதி விரிவாக்க கொடைமுறையா னது முதலீடு சார்ந்த அதிகரித்த தொடர்பி ஞல் ஏற்றுமதி அபிவிருத்தி முதலீட்டு ஆதர வுத் திட்டம் எனத் திருத்தியமைக்கப்பட் டது இதில் வழங்கப்படும் கொடையில் 25% காசாகக் கொடுக்கப்படும் வேளை மிகுதி 75% ஏற்றுமதி அபிவிருத்திச் சான்றிதழ் வடிவில் கொடுபட்டது. இச் சான்றிதழுக்கு வட்டி யில்லை.

1985இன் செயற்பாடுகளின் அடிப்ப டையில் 1986இல் 47.6 மில்லியன் ரூபா காசாகவும் 65.4 மில்லியன் சான்றிதழாக வும் வழங்கப்பட்டன. சிற்றளவு ஏற்றுமதி சார்ந்த தயாரிப்புத் துறையினருக்கு மேல திகமாக தேவைப்படும் மூலதனத்தில் 80% வரை வட்டியில்லாக் கடனுக நேரடி நிதி உதவியை வழங்கிற்று.

ஏற்றுமதியாளர் அமையம் (Exporters' Forum) நாளாந்த ஏற்றுமதி சார்ந்த பிரச் சினைகளின் தீர்வுக்கு உதவுவதில் மிகவும் ஆற்றலுடன் பணியாற்றி வந்துள்ளது. 1986இல் ஆறு அமர்வுகளில் 152 விடயங் கள் ஆராயப்பட்டு, 50 விடயங்களில் தீர்வு கூறப்பட்டது.

ஏற்றுமதி உற்பத்திக் கிராமத்திட்டம் (Export Production Village Scheme)1981 இல் தொடக்கப்பட்டபோது, அதன் செயற் பாட்டில் இச் சபை மத்திய பங்கு வகித் தது. கிராமிய மட்டத்தில் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் கிராமிய மக்கள் வருமானம் பெறுதற்கு இத்திட்டம் உதவு வதுடன் ஏற்றுமதியையும் ஊக்குவிக்கும். தம்பதெனியாவில் தொடங்கிய இத் திட் டம் இதுவரை 31 திட்டங்கள் நிறைவேற இச் சபை உதவியுள்ளது.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் இச் சபை தொடர்ச்சியாக ஏற்றுமதியை ஊக் குவிப்பதில் அக்கறை செலுத்தி வருகிறது.

### 1.2 வர்த்தகக் கப்பற்றுறை தகவற் பணியகம்

(Trade And Shipping Information Service)

1981இல் இந் நிறுவனம் தொடக்கப் பட்டது. ஏற்றுமதியாளர்க்கு வேண்டிய கப்பல் ஒழுங்கு பற்றிய நடைமுறைத் தக வல்களை வழங்குகிறது. ஏற்றுமதியாளர், இறக்குமதியாளர், கப்பற்றுறையினர் ஆகி யோருக்கான இறக்குமதி, ஏற்றுமதி ஒழுங் குகள், தீர்வைகள், வர்த்தக நடைமுறை கள் பற்றிய விடயங்களில் ஆலோசனை வழங்கி வருகிறது. அத்துடன் வர்த்தகம் பற்றிய தகவல்களை விரைவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக தொலைத் தொடர் புச் சேவைகளையும் வழங்குகிறது. வர்த்த கம் பற்றிய அவ்வக் காலத்திற்கான தக வல்களை வழங்கக் கூடிய பல்வேறு ஒழுங் கான வெளியீடுகளையும் இப்பணியகம் வெளியிட்டு வருகின்றது.

### 1·3 ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுந்தாபனம் Sri Lanka Export Credit Insurance Corporation.

ஏற்றுமதிக் கொடு கடன் காப்புறுதியை வழங்குவதற்காக 1979 பெப்ரவரியிலிருந்து இயங்கத் தொடங்கிய இக் கூட்டுத்தாபனம் உற்பத்தி, ஏற்றுமதி என்ற இரு அடிப் படைகளிலும் பன்முகப்படுத்தும் முயற்சி யிலும் பிரதான இடத்தை வகித்து வந்தது. இது இரு பிரதான நோக்கங்களின் படி தன் முயற்சிகளை மேற்கொண்டது. அவை

(1) ஏற்றுமதிக் கொடுப்பனவுகள்

(2) காப்புறுதிக் கொடு கடன் உத்தரவாதம்.

இந் நிறுவனம் வர்த்தகம் சார்ந்த, வர்த்தகம் சாராத இழப்புக்களினுல் ஏற்று மதி வருவாய்கள் இழக்கப்படும் போது அவற்றுக்குக் காப்புறுதி வழங்கும். இது மூன்று வகையான உத்தரவாதங்களை வழங் கத் தீர்மானித்தது.

(அ) கப்பலில் ஏற்றுதற்கு முன்னரான கொடுகடன் உத்தரவாதம்.

(ஆ) கப்பலில் ஏற்றிய பின்னுள்ள கொடுகடன் உத்தரவாதம்.

(இ) ஏற்றுமதி செயலாற்றல் கொடுகடன் உத்தரவாதம்.

சில சிறிய ஏற்றுமதியாளர்கள் உள்நாட்டு வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதில் உள்ள சிரமங்களை அகற்றும் நோக்கத்துடன் அவர்களுக்கு இந் நிறுவனம் உத்தரவாதம் அளித்து வந்துள்ளது. 1983ல் 440 உத்தரவாதங்களை வழங்கியது. இதன் பெறுமதி 1020 மில்லியன் பெறுமதியுடையதாயிருந்தது. மூன்று வகையான உத்தரவாதத்தின் கீழ் 1986 முடிவில் 1202 மில்லியன் பெறுமதியான 537 உத்தரவாதங்களை வழங்கியிருந்தது.

ஏற்றுமதியாளர் தமது ஏற்றுமதிப் பண்டங்களுக்குரிய பண வருமானத்தைப்பெறத் தவறும்போது, அல்லது பெறுவதில் தாமதம் ஏற்படும்போது அவற்றில் 80% — 85% வரை பாதுகாப்பு வழங்க இதன் காப்புறுதிப் பத்திரங்கள் உதவுகின்றன. பழைய ஏற்றுமதியாளர்களும், புதிய ஏற்றுமதியாளர்களும் தமது ஏற்றுமதியை விரிவுபடுத்திக் கொள்வதற்கு இதன் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. ஏற்றுமதியாளர்களைப் பாதிக்கக்கூடிய குற்றப்பட்டியலுள்ள வாங்குனங்கள், வாங்கும் நாடுகள் பற்றிய தகவல்களை வழங்குவதன் மூலம் பணம் தவறிப் போகும் நிலைமையையும், கடனிறுக்கப்படா நிலைமையையும் தடுக்கிறது. 1986 முடிவுவரை இவ்வாறு 291 காப்புறுதிகள் 627 மில்லியன் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தன.

இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணியிலான வீழ்ச்சி நிலைமைகளினால் இங்கிருந்து ஏற்றுமதியாளர் பெறக்கூடிய வருமானங்கள் தாமதமாகின்றன. அல்லது கிடைக்காமலே போய் விடுகின்றன. இத்தகைய பாதகமான சர்வதேச பொருளாதார நிலைமைகளில், ஏற்றுமதியாளர்க்கு உதவியளிப்பதில் இந் நிறுவனம் மிக முக்கியமான பங்கு வகித்துவருகின்றது.

தற்போது பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கம்பனிகள் கலைக்கப்படுவது அதிகரிப்பதாலும், இலங்கையின் தேயிலையில் நச்சத்தன்மையுள்ளதென்ற வதந்தி பரவியிருப்பதனாலும் கூட ஏற்றுமதியாளர் பாதிக்கப்படுவது அதிகரிக்கின்றது. இத்தகைய பின்னணியில் இக் கூட்டுத்தாபனத்தின் பங்கு சிறப்பானதாகவே அமைகிறது.

## (2) பன்னாட்டு ஒத்துழைப்பு

இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளான முதல் விளைவு விவசாய ஏற்றுமதிகளை சர்வதேசச் சந்தையில் பாதுகாப்பதற்கு இத்தகைய ஏற்றுமதி நாடுகளிடையிலான கூட்டு நடவடிக்கைகள் அதிகம் பயனுடையன. அவற்றின் ஊடாக சுயபாதுகாப்பும், பேரம் பேசும் ஆற்றலும் ஏற்படும் இதில் தற்போதைய அரசாங்கம் கூடியளவு கவனம் செலுத்தியே வந்துள்ளது அவ்வாறான பிரதான நடவடிக்கைகளை பின் வருமாறு நோக்க முடியும்.

(i) 'உங்டாட்' அமைப்பின் நிகழ்ச்சித் திட்டத்தில் அடக்கப்பட்ட பத்துப் பண்டங்களில் தேயிலையும் உள்ளடக்கப்பட்டுள்ளது 1978 ஜனவரி 9—13 வரை ஜெனீவாவில் நடைபெற்ற தொடக்க கூட்டம் ஆகஸ்டில் தேயிலைக்கான பன்னாட்டு ஒப்பந்தம் பற்றிய உடன்பாட்டுக்கு வழி வகுத்தது, இதே ஆண்டில் உற்பத்தி, ஏற்றுமதி தொடர்பான நாடுகளில் பன்னாட்டு இருப்பு வைப்பது பற்றிய சாத்தியக் கூறுபற்றிஆராய இலங்கையில் ஒரு மகாநாடும் கூட்டப்பட்டது.

இதே ஆண்டில் இயற்கை றப்பர் உற்பத்தி நாடுகளுடன் இணைந்து கொழும்பில் இறப்பர் விலை, தாங்கியிருப்பு பற்றி ஆராயப்பட்டது.

(ii) 1979 லும் தேயிலை, இறப்பர் ஆகியன தொடர்பான பன்னாட்டு ஒத்துழைப்பு பற்றிய கலந்துரையாடல்களில் இலங்கை பங்கு'பற்றியது. தேயிலை தாங்கியிருப்பை ஏற்படுத்துவதற்கான உடன்படிக்கையும் நிறைவேற்றப்பட்டது. இறப்பருக்குமான

தாங்கியிருப்பு உடன்படிக்கையும் ஜெனீவாவில் செய்யப்பட்டது.

(iii) 1980 நவம்பரில் சர்வதேச இயற்கை றப்பர் கவுன்சிலில் முழுமையான அங்கத்தவராக அங்கீகரிக்கப்பட்டது. வளர்முக நாடுகளினுல் அதிக முதன்மையளிக்கப்படும் சர்வதேச பண்ட ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கும் பொது நிதியத்துக்குமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. சீனு, பிலிப்பைன்ஸ், மாலைதீவு சார்ந்த வர்த்தக ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. பிடவை ஏற்றுமதி தொடர்பான அனுமதிப் பங்குபற்றிய சலுகை ஒப்பந்தங்களை ஐக்கிய அமெரிக்கா, சுவீடன், கனடா, நோர்வே, ஐரோப்பிய பொருளாதார சமூகம் போன்றவற்றுடனும் மேற்கொண்டது. ஐரோப்பிய பொருளாதார சமூகத்தினுல் நிதியளிக்கப்பட்டனவாக டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளில் வர்த்தகத்திற்கும் முதலீட்டுக்குமான நிலையங்கள் உருவாக்கப்பட்டன. ஜேர்மனி, பெல்ஜியம், இத்தாலி போன்ற நாடுகளில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளும் நடாத்தப்பட்டன.

(iv) 1985 ஒக்டோபரில் முடிவுற இருந்த பன்னுட்டு இயற்கை இறப்பர் ஒப்பந்தம் 1987 ஒக்டோபர் வரையிலான இருவருட காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

இவ்வாறு இலங்கை தனது மரபுவழி ஏற்றுமதிகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச கூட்டுறவு நடவடிக்கைகளில் கூடிய அளவு அக்கறை காட்டிவந்துள்ளது. பழைய மரபுவழி ஏற்றுமதியாளர்களுக்கும், புதிய ஏற்றுமதியாளர்களுக்கும் இடையிலான அனுமதிப் பங்கு ஒதுக்கீடுகள் தொடர்பான அடிப்படை வேறுபாடுகள் இத்தகைய பன்னுட்டு ஒத்துழைப்புக்கள் அதிகம் வெற்றி பெறுதற்குத் தடையாயுள்ளன.

## (3) தீர்வைகள்

சர்வதேச சந்தைக்கேற்றதாக தீர்வைகளை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளில் இக் காலத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. தேயிலை, இறப்பர், தெங்கு, சிறு ஏற்றுமதிகள் போன்ற பலவற்றிலும் விலை, தொகை, பெறுமதி தொடர்பாக தீர்வைகளை மாற்றியமைப்பதிலும், சலுகைகளை வழங்குவதிலும் கூடியளவு அக்கறை காட்டப்பட்டது. இத் தீர்வை மாற்றங்கள் போட்டி நாடுகளின் எதிர் நடவடிக்கைகளைப் பொறுத்தே வெற்றியளிக்கத்தக்கனவாயிருந்தன.

1977ன் பின் ஏற்றுமதி ஊக்குவிப்பு நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

(i) 1978ல், உடன் தேயிலைக்கு கிலோவுக்கு 40 ரூபாவிலிருந்து 20 ரூபாவுக்கு ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டது. பச்சைத் தேயிலையில் 15.50 சதத்திலிருந்து 13.50 சதத்திற்கு குறைக்கப்பட்டது.

(ii) 1979ல் தேயிலை ஏற்றுமதித் தீர்வை கிலோ ஒன்றிற்கு 5 ரூபாவினுல் குறைக்கப்பட்டது. இதனுல் உற்பத்தியாளர் இலாப எல்லை உயர ஏற்றுமதி ஊக்குவிப்பு அதிகரிக்கும். தீர்வைகளைக் குறைப்பது நுகர்வோருக்கே நன்மை பயக்கும் என்றும் இதற்குப் பதிலாக உற்பத்தியாளர் மானியங்களை வழங்குவது அதிகளவு பயனுடையதென்ற கருத்தும் இக் காலத்தில் இருந்தது.

கறுவா தவிர்ந்த ஏனைய சிறு வேளாண்மைப் பயிர்கள் மீதான தீர்வைகளும் இவ்வாண்டில் திருப்பிப் பெறப்பட்டன.

(iii) 1980 ஜூலை 1லிருந்து பொதிகளில் அடைக்கப்பட்ட தேயிலைக்கான தீர்வை 10.50லிருந்து 8.50க்கு குறைக்கப்பட்டது.

(iv) 1984ம் ஆண்டிலும் தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய மூன்று முதன்மைஏற்றுமதிப் பண்டங்களின் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் இவற்றிலான முதலீடுகளைத் தூண்

டும் நோக்குடன் குறைக்கப்பட்டன வெவ்வேறு வகையான தேயிலைக்கும் வெவ்வேறு அளவில் தீர்வைகள் குறைக்கப்பட்டன.

இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வை 1984 ஜூலையில் 2ரூபாவினல் குறைக்கப்பட்டது. 1984 நவம்பரில், குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழுவின் விதப்புரையின் படி கைத்தொழிலுக்கு ஊக்கமளிக்க சேராக்கப்பட்ட தீர்வை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. வெளியீட்டில் 50 சதவீதத்தை அல்லது அதிலும் கூடியளவை ஏற்றுமதி செய்யும் கைத்தொழில்களில் பயன்படுத்தும் பொறிகளின் இறக்குமதிகளின் மீதான வரிகள் நீக்கப்பட்டன.

(v) சர்வதேச சந்தையில் போட்டியிடும் ஆற்றலை அதிகரிக்கச்செய்வதற்காக தேயிலை, தெங்கு ஆகியவற்றின் ஏற்றுமதித் தீர்வைகள் 1985லும் குறைக்கப்பட்டன. 1985 நவம்பர் 14லிருந்து இவை நடைமுறைக்கு வந்தன. காரீய ஏற்றுமதிகள் மீதான தீர்வைகள் 25சதவீதத்திலிருந்து 15சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

(vi) 1986லும் தொடர்ச்சியாக தெங்கு உற்பத்தி மீதான தீர்வைகள் குறைக்கப்பட்டன.

## (4) ஏனைய நடவடிக்கைகள்

4.1 அரசாங்கம் மரபுவழி ஏற்றுமதிகளின் உற்பத்தியை ஊக்குவிக்க உதவிமானியம் வழங்கும் கொள்கைகளையும் கையாண்டு வந்தது. 1978மே மாதத்திலிருந்து தேயிலை நிலங்களை மறுசீரமைக்க உதவு தொகை வழங்கும் திட்டத்தை பின்பற்றியது.உதவுதொகைகள் ஒவ்வொரு பாதீட்டின் போதும் மாற்றியமைக்கப்பட்டன. 1978நவம்பரிலிருந்து இறப்பர், மீளப் பயிரிடலுக்கும் 1978ஜூலையிலிருந்து தெங்கு புதிய பயிரிடுகை, மீளப் பயிரிடுகை என்பவற்றுக்கும் உதவு தொகை வழங்கப்பட்டது. சிறு ஏற்றுமதிகள் தொடர்பாகவும் இவ்வகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

4.2 சிறு உடமையாளருக்கு ஊக்கமளிக்க தெரியப்பட்ட சிலவகை ஏற்றுமதிகளுக்கென உத்தரவாத விலை வழங்கும் திட்டங்களையும் 1977க்குப் பின் அரசாங்கம் மேற்கொண்டது.

4.3 1984ல் ஏற்றுமதியாளர்க்கு மேலதிகமான ஊக்கத்தை வழங்குவதற்கென அவர்களுக்கான கடன்களுக்குரிய வட்டியில் சலுகை வழங்கும் திட்டம் (Interest Rebate Scheme) ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

4.4 1981–ல் மத்திய வங்கியானது தேசிய கடன் திட்டம்(National Credit Plan) ஒன்றைத் தொடக்கியது. முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய துறைகளுக்கு வணிகவங்கிகளின் கடன்களை திருப்பிவிடுவதில் இத்திட்டம் கவனம் செலுத்தியிருந்தது. ஏற்றுமதிகளுக்கு கடன் வழங்குவதற்கு இது முன்னுரிமை வழங்கியது. 1982லும் மொத்தக் கொடுகடனில் 18சதவீதம் இத்துறைக்கு கொடுபட்டிருந்தது ஏற்றுமதிக்கு வேண்டிய நடுத்தர, நீண்ட தவணைக் கொடுகடன்கள் செயற்திட்டநிதியிடலில் முக்கியமானதாகக் கருதப்பட்டது. இதற்காக செயற்திட்ட மொத்தச் செலவினை ஈடுசெய்வதற்கு 80சதவீதத்திலிருந்து 100சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது. இதற்கு அமைவாக வட்டி வீதங்களும் மாற்றியமைக்கப்பட்டன.

4.5 1977 நவம்பரில் ரூபாவின் பெறுமதியானது 100சதவீதம்குறைக்கப்பட்டதுடன் நாணயமாற்றுச் சந்தையிலான கேள்வி, நிரம்பல் நிலைமைகளுக்கேற்ப பரிமாற்று விகிதம் மாறுதற்கும் வகை செய்தது. இது ஒப்பீட்டு ரீதியில் ஏற்றுமதி விலைகளை சாதகமாக்கி ஏற்றுமதிக் கேள்வியை அதிகரிக்கும் என கருதப்பட்டது.

4.6 முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களினல் ஏற்றுமதிக் கைத் தொழிலா

ளர்க்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் வரி விடுதலை, வரிச்சலுகை, உள்ளமைப்பு வசதிகளின் விரிவாக்கம் என்ற வடிவில் அமைந்தன. கட்டுநாயக்க வலயம், பியகம வலயங்களில் ஏற்றுமதிக்கான கைத்தொழில்கள் அதிகரித்தன. 1986 முடிவுவரை இவற்றின் ஏற்றுமதிப் பெறுமதி 5395.8 மில்லியனாயிருந்தது. இவற்றில் தலாதொழிலாளிக்கான ஆடைக் கைத் தொழில் ஏற்றுமதி வருமானம் 1985 ல் 114,992 ரூபாவிலிருந்து 1986 ல் 131,685 ரூபாவாக அதிகரித்தது.

## முடிவுரை

தற்போதைய அரசாங்கம் ஏற்றுமதிக்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளைப் பல்வேறு வழிகளில் மேற்கொண்டு வருகின்றபோதிலும், விளைவுகள் மனநிறைவு தருவனவாயில்லை.

எத்துணை முயற்சிகளாலும் மரபு வழியல்லா ஏற்றுமதிகள் நம்பிக்கை தரத்தக்க முன்னேற்றத்தை அடையத்தவறியிருந்தன.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் பிரதான ஏற்றுமதிக் கைத்தொழிலான ஆடைக் கைத்தொழிலுக்கு எதிராக ஐரோப்பிய பொருளாதார சமூகம், ஐக்கிய அமெரிக்கா போன்றன விதிக்கும் "கோட்டா" (Quota) முறைக்கட்டுப்பாடுகளும் அதிருப்தியை அதிகரிக்கச் செய்கின்றன.

நாட்டின் அதிகரிக்கும் கடன்களை தீர்க்கும் நோக்கில் ஏற்றுமதி வருமான அதிகரிப்பு திருப்தி தருவதாயில்லை. கடன் சேவைக் கொடுப்பனவை பண்டங்கள், சேவைகளின் ஏற்றுமதி வருமானத்தின் விகிதமாகக் கணிக்கும் கடன் சேவை விகிதம் 1977 ல் 16.0 ஆபிருந்து 1986 ல் 25.2 ஆக அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏற்றுமதி வருமான அதிகரிப்பு இறக்குமதிச் செலவுகளின் அதிகரிப்புடன் ஒப்பிடும்போது திருப்தியற்ற முறையிலேயே அதிகரித்தது. இதனால் வியாபார மீதியும் பாதகமாகியே சென்றது. 1977 ல் 49 சி. எ. உ மில்லியனாயிருந்த வியாபார மீதி 1986 ல் —624 சி. எ. உ மில்லியனாக' உயர்ந்திருந்தமை அதிருப்தியை ஏற்படுத்துவதாகும்.

இதனால் நாட்டின் உற்பத்திப் பெருக்கம், சர்வதேச நிலைமைகள் என்பவற்றிலும் சீரான போக்குகள் எதிர் காலத்தில் தென்பட்டாலன்றி அரசின் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் மிகச் பெரியளவு சாதக விளைவுகளை எதிர்பார்ப்பது கடினமாகவேயிருக்கும்.

## வர்த்தகமாற்று விகிதம்
(1981 = 100)

| ஆண்டு | ஏற்றுமதி விலை | இறக்குமதி விலை | வர்த்தக மாற்று விகிதம் |
|---|---|---|---|
| 1979 | 82 | 76 | 109 |
| 1980 | 92 | 90 | 102 |
| 1981 | 100 | 100 | 100 |
| 1982 | 98 | 107 | 92 |
| 1983 | 125 | 110 | 113 |
| 1984 | 160 | 119 | 134 |
| 1985 | 142 | 132 | 108 |
| 1986 | 126 | 124 | 102 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

# சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

அ. குமாரவேலு B. A. (Hons) (Cey)

ஏற்றுமதி விவசாயப் பொருட்களை பெருந்தோட்ட விவசாயப் பொருட்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் என பாகுபடுத்துவது வழக்கமாகும். சிறு ஏற்றுமதிப் பயிர்களைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

(i) வாசனைத் திரவியங்கள்
(ii) பான வகைகள்
(iii) ஏனையவை.

வாசனைத்திரவியங்களாக கறுவா, ஏலம், கராம்பு, மிளகு, சாதிக்காய் ஆகியவையும் பானவகையாக கோப்பி, கொக்கோபோன்றவையும் ஏனையவை என்பதில் புகையிலை, வெற்றிலை, பாக்கு, பூவகைகள், காய்கறிகள் என்பனவையும் அடங்குகின்றன. வரலாற்று ரீதியில் இலங்கை வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதி வர்த்தகத்தில் அதிக இடத்தைப் பெற்றிருந்தது. பெருந்தோட்டப் பயிர்களின் வளர்ச்சியின் பின் இவை சிறு ஏற்றுமதிப பயிர்களாயின. இச்சிறு ஏற்றுமதிப்பயிர் இலங்கையின் ஏற்றுமதிப் பண்டச் சேர்க்கையில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. இப் பயிர்களிலும் வாசனைத் திரவியங்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. அவை ஏறக்குறைய 1000 அடிக்கு மேற்பட்ட மலைப்பிரதேசங்களில் பயிர்செய்யப் படுவனவாகும்.

சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைமுறையில் இருந்து வேறுபட்டவை. இவ் வகைப் பயிரினங்கள் வீட்டுத் தோட்ட அடிப்படையைக் கொண்டவை. விவசாயிகள் இதனை தமது வீட்டு வளவுகளில் பயிரிடுகின்றனர். ஓரளவுக்கு வர்த்தக அடிப்படையிலும் பயிர் செய்கின்றனர். வீட்டுத்தோட்ட அடிப்படையில் அதிகம் பயிரிடுகின்றபோது ஓர் திட்டமிட்ட பின்னணியில் இப் பயிர்ச் செய்கை அமைய முடியாதுள்ளது. தேயிலை, றபர், தெங்கு போன்று ஓர் ஒழுங்கான பயிர்ச் செய்கை முறையைப் பின்பற்றுவது கடினமானதாக அமைகின்றது. திட்டமிட்டு ஒழுங்கு முறையில் இப்பயிரினங்களை விருத்திசெய்ய முடியாத நிலையில் அல்லது விருப்பமில்லா நிலையில் விவசாயிகள் காணப்படுகின்றனர் என்று கூறினும் அது மிகைக் கூற்றாகாது.

நறுமணப் பயிர், குடிவகைப் பயிரான இச் சிறுவேளாண்மைப் பயிர்கள் வீட்டுத் தோட்டத்திற்கூட கலப்புப் பயிர்களாகவே அமைகின்றன. கராம்பு, ஏலக்காய், சாதிக்காய், சிற்றநெல்லா, கொக்கோ, மிளகு, கறுவா, கோப்பி போன்ற பயிரினங்கள் அவற்றின் காலநிலைத் தேவைகளுக்கேற்ப. சில மாவட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மாத்தளை, கண்டி, கேகாலை, பதுளை, காலி, மாத்தறை, குருநாகல் ஆகிய முக்கிய மாவட்டங்களில் இப் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன. கறுவா, கோப்பி, மிளகு ஆகிய பயிர்கள் குறிப்பிடத்தக்களவு பரப்பில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகின்றன. கலப்புப்பயிரினமாக வீட்டுத்தோட்டங்களில் பயிரிடப்படுவதினால் பயிரிடப்பட்ட பரப்

பளவையோ அல்லது உற்பத்தித் தொகையையோ கணிப்பதில் இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. இதனுல் இவ்வுற்பத்திகளின் உள்நாட்டு நுகர்வு, இருப்பு மாற்றங்கள் மிகச் சிறிதானவை என்ற எடுகோளின்படி ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் உற்பத்தியின் மாற்றங்கள் மத்திய வங்கியால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

## ஏற்றுமதியில் அதன் பங்கு

இச் சிறு ஏற்றுமதிப்பயிர்கள் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க பங்கிணைப் பெறுகின்றன. மொத்த ஏற்றுமதியில் இவை கொண்டுள்ள பங்கிணைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஆண்டு | மொத்த ஏற்றுமதியில் சத வீதம் |
|---|---|
| 1981 | 6.6 |
| 1982 | 6.9 |
| 1983 | 5.9 |
| 1984 | 3.7 |
| 1985 | 3.8 |

மொத்த ஏற்றுமதியில் சிறு ஏற்றுமதிப் பயிர்கடந்த சில ஆண்டுகளில் வீழ்ச்சியைக் காட்டியுள்ளன. ஆயினும் சராசரியாக மொத்த ஏற்றுமதியில் இப்பயிரினம் 5% அல்லது 6%த்தைப் பெறுகின்றன. சிறு ஏற்றுமதிப் பயிர்த்துறையின் செயலாற்றம் அண்மையாண்டுகளில் சமமின்றி இருந்த வேளையில் ஏற்றுமதி வருமானங்கள் பெருமளவு ஏற்ற இறக்கங்களைக் காட்டாது கேள்வி நிரம்பல் நிலைமைகளுக்கு சந்தையின் ஈடுபாட்டைப் பெருமளவிற்குப் பிரதிபலித்து வந்துள்ளது. ஆயினும் 83, 84,85ம் ஆண்டுகளில் சி.எ.உ. நியதிகளில் ஏற்றுமதி வருவாய்கள் முறையே 9%, 10%, 7% என்ற வகையில் வீழ்ச்சியடைந்துள்ளன. இவ் வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாக கராம்பு, மரக்கறிகள், தயாரிக்கப்படாத புகையிலை, வெற்றிலை என்பனவற்றின் ஏற்றுமதி அளவும் பெறுமதியும் குறைந்தமை அமைகின்றன. இச் சிறுஏற்றுமதிப் பயிர்களினுள்ளும் முதன்மை ஸ்தானத்தை கறுவாவே பெறுகிறது. ஏறக்குறைய மொத்த சிறு ஏற்றுமதிப் பயிரில் 20%த்தை கறுவா பெற்றுவந்தது. 84ல் 21% ஆகவும் 85ல் 23%மாகவும் அமைந்து கறுவா முன்னணிப் பயிராக அமைந்துள்ளது.

## உற்பத்தி தொடர்பான பிரச்சனைகள்

சிறு ஏற்றுமதிப்பயிர். ஏற்றுமதித் துறையில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆயினும் இம் முக்கிய துறையின் செயலாற்றம் பல காரணிகளால் மட்டுப்படுத்தப்படுகின்றது. இப் பயிர்ச் செய்கை கலப்பு இனப் பயிர்ச்செய்கையாக வீட்டுத்தோட்ட அடிப்படையில் அமைவதால் இப் பயிர்ச் செய்கை இரண்டாம் தர வருவாய் பெறும் மூலமாக உள்ளது. அதாவது விவசாயிகள் இதனை ஓர் உப வருமானப் பயிரினமாகவே கருதுகின்றனர் என

| ஏற்றுமதி உழைப்புக்கள் (மில். ரூபா) | (S.D.Rகளில்) |
|---|---|
| 1399 | 61.7 |
| 1495 | 65.1 |
| 1486 | 59 1 |
| 1391 | 53 3 |
| 1365 | 49.4 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

எண்ணத் தோன்றுகின்றது. இதனுல் சிறந்த பயிர்ச் செய்கை வழிமுறைகளைப் பின்பற்றுவதில் ஊக்கமின்மை ஏற்படுகின்றது. விலைகள் உயர்வடையும் சந்தர்ப்பத்தில் உற்பத்தியைக் களவாடும் நடைமுறை இப் பிரதேசங்களில் பொதுவாக நடைபெற்றுவருகின்றது. இதனுல் உற்பத்கியில் ஊக்கம் குன்றும் மன நிலை விவசாயிகளிடையே தென்படுகின்றது இக் களவு நிலை பயிர்ச் செய்கையாளரிடையே ஒரு பயத்தை ஏற்படுத்துவதால் முதிர்ச்சியடையும் முன்னும் கொய்யும் பழக்கம் வேரூன்றி விடுகின்றது. இதனுல் உற்பத்தியின் தரம் மட்டுமன்றி அதன் அளவும் பாதிக்கப்பட்டு விடுகின்றது கொறிக்கும் விலங்குகளினுல் உற்பத்தி சேதம் அடைதல் உற்பத்தியாளர் எதிர்நோக்கும் இன்னெரு பிரச்சினையாகும். இத் துறைக்கான உதவு தொகைகள் கவர்ச்சியற்று இருக்கின்றன. இனக் கலப்பு பயிரிடல் பொருட்கள் போதிய அளவுக்குக் காணப்படாமை புதிய பயிரிடலைத் தடை செய்கின்றது. இதனுல்

குறைந்தளவு உற்பத்தி ஆற்றல் கொண்ட வயது முதிர்ந்த மரங்கள் உற்பத்தியில் தொடர்ச்சியாக இருக்க வழிவகுக்கின்றது. சிதறிய அடிப்படையில் பயிர்ச் செய்கை நடைபெறுகின்றது. சிதறுண்ட நிலங்கள் காரணமாக விரிவாக்கல் நடைமுறைகளைச் சிறப்பாகச் செய்யத் தடையாகவுள்ளது. அத்துடன் முகாமை விரிவாக்க நடவடிக்கைகளுக்கும் இது தடையாகவுள்ளது. இப் பிரதேசங்களில் அறுவடைக் காலத்தில் போதிய தொழிலாளர் கிடைப்பது அருந்தலாகவுள்ளது. தொழிலாளர்களுக்கான போட்டியும் பயிர்ச் செய்கையாளர் எதிர்நோக்குகின்ற இன்னொரு பிரச்சினையாகும். சந்தை அமைப்பும் உற்பத்தியாளர்களுக்கு உயர் விலைகள் கிடைப்பதைத் தடைசெய்து விடுகின்றன. ஒழுங்குபடுத்தப்பட்ட பயிர்ச் செய்கையாக அமையாமையால் இவற்றின் நிரம்பலின் அளவு தெரிவதில்லை. இதனால் கேள்வி எவ்வளவு என உணரப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளப்படுவதில்லை. பற்றுக்குறை நிலைகள், மிகை நிலைகள் விலைத் தளம்பங்கள் ஏற்படுகின்றன. இத் துறையின் இயல்பு காரணமாக செயற்திறன் வாய்ந்த ஒரு கொடு கடன் திட்டத்தை அமுலாக்கவோ, அல்லது வேறு வகையான ஊக்கப்பாடுகளை இனங் கண்டு செயற்படுத்துவதோ மிகக் கடினமானதாக அமைகின்றது.

## விருத்திக்கான வழி முறைகள்

இத்துறை சார்பாக விருத்திக்கான வழிமுறைகள் திட்டமிடப்படுதலில் பிரச்சினைகள் உள்ளன என்பது உண்மையாகும். ஏனைய பயிர் வகைகள் போன்று இவற்றின் உபயோகத்தை வரையறை செய்துகொண்டால் நிரந்தர வருமானம், வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். இத்துறையை ஆற்றல்மிக்க துறையாக மாற்றுதல் அவசரமும் அவசியமும் கூடிய ஒன்றாகும். இப் பயிர்களைக் கலப்பினப் பயிர்களாகப் பயிரிடுவதை ஊக்கமிழக்கச் செய்தல் வேண்டும். தனிப் பயிர்களாக பயிர் செய்யப்படுவதற்கு ஊக்கமளிக்கப்படவேண்டும். இத்துறை சார்பான ஆய்வுகள் மிகக் குறைந்தளவிலேயே இருந்துள்ளன. ஒப்பீட்டு ரீதியில் முக்கியத்துவம் குறைந்தே வழங்கப்பட்டுள்ளது. இத்துறையை மீள நன்னிலைப் படுத்துவதற்கான பயன்மிக்க தீர்வுகளைக் கண்டு, இத்துறையால் எதிர்நோக்கப்படும் இடர்ப்பாடுகளை இனங்காண இத்துறையின் மீது அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு ஆய்வு அவசியமாகின்றது. முகாமை விரிவாக்க பணியாளர்கள் அதிகளவு நேரத்தை விரிவாக்கப பணிகளுக்குச் செலுத்தக்கூடிய வகையில் முகாமை விரிவாக்கப் பணிகள் சீர் திருத்தப்பட வேண்டும். சிதறிய பயிரின முறையினால் தற்போது அவர்கள் அதிக அக்கறை எடுக்க முடியாதுள்ளது. இத்துறைக்கான உதவு தொகைகள் அதிகரிக்கப்பட வேண்டும். உதவு தொகைகள் கிடைக்கும் என்பதையும், எவ்வாறான உதவுதொகைகள் வழங்கப்படுகின்றன என்பதையும் பயிர்ச் செய்கையாளரில் கணிசமான தொகையினர் அறிந்திருப்பதில்லை. அதனால் அவர்களின் ஊக்கம் குன்றுகின்றது. வழங்கப்படவேண்டிய உதவு தொகைகள் உற்பத்திச் செலவோடு இணைந்தமையக்கூடியதாக இருத்தல் வேண்டும். இதற்கான சந்தை வாய்ப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டு உயர்வான உற்பத்தியாளர் விலைகள் கிடைக்கச் செய்யவேண்டும். காலத்திற்குக் காலம் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவந்துள்ளன. ஆனால் அவை இடர்ப்பாடுகளைத் தீர்க்கக் கூடிய வல்லாண்மையைக் கொண்டிருக்கவில்லை. பொருத்தமான கொடுகடன் திட்டம் செயற்படுத்தப்படவேண்டும். நவீன உத்திகள் விளக்கப்பட வேண்டும். அதற்கேற்ப குறுங்கால, நீண்ட கால அடிப்படையில் திட்டங்களை அமைத்தால் இத்துறை நன்னிலைப்படும்.

# அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள்

ந. பேரின்பநாதன்

பொருளாதார அமைப்பு முறைகள் எவ்வகைப்பட்டவையாக இருப்பினும்—முதலாளித்துவ பொருளாதாரம், சமூக உடைமைப் பொருளாதாரம், கலப்புப் பொருளாதாரம் – அவை சில பொதுவான பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளன. அவையே அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் என அழைக்கப்படுகின்றன. மனித குலத்தின் தேவைகளுடன் ஒப்பிடுகின்ற போது, உற்பத்திச் சாதனங்கள் பற்றுக் குறையாக உள்ளமையே இப் பிரச்சனைகள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது. ஒவ்வொரு பொருளாதார அமைப்புக்களும் இப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து பொருளியலாளர்கள் ஆர்வமுடையவர்களாக உள்ளார்கள். பின்வரும் விடயங்கள் ஒவ்வொரு பொருளாதார அமைப்புக்களாலும் எதிர்நோக்கப்படும் அடிப்படைப்பிரச்சனைகளாக அமைகின்றன.

1. கிடைக்கின்ற வளங்கள் யாவும் ஒரு பொருளாதாரத்தினுல் பயன்படுத்தப்படுகின்றனவா? அல்லது அவ்வளங்களில் சில பயன்படுத்தப்படாமல் வீணாக இருக்கின்றனவா? அதாவது வேலையில்லாமல் இருக்கின்றனவா?

2. பயன்படுத்தப்படுகின்ற உற்பத்திக்காரணிகளால் என்ன பொருளை எந்த அளவில் உற்பத்தி செய்தல் வேண்டும்?

3. உற்பத்தி செய்யப்படுகின்ற வெவ்வேறு வகையான பொருட்களும் எந்த முறையில் உற்பத்தி செய்யப்படுதல் வேண்டும்? அதாவது எந்தத் தொழில் நுட்பத்தினை பாவித்து பொருட்களை உற்பத்தி செய்தல் வேண்டும்?

4. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் சமூகத்தில் உள்ள மக்களுக்கிடையே எவ்வாறு பங்கிடப்படுகின்றது?

5. உற்பத்திச் சாதனங்கள் யாவும் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா?

6. பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு அதிகரித்துச் செல்கின்றதா? அல்லது வீழ்ச்சி அடைகின்றதா? அல்லது மாறுமல் உள்ளதா? இப் பிரச்சினை பொருளாதார வளர்ச்சி பற்றியதாகும்.

7. சேமிப்பினதும், பணத்தினதும் கொள்வனவு சக்தி நிலையாக உள்ளதா? அல்லது பண வீக்கத்தின் காரணமாக வீழ்ச்சியடையடைந்து செல்கின்றதா?

நீண்ட காலமாக முதலில் உள்ள ஆறு பிரச்சினைகளுமே அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளாகக் கருதப்பட்டு வந்தன. அண்மைக் காலத்தில் R. G. லிப்சி என்பவர் ஏழாவது பிரச்சினையையும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளில் ஒன்றுக கவனத்தில் கொண்டுள்ளார். இங்கு மேற் கூறிய ஏழு பிரச்சனைகளும் எவற்றைக் கருதுகின்றன. என்பது பற்றியே விளக்கப்படுகின்றது.

1. கிடைக்கின்ற வளங்கள் யாவும் ஒரு பொருளாதாரத்திலுள் பூரணமாகப்பயன் படுத்தப்படுகின்றனவா? அல்லது அவ் வளங்களில் சில பயன்படுத்தப்படாமல் வீணாக இருக்கின்றனவா? அதாவது வேலை இல்லாமல் இருக்கின்றனவா?

மனித குலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான வளங்கள் பற்றாக் குறையாக உள்ளன. இந் நிலையில் அருமை யாகக் கிடைக்கின்ற வளங்களை மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன் படுத்தாமல் வீணாகக் கிடக்கின்றதா என வினவுதல் ஆச்சரியத்தைத் தரலாம். ஏனெனில் மக்களின்தேவைகளோ எண்ணற்றவை. இந்நிலையில் தேவைகளைப் பூர்த்தி செய்ய இருக்கின்ற வளங்கள் அருமையானவை. எனவே அருமையான வளங்கள் யாவும் பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படுத் தப்படும் என்றே பலரும் எண்ணுவர் எந்த சமூகமும் உற்பத்திச் சாதனங்கள் வீணாகக் கிடப்பதை அனுமதிக்கமாட்டாது எனினும் முதலாளித்துவ பொருளாதாரங்களில் பல காலங்களில் பல உற்பத்திக் காரணிகள் பல் வேறு காரணங்களால் பயன்படுத்தப்படா மல் கிடந்து உள்ளன. குறிப்பாக தேக்க காலத்தில் பயன்படுத்தப்படாமல் கிடந்த சாதனங்களின் அளவு கூடுதலாக இருந்துள்ளது. தேக்க காலத்தில் பலர் வேலைசெய்ய விரும்பியபோதும் வேலை கிடைக்கவில்லை. பலருக்கு வேலைவாய்ப்புக்களை அளிக்கக்கூடிய தொழிற்சாலைகள்கூட தேக்க காலத்தில் இயங்காமல் மூடப்பட்டு இருந்தன. மூலப் பொருட்கள், தொழிலாளர்கள், நிருவாகிகள் என்பன அதிகளவில் காணப்பட்டாலும் கூட தொழிற்சாலைகள் இயங்காததால் உற் பத்திச் சாதனங்கள் பெருமளவில் பயன் படுத்தப்படவில்லை. உற்பத்திச் சாதனங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பது பொருளா தார ரீதியிலும் சமூகரீதியிலும் நன்மை பயக் கும் விடயமல்ல. உற்பத்திக் காரணிகள் பயன்படுத்தப்படாமல் இருப்பின், அவற் றைப் பயன்படுத்தப்படும் போது உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாமலிருக்கும். இது பொருளா தார ரீதியான நட்டமாகும். மேலும் நீண்ட காலத்திற்கு இளைஞர்கள் வேலையில்லாமல் இருப்பது சமூகத்தில் தீய செயல்களைப் புரிவதற்கு வழிவகுக்கும். இது சமூக ரீதியான நட்டமாகும். எனவே உற்பத்திக்காரணிகள் ஏன் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதற்கான காரணங்களைக் கண்டுபிடித் தல் வேண்டும். அதற்கான காரணங்களை அறிந்து கொண்டால் எதிர்காலத்தில் அத்த கைய நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருப்பதற்கு அது துணை புரியும்.

1930ம் ஆண்டில் ஏற்பட்ட தேக்க நிலையின் காரணமாக அமெரிக்கா மற்றும் மேற்கைரோப்பிய நாடுகளில் வேலையின்மை பெருமளவில் காணப்பட்டது. சிலகாலங் களில் அந்நாடுகளில் உள்ள உழைக்கும் தொகையினரில் நான்கு பேருக்கு ஒருவர் என்ற வகையில் வேலையில்லாமல் இருந்த நிலையும் உண்டு. இந்நிலை அக்காலத் தில் இருந்த பொருளியலாளரின் சிந்தனையைத் தாண்டி இதற்கான கார ணங்களை அறியவைத்தது. அதன்பயன் ஜே. எம். கெயின்ஸ் (J. M. Keynes) என்பவர் 1936-ம் ஆண்டில் வெளியிட்ட நூலான "வேலைவாய்ப்பு, வட்டி, பணம் என்பன பற்றிய பொதுக்கொள்கை" என்ற நூலில் உற்பத்திச் சாதனங்கள் விருப்பமில்லாத நிலையில் கூட ஏன் பயன்படுத்தப்படாமல் கிடந்தன என்பதற்கான காரணங்களைக் கூறினர். கெயின்சின் கருத்துடன் பொரு ளியல் கோட்பாட்டின் வியாபகம் விரிவாக் கப்பட்டதுடன் முதலாளித்துவ பொருளா தாரத்தில் பொருளியல் சக்திகளின் இயக் கத்தினை தெளிவாக விளங்கிக்கொள்வதி லும் முன்னேற்றம் காணப்பட்டது. முத லாளித்துவ பொருளாதாரத்தில் வேலை மட்டம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது, ஏன் வேலையின்மை காணப்படுகின்றது என்பது போன்ற விபரங்களை பொருளிய லில் 'பேரினப் பொருளியல்' என்ற பகுதி ஆராய்கிறது.

2. பயன் படுத்தப்படுகின்ற உற்பத்திக் காரணிகளால் என்ன பொருளை எந்தள வில் உற்பத்தி செய்யவேண்டும்?

என்ன பொருளை? எந்த அளவில் உற் பத்தி செய்யவேண்டும் என்ற பிரச்சனையும் உற்பத்திக்காரணிகள் மனித தேவைகளு டன் ஒப்பிடுகின்ற போது அருமைத்தன் மையாக உள்ளது என்பதில் இருந்தே

தோன்றுகின்றது. உற்பத்திக் காரணிகள் அருமையாக இல்லாமல் ஏராளமாகக் கிடைக்குமாயின் என்ன பொருளை? எந்தளவில் உற்பத்தி செய்யவேண்டும் என்ற பிரச்சனை தோன்றமாட்டாது. ஏனெனில் உற்பத்திக் காரணிகள் வறையறையற்றிருப்பின் என்ன பொருளையும் எந்தளவிலும் உற்பத்தி செய்யலாம், ஆனல் வளங்கள் வரையறுக்கப்பட்டிருப்பதால் சமூகத்தின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. இதனல் எந்தப் பொருளை எந்தளவில் உற்பத்திசெய்ய வேண்டும் என்ற முடிவை ஒவ்வொரு பொருளாதாரமும் எடுக்க வேண்டும். எனவே குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதில்லை என்று சமூகம் முடிவு செய்திருப்பின் அப்பொருள் குறித்த தேவையானது, பூர்த்தி செய்யப் படாமல் இருக்கும்.

நாட்டில் நிறைதொழில் மட்டம் நிலவும்போது, சமூகம் ஒரு பொருளின் உற்பத்தியை பெருமளவு உற்பத்தி செய்ய விரும்பின், இன்னொரு பொருளின் உற்பத்திக்குப் பயன் படுத்தப்பட்டுள்ள சாதனங்களை அந்தப் பொருளின் உற்பத்தியில் இருந்து எடுத்து அதனை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ள பொருளில் பயன்படுத்தல் வேண்டும். எனவே சமூகத்திற்கு அத்தியாவசியமாக உள்ள பொருளை அதிகளவில் உற்பத்தி செய்யத் தீர்மானித்தால் அப் பொருளின் உற்பத்திக்காக அதிகளவு சாதனங்களை ஒதுக்குதல் வேண்டும். எனவே என்ன பொருளை, எந்தளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற பிரச்சனை சாதன ஒதுக்கீடு பற்றிய பிரச்சனையைக் குறித்து நிற்கின்றது.

சாதனங்கள் அருமையாக இருப்பதால் சமூகம் ஒரு பொருளை மேலதிகமாக உற்பத்தி செய்ய முனையும்போது இன்னொரு பொருளை உற்பத்தி செய்வதைக் குறைத்தல் வேண்டும். உதாரணமாக சமாதான காலங்களில் உணவு, உடை, மற்றும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களை கூடுதலாக உற்பத்திசெய்ய முனையும்போது ஆயுத தளபாடங்களின் உற்பத்தியைக் குறைக்கவேண்டி இருக்கும். யுத்த காலத்தில் துப்பாக்கி, வெடி மருந்து, இராணுவ வாகனங்கள், இராணுவ விமானங்கள் போன்றவற்றைக் கூடுதலாக உற்பத்தி செய்ய வேண்டி இருப்பதால் அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியைக் குறைக்க வேண்டி ஏற்படலாம். இந் நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள, உற்பத்திச் சாதனங்களில் சிலவற்றை எடுத்து ஆயுத தளபாட உற்பத்தித் துறையில் புகுத்த வேண்டி இருக்கும். காரணம் வளங்கள் அருமையாக இருப்பதால் இருவகையான பொருட்களையும் ஒரே நேரத்தில் அதிகரிக்க முடியாமல் இருப்பதனலாகும்.

பல்வேறு வகையான சமூகங்களிலும் சாதன ஒதுக்கீட்டை எது தீர்மானிக்கின்றது என்பது பற்றிய சிந்தனை ஆரம்ப காலத்தில் இருந்தே பொருளியல் அறிஞர்களிடையே இருந்துவந்துள்ளது சாதன ஒதுக்கீட்டில் மாற்றங்களை ஏற்படுத்தினல் என்ன விளைவுகள் பொருளாதாரத்தில் ஏற்படும் என்பது பற்றியும் அவர்கள் சிந்தனை செய்து வந்துள்ளார்கள். எந்தவகையான பொருளாதாரமும், அது முதலாளித்துவமாக இருக்கலாம் அல்லது சம உடைமையாக இருக்கலாம் அல்லது கலப்புப் பொருளாதாரமாக இருக்கலாம். என்ன பொருளை எந்தளவில் உற்பத்தி செய்வது என்பது பற்றி தீர்மானத்தினை எடுப்பதற்கு, அதாவது சாதன ஒதுக்கீடு பற்றிய தீர்மானத்தினை எடுப்பதற்கு ஏதாவது ஒரு முறையினை வைத்திருத்தல் வேண்டும். முதலாளித்துவ பொருளாதாரத்தில் சாதனை ஒதுக்கீடு பற்றிய பிரச்சினை அதாவது என்ன பொருளை எந்தளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது பற்றிய தீர்மானமானது பெரும்பாலும் விலைப்பொறி முறையினூடாக செய்யப்படுகின்றது. இதனல் விலைப்பொறிமுறை இயக்கம் பற்றிய விளக்கம் இங்கு இன்றியமையாததாக அமைகின்றது. இதனைப் பற்றி பொருளியலில் 'விலைக் கோட்பாடு' அல்லது 'சிற்றினப் பொருளியல் கோட்பாடு' என்பது ஆய்வு செய்கின்றது.

3. **உற்பத்தி செய்யப்படுகின்ற வெவ்வேறு வகையான பொருட்களும் எந்த முறையில் உற்பத்தி செய்யப்படுதல் வேண்டும்? அதாவது எந்தத் தொழில் நுட்பத்தினைப்**

பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்தல் வேண்டும்?

என்ன பொருட்களை எந்தளவில் செய்ய வேண்டும் என்று தீர்மானித்த பின்னர் அப் பொருட்கள் யாரால் எந்த முறையில் உற்பத்தி செய்யப்படுதல் வேண்டுமென்பது பற்றித் தீர்மானித்தல் வேண்டும். பொருட்களை யார் உற்பத்தி செய்ய வேண்டும் என்று விடயத்தினை எடுக்கும் போது உற்பத்தியானது தனிப்பட்டவராலா? அல்லது அரசாங்கத்தினாலா? அல்லது கூட்டுத்தாபனத்தாலா? அல்லது கூட்டுப்பங்குக் கம்பனிகளாலா அல்லது இவை போன்ற பிற நிறுவனங்களாலா உற்பத்தி மேற்கொள்ளப்பட வேண்டு எனத் தீர்மானிக்கலாம். யார் உற்பத்தியை மேற்கொள்ளினும், அவர்கள் அப்பொருளை உற்பத்தி செய்வதற்கு சிறந்ததொரு முறையினைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்பதே இங்கு முக்கிய அம்சமாகும்.

பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பல்வேறு முறைகள் உள்ளன. அவற்றில் சிறந்த முறையினை பொருளாதாரம் தெரிந்தெடுத்தல் வேண்டும். உதாரணமாக நெல் உற்பத்தியினை எடுத்துக்கொண்டால் அதனை செறிந்த பயிர்ச் செய்கை மூலமோ,அல்லது பரந்த பயிர்ச் செய்கை மூலமோ மேற்கொள்ளலாம். அரிசி குத்துதலை எடுத்துக் கொண்டால் அதனை கைக் குத்தல் மூலமோ அல்லது இயந்திரக் குத்தல் மூலமோ செய்து கொள்ளலாம். துணி உற்பத்தியினை எடுத்துக் கொண்டால் அதனைக் கைத்தறி நெசவின் மூலமோ அல்லது பெரிய தொழிற்சாலைகள் மூலமோ செய்யலாம். எனவே குறிப்பிட்ட பொருளை உற்பத்திசெய்வதற்கு எந்த முறையினைத் தெரிந்தெடுத்தல் வேண்டும் என்பதை அரசாங்கம் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். எனவே இப்பிரச்சனையால் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட பிரச்சனையாக உள்ளது. ஒரே பொருளை ஒரு குறிப்பிட்ட அளவில் செய்வதற்கு பல்வேறு முறைகள் உள்ளனவெனினும் அப்பல்வேறு முறைகளும் பல்வேறு உற்பத்திக் காரணிகளை வெவ்வேறுபட்ட அளவில் வேண்டி நிற்கின்றன. சில முறைகள் உழைப்பை அதிகமாகவும் முதலைக் குறைவாகவும் வேண்டி நிற்கின்றன. இதற்கு உதாரணமாக கையினால் அரிசி குத்துதலைக் கூறலாம். உழைப்பை அதிகம் வேண்டி நிற்கும் தொழில்நுட்பத்தை 'உழைப்பு செறிவு வாய்ந்த தொழில்நுட்பம்' என்பர். பெரிய தொழிற்சாலை துணி உற்பத்திசெய்ய முனையும்போது உழைப்பிலும் பார்க்க முதல் அங்கே கூடுதலாகத் தேவைப்படுகின்றது. முதலை அதிகம் வேண்டி நிற்கும் தொழில்நுட்பத்தை 'முதல்செறிவு வாய்ந்ததொழில்நுட்பம்' என்று அழைப்பர். எனவே பொருளாதாரமானது பொருட்களை உற்பத்தி செய்ய முனையும்போது உழைப்பு செறிவு வாய்ந்த தொழில்நுட்பத்தையா அல்லது முதல் செறிவு வாய்ந்த தொழில் நுட்பத்தையா? அல்லது இரண்டுக்கும் இடையேயான நடுத்தர தொழில் நுட்பத்தையா? பயன்படுத்துவது என்ற தீர்மானித்தினை எடுத்தல் வேண்டும் என்பதுபற்றித் தீர்மானித்தல் வேண்டும்.

பொதுவாக 'எவ்வாறு உற்பத்தி செய்வது' என்ற பிரச்சனையானது உற்பத்திக் காரணிகளை எந்த வகையில் சேர்த்து உற்பத்தியினை மேற்கொள்ள வேண்டும் என்பதையே கருதுகின்றது. உற்பத்திக் காரணிகளின் அருமைத் தன்மையே தொழில்நுட்பத் தெரிவினைச் செய்ய வேண்டிய நிலையை உருவாக்குகின்றது. உற்பத்திக் காரணிகள் மிதமிஞ்சி இருப்பின் எந்த வழியையும் கையாண்டு பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் உற்பத்திக் காரணிகள் அருமையாக இருப்பதால் ஒருபொருளை உற்பத்தி செய்வதற்குப் பல வழிகள் இருந்த போதும், அவற்றில் சிறந்த, செலவுகுறைந்த வழியையே தெரிவுசெய்யவேண்டும். திறமை குறைந்த முறையில் பொருளாதாரம் வளங்களை உபயோகப்படுத்தின் உற்பத்தியைக் குறைவாகவே பெற்றுக்கொள்ள முடியும், எனவேசிறந்த தொழில்நுட்பத்தினை தெரிவு அவசியமானதாகும்.

பல்வேறு வழிகளுக்கிடையே தெரிவு செய்வதென்பது உற்பத்திக் காரணிகள் கிடைக்கும் அளவிலும் அவற்றின் விலையிலும் தங்கி உள்ளது. தேவையுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற போது, வளங்கள் பற்றாக் குறையாக உள்ளன என ஏற்கனவே நோக்கியுள்ளோம். பொருளாதார வளங்கள்யாவும் சமமற்ற முறையில் அருமையாக உள்ளன.

சில உற்பத்திக் காரணிகள் ஏனைய உற்பத்திக் காரணிகளைவிட மிகவும் அருமையாக உள்ளன. உதாரணமாக இந்தியா, இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளில் ஒப்பீட்டு ரீதியில் முதல் என்ற காரணியிலும் பார்க்க உழைப்பு என்ற காரணி அதிகமாக உள்ளது. இந்நாடுகளில் முதலிலும் பார்க்க உழைப்பு என்ற உற்பத்திக்காரணி மலிவானதாக இருக்கும். எனவே மலிவாகக் கிடைக்கும் காரணியை அதிகளவுக்குப் பயன்படுத்திச் செய்யக்கூடிய தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுதல் செலவைக் குறைப்பதற்கு ஒரு வழியாகும். மிக அருமையான காரணிகளை அதிகம் வேண்டி நிற்கும் தொழில்நுட்பத்தினை பின்பற்றுதல் செலவைக் கூட்டுவதாக இருக்கும்.

ஏனைய தொழில்நுட்ப முறைகளிலும் பார்க்க ஏன் குறிப்பிட்டஒரு தொழில்நுட்ப முறையினை பின்பற்றுதல் வேண்டும். அதனைப் பின்பற்றுவதால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பது பற்றிய விபரங்களை பொருளியலில் 'உற்பத்திக் கோட்பாடு' என்ற பகுதி ஆராய்கின்றது. உற்பத்திக் கோட்பாட்டில் உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையேயான தொடர்பு ஆராயப்படுகின்றது. உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையேயான பௌதிக ரீதியான தொடர்பு உற்பத்திச் செலவினைத் தீர்மானிக்கின்றது. உற்பத்திச் செலவு நிரம்பலைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு பெறுகின்றது. நிரம்பலும் கேள்வியும் சேர்ந்து பொருட்களின் விலையினைத் தீர்மானிக்கின்றன. எனவே உற்பத்திக் கோட்பாடென்பது விலைக்கோட்பாட்டின் ஒரு பகுதியாக அமைகின்றது.

**4. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் சமூகத்தில் உள்ள மக்களுக்கிடையே எவ்வாறு பங்கிடப்படுகின்றது? யாருக்காக உற்பத்தி செய்யப்படுகின்றது?**

தேசிய உற்பத்தியினை சமூகத்தில் உள்ள தனிப்பட்டவர்கள் குழுக்களுக்கிடையே எவ்வாறு பங்கிட்டுக் கொள்வது என்பதே இப் பிரச்சனையாகும். அடம்சிமித், றிக்காடோ ஆகியோரின் காலம் தொட்டே இப்பிரச்சனை ஆராயப்பட்டு வந்துள்ளது. 18ம் நூற்றாண்டில் சமூகத்தில் தொழிலாளிகள், முதலாளிகள், நிலப்பிரபுக்கள் என மூன்று வகையான வர்க்கத்தினர் காணப்பட்டனர். எனவே அக்காலத்தில் பங்கீட்டுக்கோட்பாடு விருத்தி செய்யப்பட்ட போது மேற்கூறிய மூன்று வர்க்கத்தினரிடையே உற்பத்தியானது எவ்வாறு பங்கிடப்படுகின்றது என்று விளக்கப்பட வேண்டி இருந்தது. தேசிய உற்பத்தியில் யார் கூடிய பங்கைப் பெறுதல் வேண்டும், யார் குறைந்த பங்கைப் பெறுதல் வேண்டும் என்பது பற்றிய ஆய்வு மிக ஆர்வத்தினைத் தரும் ஒரு விடயமாக அண்மைக் காலத்தில் வளர்ச்சி அடைந்து உள்ளது.

தேசிய உற்பத்தி பங்கிடானது பெரிதும் நாட்டில் பண வருமானம் எப்படிப் பங்கிடப்பட்டுள்ளது என்பதில் தங்கி உள்ளது அதிக பணம் வைத்திருப்பவர்கள் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளில் அதிகளவினைக் கொள்வனவு செய்யும் வசதி படைத்தவர்களாக உள்ளனர். குறைந்த பண வருமானத்தை வைத்திருப்பவர்கள் குறைந்தளவு பொருட்களையே கொள்வனவு செய்யும் வசதி படைத்தவர்களாக உள்ளனர். வருமானப் பங்கீடு நாட்டில் சமமாக இருக்குமாயின் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளும் சமமாகப் பங்கிடப்படும். நாட்டில் பண வருமானம் சமமாகப்பங்கிடப்பட்டிருக்காவிட்டால் ஒரு சிலர் கூடியளவு பங்கையும் பலர் குறைந்த பங்கையும் தேசிய உற்பத்தியில் பெற்றுக் கொள்வர். இந் நிலையில் வருமானம் எவ்வாறு பெறப்படுகின்றது என்பது முக்கிய வினவாகும்.

ஒருவர் தான் செய்யும் வேலையினாலோ அல்லது தனக்குச் சொந்தமாக உள்ள நிலம், முதல் போன்றவை செய்யும் சேவைகளாலோ வருமானத்தினைப் பெற்றுக் கொள்வார். நிலம், முதல், உழைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகள் தேசிய உற்பத்திக்கு தமது சேவைகளை வழங்குகின்றன. அவ்வாறு வழங்கும் சேவைகளுக்கு வெகுமதியாக விலைகள் என்ற வடிவில் வருமானத்தினைப்பெற்றுக் கொள்கின்றன. எனவே எக் காரணிக்கு கூடுதலாக விலையுள்ளதோ அக் காரணியை கூடுதலாக வைத்திருப்பவர் அதிக வருமானத்தினைப் பெறுகின்றார். நிலத்திற்கு வாடகை என்ற வடிவிலும் முதலுக்கு வட்டி என்ற வடிவிலும் உழைப்புக்கு கூலி என் வடிவிலும்

முயற்சிக்கு இலாபம் என்ற வடிவிலும் விலைகள் அல்லது கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. உழைப்பு என்ற காரணிக்கு கூடிய விலை உள்ள போது மொத்ததேசிய உற்பத்தியில் பெரும் பங்கினை தொழிலாளர் வர்க்கம் பெறக் கூடியதாக இருக்கும் எனவே இறுதியில் நோக்கின் உற்பத்திக் காரணிகளின் பங்கீடு சமமாக இருப்பின் தேசிய உற்பத்தியும் சமமாகப் பங்கிடப்பட்டிருக்கும் என்பதைஅறியலாம். உற்பத்திக்காரணிகளின் விலையினை அவற்றின் கேள்வி நிரம்பல் என்பன தீர்மானிக்கின்றன. மேலும் முதலாளித்துவ பொருளதாரங்களில் அரசாங்கத் தலையீடும் வருமானப் பங்கீட்டில் மாற்றத்தினை ஏற்படுத்த வல்லதாக உள்ளது. அரசாங்கத் தலையீட்டினால் வருமானப் பங்கீட்டில் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி அண்மைக் காலத்தில் ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இது பற்றிய விபரங்கள் பொருளியலில் பங்கீட்டு கோட்பாடு என்ற பகுதியில் ஆராயப்படுகின்றது.

**5 உற்பத்திச் சாதனங்கள் யாவும் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா?**

இப்பிரச்சனை பொருளாதாரத் திறமை அல்லது நலனை உச்சப்படுத்தல் பற்றிய விடயத்தினை ஆராய்வதாக உள்ளது. உற்பத்தியிலும் பங்கீட்டிலும் திறமை காணப்படுகின்றதா என்பதே இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும் உற்பத்திக் காரணிகளின் அருமைத் தன்மையில் இருந்தே இப்பிரச்சனையும் தோன்றுகின்றது. உற்பத்திக் காரணிகள் மிதமிஞ்சிய அளவில் இருப்பின் திறமை பற்றிக் கவலைப்படாமல் இருக்கலாம். ஆனுல் உற்பத்திச் சாதனங்கள் அருமையானவை. எனவே ஒரு பொருளாதாரம் திறமையான வகையில் அவற்றைப் பயன்படுத்தல் வேண்டும். என்னபொருட்களை எந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டும்? அவை எவ்வாறு உற்பத்தி செய்யப்படவேண்டும்? உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் யாருக்கிடையே பங்கிடப்படுதல் வேண்டும் என்பவற்றை ஆராய்ந்த பின்னர் உற்பத்தியும் பங்கிடும் திறமையாக உள்ளதா என்பதை வினவுதல் இயல்பானதொன்ருகும். ஒரு பொருளினது உற்பத்தியைக் குறைக்காமல் இன்ஞெரு பொருளினது உற்பத்தியை அதிகரிக்க முடியாது என்ற நிலை காணப்படுகின்ற போதே உற்பத்தியில் திறமை, என்பது காணப்படும். அதாவது உற்பத்திச் சாதன ஒதுக்கீட்டில் எந்த வித மாற்றத்தினைச் செய்தாலும் ஒரு பொருளின் உற்பத்தியைக் குறைக்காமல் இன்ஞெரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க முடியாத நிலையையே உற்பத்தியில் திறமை என்பது கருதுகின்றது. மறுபுறமாக நோக்கின் ஒரு பொருளினது உற்பத்தியினைக் குறைக்காமல் இன்ஞெரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்ற நிலை காணப்படின் அங்கு திறமையின்மை நிலவுகின்றது என்பது பொருளாகும். இதன் கருத்து யாதெனில் அங்கு இன்னும் உற்பத்தியைப் பெருக்கக் கூடிய நிலை உள்ளதால் தற்போதைய உற்பத்தி முறை திறமையற்றதாக உள்ளதாக உள்ளது என்பதாகும். திறமையற்றதாக உள்ளதால் அத் திறமையின்மையினை நீக்குவதன் மூலம் உற்பத்தியில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. எந்த ஒரு மறு பங்கீட்டினுலும் ஒருவரது நலனைக் குறைக்காமல் இன்ஞெருவரது நலனை அதிகரிக்க முடியாது என்ற நிலை காணப்படுமாயின் அங்கு பங்கீட்டில் திறமை காணப்படுகின்றது என்பது அதன் பொருளாகும். மறுவடிவமாக நோக்கின் ஒருவரது நலனைக் குறைக்காமல் இன்ஞெருவரது நலனை அதிகரிக்கக் கூடிய நிலை காணப்படுமாயின் அங்கு பங்கீட்டில் திறமையின்மையைக் குறிப்பதுடன் தற்போதைய பங்கீட்டு நிலை பொருளாதார நலனை உச்சநிலையில் வைத்திருப்பதற்கு உகந்ததல்ல என்பதையும் குறித்து நிற்கும் எனவே பங்கீட்டில் மாற்றத்தினைச் செய்வதன் மூலம் பொருளாதார நலனை உச்சப்படுத்தலாம்.

பொதுவாக எல்லாவகையான பொருளாதாரங்களிலும் பங்கீட்டிலும், உற்பத்தியிலும் திறமையின்மை இருப்பதாக நம்பப்படுகின்றது. இத்திறமையின்மைகள் நீக்கப்படின் தேசிய உற்பத்தி அதிகரிப்பதுடன் மக்கள் நலனும் உயர்த்தப்படும். ஆனுல் இத்திறமையின்மைகளை நீக்குவதற்கு செலவு ஏற்படும். இவ்வாறு ஏற்படும் செலவுகள் திறமையின்மைகளை நீக்குவதன் மூலமாகப் பெறும் நன்மைகளைவிட குறைவாக இருப்

பின், உற்பத்தியிலும், பங்கீட்டிலும் காணப் படும் திறமையின்மைகள் யாவை எனக் கண்டுபிடிப்பதிலும், நீக்குவதிலும் நேரத்தையும், முயற்சியையும் செலவிடலாம். ஆனால் பெறக்கூடிய நன்மைகளைவிட செலவுகள் கூடுதலாக இருப்பின் திறமையின்மைகளை நீக்க முனைதல் சிக்கனமற்றவிடயமாகும். எனினும் திறமையின்மைகளை துல்லியமாகக் கண்டுபிடிப்பது கடினமான காரியமாக இருப்பதால் அவற்றைத் தொகைரீதியாக அளவிட்டு அவற்றின் முக்கியத்துவத்தினைச்சரியான முறையில் அளவிட முடியாதுள்ளது. எனவே இத்திறமையின்மைகளை நீக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப் படவேண்டுமா? இல்லையா என்பதற்குத் தெளிவான விடை இன்னும் கொடுக்கப் படவில்லை, இதுபற்றிய விபரங்களை பொருளியலில் ஒரு பகுதியான சிற்றினப் பொருளாதாரத்தில் ' நலனுய்வுப் பொருளியல் ' என்ற பகுதிக்குள் ஆராயப்படுகின்றன.

6. பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு அதிகரித்துச் செல்கின்றதா? அல்லது வீழ்ச்சி அடைகின்றதா? அல்லது மாறுமல் உள்ளதா?

அண்மைக்காலத்தில் பொருளியலாளர்களை மிகவும் கவர்ந்துள்ள பிரச்சனையாக பொருளாதார வளர்ச்சி பற்றிய இப்பிரச்சனை அமைகின்றது. காலத்தினூடாக பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு அதிகரித்துச் செல்கின்றதா? அல்லது குறைகின்றதா? அல்லது நிலையாக இருக்கின்றதா? என்பதைப் பற்றி அறிதல் மிகவும் முக்கியமானதாகும். பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு அதிகரித்துச் செல்கின்றபோது எதிர்காலத்தில் கூடுதலான அளவு பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டால் மக்கள் கூடுதலான அளவு பொருள்களை நுகரலாம். இதனுல் மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரிக்கும். காலத்தினுடாக அதிகளவு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யக்கூடிய தகுதியை பொருளாதாரம் பெற்றுக்கொள்வதையே பொருளாதார வளர்ச்சி என்பர். மேலைத் தேச நாடுகள் பல அண்மைக்காலத்தில் பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ச்சியாகப் பெற்றதால் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் பெருமளவு அதிகரித்துள்ளது.

பொருளாதார வளர்ச்சியானது நுகர்வு சேமிப்பு பற்றிய தீர்மானத்திலும் தங்கியுள்ளது. சேமிப்பே முதலீட்டிற்கு அடிப்படை. நிகழ் காலத்தில் செய்யப்படும் உற்பத்தி அனைத்தையும் நுகர்வு செய்யின் சேமிப்பு இல்லாமல் போக முதலீடு இல்லாமல் போகும். இதனுல் முதலாக்கம் ஏற்படாமல் போகும். இதன் விளைவாக பொருளாதார வளர்ச்சியும் ஏற்படாது. எனவே நிகழ் காலத்தில் மூலதன ஆக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலமே எதிர் காலத்தில் பொருளாதார வளர்ச்சியை துரிதப் படுத்தலாம். இதற்கு நிகழ்கால உற்பத்தி முழுவதையும் நுகர்வு செய்யாமல் ஒரு பகுதியை சேமிப்பாக வைத்திருப்பதும் அவசியமாக அமைகின்றது. அவ்வாறுயின் தான் எதிர் காலத்தில் எழக் கூடிய மக்களது தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். எனவே நுகர்வு, சேமிப்பு ஆகியவை பற்றிய தீர்மானம் இங்கு கூறுவது யாதெனில் கிடைக்கத் தக்க வளங்களில் எவ்வளவினை நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தவேண்டுமென்பதையும், எவ்வளவினை முதலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யப்பயன் படுத்த வேண்டும் என்பதையுமாகும். அதாவது மொத்த தேசிய உற்பத்தியில் என்ன விகிதாசாரத்தில் நுகர்வோர் பொருட்களும் அமைய வேண்டும் என்பதேயாகும். முதலீட்டுப் பொருட்கள் அமையும் விகிதாசாரத்தைப் பொறுத்தே பொருளாதார வளர்ச்சி தங்கியிருக்கும்.

முதலீட்டுப் பொருட்களை ஏன் உற்பத்தி செய்ய வேண்டும்? எதிர்காலத்தில் எழக் கூடிய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அதுவே அடிப்படையாக இருக்கின்றது என்பதனுலாகும். எனவே நுகர்வு, சேமிப்பு என்பவற்றுக் கிடையேயான தீர்மானம் என்பது நிகழ்காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் இடையேயான தெரிவென்பது வெளிப்படையாகும். நிகழ்காலத்தில் கணிசமான அளவு சேமித்து மூலதன ஆக்கத்தினை அதிகரிப்பதன் மூலமே எதிர்காலத்தில் அதிகமான பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யலாம். எதிர் காலத்தில் எழக் கூடிய தேவைகளில் பெரும்பாலும் நிறைவு செய்யக்கூடிய நிலையினை

யடையும் போது அதனை பொருளாதார அபிவிருத்தி என்பர். இந் நிலையினை மூல தன ஆக்கம் அதிகரிப்பதன் மூலமே அடைய முடியும்.

சில பொருளாதாரங்களில் பொருளாதார வளர்ச்சி விரைவாகவும் சில பொருளாதாரங்களில் குறைவாகவும் ஏன் உள்ளது என்பது பற்றி பொருளியலாளர்கள் ஆடம்சிமித் காலம் தொட்டு கவனம் செலுத்தி வந்துள்ளனர். இது பற்றி 1930 களுக்குப்பின் பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இது பற்றிய விபரங்கள் பொருளியலில் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு என்ற விடயத்தின் கீழ் ஆராயப்படுகின்றது. ஹரட், டோமர், கல்டோர், ஜோன் ரொபின்சன், ஆர்தர் லூயிஸ், றக்னர் நேர்க்ஸ், சிங்கர், கேர்ஸ்மன் போன்றோராலும் வேறு பல அறிஞர்களாலும் இத்துறை குறித்து பல முக்கியமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனினும் இத்துறையில் மேலதிகமாகப் பெற வேண்டிய கருத்துக்கள் இன்னும் உள்ளன.

7. சேமிப்பினதும், பணத்தினதும் கொள்வனவுச் சக்தி நிலையாக உள்ளதா? அல்லது பணவீக்கத்தின் காரணமாக வீழ்ச்சியடைந்து செல்கின்றதா?

அண்மைக் காலத்தில் பண வீக்கமும் அடிப்படைப் பிரச்சனையாக கருதப்படுகின்றது. முதலாளித்துவ பொருளாதாரம், சமஉடமைப் பொருளாதாரம், கலப்பு பொருளாதாரம் ஆகிய மூன்று வகை பொருளாதாரமும் அண்மைக் காலத்தில் பண வீக்கப் பிரச்சனையை அனுபவித்துள்ளன. எனினும் முதலாளித்துவ பொருளாதாரம் பண வீக்கத்தினை நீண்ட காலம் தொடர்ச்சியாக அனுபவித்ததுடன் விலை மட்டத்தில் சடுதியான மாற்றங்களுக்கும் முகம் கொடுத்தன. சில காலங்களில் விலையில் அதிகரிப்பு சில காலங்களில் விலையில் குறைவும் ஏற்பட்டாலும் நீண்ட காலப் போக்கில் சராசரியாக விலைகள் உயர்ச்சியையே அடைந்துள்ளன. 1970களில் எண்ணெய் விலை ஏற்றத்தின் காரணமாக கைத்தொழில் நாடுகளும், விவசாயப் பொருள் நாடுகளும் பண வீக்கத்தினை கடுமையாக அனுபவித்தன.

பண வீக்கமானது பணத்தின் கொள்வனவுக் சக்தியைக் குறைப்பதனல் மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவதற்கு வழி ஏற்படுகின்றது. மேலும் சேமிப்பினைக் குறைக்கின்றது. வருமானப் பங்கீட்டில் சமமின்மையை ஏற்படுத்துகின்றது இவ்வாறு பல்வேறு தீய விளைவுகள் ஏற்படுவதனல் பண விக்கம் ஏற்படுத்துவதற்கான காரணங்கள் பற்றி பொருளியலாளர்கள் ஆய்வு செய்து பல்வேறு கருத்துக்களைக்கூறி உள்ளனர். அத்துடன் பல்வேறு நாடுகளில் அரசாங்கங்கள் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றன.

மேலே குறிப்பிட்ட ஏழு பிரச்சனைகளை விட வேறுபல பிரச்சனைகளையும் வெவ்வேறு பொருளாதாரங்கள் சிறப்பாக அனுபவிக்கக் கூடும். எனினும் மேலே கூறப்பட்ட பிரச்சனைகள் எல்லா வகையான பொருளாதாரங்களும் அனுபவிக்கின்றபடியால் அவற்றை அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் என அழைக்கின்றனர்.

## இலங்கையின் சனத்தொகை துறை ரீதியான பரம்பல் (சத வீதமாக)

| துறைகள் | 1971 | 1981 |
|---|---|---|
| நகரத்துறை | 22.4 | 21.5 |
| கிராமியத் துறை | 68.5 | 72.2 |
| தோட்டத் துறை | 9.1 | 6.3 |
| மொத்தம் | 100.0 | 100.0 |

ஆதாரம்: மத்திய வங்கி அறிக்கை

## மாணவர் பக்கம் :

# பொருட்கள் (Goods)

பொருளியலில் 'பொருள்' அல்லது 'பொருட்கள்' என்ற பதம் மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் எதையும் குறிக்கின்றது. எனவே பொருட்கள் மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பயன்பாட்டைக் கொண்டுள்ளன. காற்று, நீர், மேசை, கதிரை, அரிசி போன்றன பொருட்களுக்கான சில உதாரணங்களாகும். இப்பொருட்கள் தொட்டுணரத்தக்கவையாக— தேயிலை, பாண், கார் — இருக்கலாம். அல்லது சங்கீதம், நடனம், பொருளாதார ஆலோசனை போன்ற தொட்டுணரவியலாதவையாகவும் இருக்கலாம். முதலாவது வகையினை பண்டங்கள் (Commodities) இரண்டாவது வகையினை சேவைகள் என்றும் அழைப்பர். பண்டங்கள் அல்லது சேவைகள் என்பவை மனித விருப்பங்களை பூர்த்தி செய்யக் கூடிய தன்மையைப் பெற்றிருப்பதால் அவை பொருட்கள் என அழைக்கப்படுகின்றன.

வெவ்வேறு வகையான நோக்கில் பொருட்கள் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில முக்கியமான பிரிவுகளை நோக்குவோம்.

## இலவசப் பொருட்களும் பொருளாதாரப் பொருட்களும்

சமூகத்தைப் பொறுத்தமட்டில் விலை கொடுத்துப் பெறாத பொருட்களே இலவசப் பொருட்களாகும். சமூகத்தின் தேவையுடன் ஒப்பிடுகின்ற போது இவற்றின் நிரம்பல் மிக அதிகமாக இருப்பதால் அவற்றை இலவசமாகப் பெற முடிகின்றது. இதற்கு உதாரணமாக காற்று, நீர், சூரிய வெளிச்சம் போன்றவற்றைக் கூறலாம். இவ்விலவசப் பொருட்கள் மனிதனின் முயற்சியினாலோ அல்லது தியாகத்தினாலோ பெறப்பட்டவையல்ல. இயற்கையினால் வழங்கப்பட்டவையாகும். இதனால் செலவும் இல்லை. சூரிய வெளிச்சம், காற்று போன்றவற்றைப் பொறுத்தமட்டில் நிரம்பலில் எந்த வரையறையுமில்லை. இவற்றிற்கு எவரும் சொந்தம் கொண்டாடுவது மில்லை. அதாவது தனியார் உரிமையில்லை. இவற்றைப் பெற்றுக்கொள்வதில் எவரும் போட்டியிடுவதில்லையாதலால் இவற்றுக்கு விலையும் இல்லை.

சில இடங்களில் இலவசப் பொருட்களுக்கு விலை வழங்க வேண்டியும் ஏற்படுகின்றது. காரணம் சில இடங்களில் இப்பொருட்கள் தேவையுடன் ஒப்பிடுகின்ற போது அருமைத்தன்மையுடையனவாக அமைவதனாலாகும். உதாரணமாக பாலைவனப் பிரதேசங்களில் நீருக்கு விலை வழங்க வேண்டி ஏற்படுகின்றது. குளிர் பிரதேசங்களில் வசிப்போர் வெயிலைப் பெற்றுக் கொள்வதற்காக செலவு செய்து வெப்ப பிரதேசங்களுக்கு செல்வதையும் குறிப்பிடலாம்.

இயற்கையினால் வழங்கப்படும் ஒரு சில பொருட்களைத் தவிர சமூகத்திற்கு தேவையான ஏனைய பொருட்கள் யாவும் பொருளாதாரப் பொருட்களாகவேயுள்ளன.

சமூகத்தின் தேவையுடன் ஒப்பிடுகின்ற போது இவற்றில் நிரம்பல் பற்றுக்குறையாக இருப்பதால், இவற்றைப் பெறுவதில் போட்டி ஏற்பட அவற்றிற்கு விலைகொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. இப் பொருட்கள் யாவும் மனித முயற்சியினுல் உருவாக்கப் பட்டவையாகும். இதனுல் இப்பொருட்களுக்கு ஒருவரோ அல்லது சிலரோ சொந்தம் கொண்டாடுவர். சொந்தம் கொண்டாட முனைவதால் அவற்றை விலைக்கு விற்கவோ அல்லது வாங்கவோ பலர் முயல்கின்றனர். எனவே 'விலைகொடுத்து கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது என்ற தன்மை' இலவசப் பொருளுக்கும் பொருளாதாரப் பொருளுக்கும் உள்ள முக்கிய வேறுபாடாகும். இப் பொருளாதாரப் பொருளை பயன்படுத்துபவர்தான் அதற்கு விலை கொடுக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை அவ் விலையினை சமூகத்தில் உள்ள வேறு ஒருவரோ அல்லது வேறு சிலரோ வழங்கலாம். இவ்வாறு நோக்குகின்ற போது அரசாங்கத்தினுல் வழங்கப்படும் பாடசாலை மாணவர்க்கான இலவச பாடப் புத்தகங்கள் இலவசப் பொருள் அல்ல. அது ஒரு பொருளாதாரப் பொருளாகும். அதற்கான விலையினை அரசாங்கத்திற்கு வரிசெலுத்துவோரே கொடுக்கின்றனர். இவ்வாறு வேறு சிலர் வரி செலுத்தியமையால்தான் அரசாங்கம் அவற்றை இலவசமாக வழங்க, பாடசாலை மாணவர்கள் அதனை இலவசமாகப் பெற முடிகின்றது. இதற்கு உற்பத்திச் செலவுண்டு. சந்தர்ப்ப செலவுமுண்டு. ஏனெனில் இவ்வுற்பத்திக்கு செலவழித்த பணத்தை வேறு நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தியிருக்கலாம்.

பொருளியலானது பொருளாதாரப் பொருட்கள் பற்றியே பெரும்பாலும் ஆய்வு செய்கின்றது. பொருளாதாரப் பொருட்களின் பற்றுக்குறை காரணமாகவே பொருளியல் பிரச்சனைகள் தோன்றுகின்றன. அருமை காரணமாக இப்பொருட்களை சிறந்த முறையில் பயன்படுத்தவே பலரும் முனைகின்றனர். இப் பொருட்களுக்கு பரிவர்த்தனைப் பயன்பாடு என்பதுமுண்டு.

இயற்கையினுல் வழங்கப்படுகின்ற காற்று, சூரிய வெளிச்சம் போன்றனவற்றிற்கு சந்தர்ப்ப செலவு என்பது இல்லை. ஆனுல் வளங்கள் பற்றுக்குறையாக இருப்பதால் ஒரு பொருளாதாரப் பொருளை கூடுதலாக உற்பத்தி செய்யத் தீர்மானிக்கும் போது இன்னெரு பொருளாதாரப் பொருளின் உற்பத்தியைக் குறைக்க வேண்டி உள்ளது. இதனுல் பொருளாதாரப் பொருட்களைக் குறித்து சந்தர்ப்ப செலவு உள்ளது.

இங்கு நாம் கூறிக் கொள்ள விரும்பும் முக்கிய கருத்து யாதெனில்பொருளாதாரப் பொருட்களுக்கும், இலவசப் பொருட்களுக்குமிடையே இறுக்கமான நிரந்தரமான வேறுபாட்டைக் காண முடியாதென்பதே யாகும். இவ் வேறுபாடு காலம், இடம், சூழ்நிலை என்பவற்றைப் பொறுத்து தங்கி இருக்கும். இன்று குறிப்பிட்ட இடத்தில் இலவசமாக உள்ள பொருள் நாளை விலை கொடுத்து வாங்க வேண்டிய பொருளாதாரப் பொருளாகவும் அமையலாம். உதாரணமாக நகரங்களில் சூழல் மாசுபடுதல் காரணமாக 'நல்ல காற்று' விலைக்கு வாங்கப்படுதலைக் கூறலாம். சில இடங்களில் இலவசப் பொருளாகக் காணப்படும் ஒரு பொருள் இன்னேரிடத்தில் பொருளாதாரப்பொருளாக மாறுகின்றது. ஆற்றங்கரையோரத்தில் உள்ள ஒருவர் நீரை இலவசமாகப் பெற பெரிய நகரத்தில் உள்ள ஒருவர் அதனை விலை கொடுத்து வாங்கின்றுர். சுருங்கக் கூறின் அண்மைக்காலத்தில் வளர்ந்து வரும் சிக்கலான வாழ்க்கை முறையால் இலவசப் பொருட்களும் பொருளாதாரப் பொருட்களாக மாற்றமடையும் நிலையை எதிர்நோக்குகின்றன.

## இழிந்தரகப் பொருட்களும், கிஃப்பன் பொருட்களும்

## Inferior Goods and Giffen Goods

ஏனைய காரணிகள் மாற்றமடையாமல் உள்ளபோது வருமானம் அதிகரித்துச் செல்லும் நிலையில் குறிப்பிட்ட பொருளுக்கான கேள்வி குறையுமாயின் அப்பொருள் இழிந்தரகப் பொருட்கள் என அழைக்கப்படும். எனவே வருமானம் அதிகரிக்கின்ற போது இழிந்தரகப் பொருட்களுக்கான கேள்வி வளைகோடு இடப்பக்கம் நகரும். வருமானம் குறைகின்ற போது இப் பொருளுக்கான கேள்வி வளைகோடு வலப்

பக்கம் நகரும். வருமானம் அதிகரிக்கின்ற போது நுகர்வோர் தாம் ஏற்கனவே நுகர்ந்து வந்த பொருளுக்குப் பதிலாக தரம் கூடிய பொருளை நுகரக்கூடிய நிலையை அடைவதனால் முன்னர் தாம் நுகர்வு செய்து வந்த பொருளின் கொள்வனவைக் குறைப்பர். இதனால் அப்பொருள் இழிந்த ரகப் பொருளாகக் கருதப்படும். உதாரணமாக நுகர்வோரின் வருமானம் அதிகரிக்க மோட்டார் கார்களை பலர் வாங்குகின்றார்கள் என எடுத்துக் கொள்வோம். இதனால் முன்னர் கொள்வனவு செய்த சைக்கிள்களுக்கான கேள்வி குறையலாம். இந்நிலையில் சைக்கிள் இழிந்த ரகப் பொருட்களாகக் கருதப்படும். வருமானம் அதிகரிக்கும்போது இழிந்த ரகப் பொருட்களுக்கான கேள்வி குறைவடைவதால் அப்பொருள் குறித்த வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி எதிர்க்கணிய பெறுமதியுடையதாக இருக்கும்.

குறிப்பிட்ட பொருளின் விலையில் ஏற்படும் மாற்றத்தினால் அப்பொருளின் கொள்வனவுத் தொகையில் ஏற்படும் மாற்றத்தினை விலை விளைவு என்பர். இவ்விலை விளைவு வருமான விளைவினாலும் பிரதியீட்டு விளைவினாலும் தீர்மானிக்கப்படும். இழிந்தரகப் பொருட்களை பொறுத்த வருமான விளைவானது எப்போதும் எதிர்கணியமாக இருக்கும். எனினும் இவ்வெதிர்க்கணிய வருமான விளைவினை மீறத்தக்க வகையில் பதிலீட்டு விளைவு நேர்க்கணியமாக அமைவதனால் விலை குறையும்போது இழிந்தரகப் பொருளுக்கான கேள்வி அதிகரிக்கும். இதனை இழிந்த ரகப் பொருளுக்கான கேள்வி வளைகோடு மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாகச் செல்லும் சாதாரண கேள்வி வளைகோட்டைப் போன்றிருக்கும்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரித்தானிய புள்ளிவிபரவியலாளரான சேர் றொபர்ட் கிஃபன் (Sir Robert Giffen) என்பவர் மெய்ச்சான்றுகளினடிப்படையில் தெரிவித்த கருத்தில் இருந்து பெறப்பட்டதே 'கிஃபன் பண்டம்' என்னும் விடயமாகும். தற்காலத்தில் கிஃபன் பண்டம் பற்றிய கருத்து கேள்விக்கோட்பாட்டில் ஒரு முக்கிய ஆய்வாக உள்ளது. விலை குறைந்தால் கேள்வித் தொகை அதிகரிக்கும் விலை கூடினால் கேள்வித் தொகை குறையும், என்ற கேள்வி விதி எல்லாப் பொருட்களுக்கும் பொருத்தமுடையதாக இருக்க மாட்டாது என்பதை கிஃபன் நிரூபித்தார். கேள்வி விதிக்கு முரண்பாடாக அதாவது விலையுயர்ந்தால் கேள்வித் தொகை உயருவதும், விலை குறைந்தால் கேள்வித் தொகை குறைவதுமான தன்மையுடைய பொருட்களை கிஃபன் பண்டமென அழைப்பர். இத்தன்மையுடைய பொருட்களுக்கான கேள்வி வளைகோடு சாதாரண கேள்வி வளைகோட்டினைப் போன்ற தோற்றத்தினைக் கொண்டிராமல் மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாகச் செல்லும். அதாவது புறநடைக் கேள்வி வளைகோடு தோன்றும்.

19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொழிலாளர் வகுப்பினரின் நுகர்வமைப்பில் காணப்பட்ட நிலைமையை அவதானித்தே றொபர்ட் கிஃபன் இக் கருத்தினைக் கூறினர். தொழிலாளர்கள் தமது வருமானத்தில் பெரும் பகுதியை பாண் கொள்வனவு செய்வதில் செலவிட்டனர். இதுவே அவர்களுக்கு மலிவான உணவாகவும் இருந்தது. இந் நிலையில் பாணின் விலையில் ஏற்பட்ட உயர்வு அவர்களின் மெய் வருமானத்தினைக் குறைக்க அவர்களால் இறைச்சி, மீன் போன்ற உயர்ந்த விலையுடைய பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அவர்கள் பாணின் விலையுயர்ந்த போதும் அதனையே முன்னரிலும் பார்க்க கூடுதலாக கொள்வனவு செய்தனர். இது வழக்கமான கேள்வி விதிக்கு முரண்பட்டதாகக் காணப்பட்டதால் இதனை 'கிஃபனின் முரண்பாடு' என்றும் அழைப்பர்.

கிஃபன் பொருட்களைப் பொறுத்தவரையிலும் வருமான விளைவானது எப்போதும் எதிர்க் கணியமாகவே இருக்கும். இவ்வெதிர்க்கணிய வருமான விளைவானது நேர்க்கணிய பிரதியீட்டு விளைவையும் மீறத்தக்க வகையில் இருப்பதால் விலை குறையும் போது அப் பொருளின் கொள்வனவும் குறையும். ஒரு பொருள் கிஃபன் பொருளாக இருக்க வேண்டுமாயின் அது பின்வரும் தன்மைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. குறிப்பிட்ட பொருளின் மீது நுகர்வோர் தமது வருமானத்தில் பெரும் பகுதியை செலவழித்தல் வேண்டும்.
2. அப்பொருளுக்குரிய நேர்க்கணியபிரதியீட்டு விளைவு சிறியதாக இருக்க வேண்டும்.
3. அப்பொருளுக்குரிய எதிர்க்கணிய வருமான விளைவு பெருமளவாக இருக்க வேண்டும்.

இத்தகைய தன்மைகளை ஒரு பொருள் கொண்டிருப்பின் தான் விலையும் கேள்வித்தொகையும் ஒரே திசையில் செயற்படும். இத்தகைய ஒரு விசேட தன்மையையே கிஃபன் அவதானித்து தனது கருத்தினைக் கூறினர்.

## பொதுப் பொருளும் தனியார் பொருளும்

குறிப்பிட்ட பொருளுக்கு அல்லது சேவைக்கு விலை கொடுக்கா விட்டாலும் அதன் நுகர்வில் இருந்து விலகி நிற்க முடியாததும், மேலதிகமான ஒருவரின் நுகர்வினால் இன்னொருவரின் நுகர்வு குறையாததுமான தன்மையினைக் கொண்ட பொருள் அல்லது சேவையினையே பொதுப் பொருள் என்பர். அதாவது பொதுப் பொருள் பின்வரும் இரண்டு முக்கிய பண்புகளைக் கொண்டுள்ளது.

1. விலக்குதல் விதிக்கு உட்படாதது.
2. நுகர்வில் போட்டித் தன்மையற்றது.

மேற்கூறிய இரு பண்புகளும் தனியார் பொருளுக்கில்லை. பொதுப் பொருள் என்பதற்கு முக்கியமான உதாரணமாக தேசிய பாதுகாப்பைக் கூறுவர். தேசிய பாதுகாப்பு என்ற சேவையினை எவராலும் நுகராமல் இருக்க முடியாது. அதற்கு விலை கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி அதனை நுகர்வதில் இருந்து ஒருவரை விலக்கி வைக்க முடியாது. அத்துடன் குறிப்பிட்ட நபர் விரும்பினாலுங்கூட அதனை நுகர்வதை ஒதுக்கி (reject) வைக்கவும் முடியாது. ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு சென்றாலும் தேசிய பாதுகாப்பு சேவையினை நுகர்ந்தேயாதல் வேண்டும். ஆனால் தனியார் பொருள் இத்தகைய தன்மையுடைதல்ல. விலைகொடுக்கா விட்டால் தனியார் பொருளை ஒருவர் கொள்வனவு செய்யவோ அல்லது அதிலிருந்து பெறப்படும் பலனை நுகரவோ முடியாது. குறிப்பிட்ட ஒரு பொருளை ஒருவர் விலை கொடுத்து வாங்கி விட்டால் அதிலிருந்து கிடைக்கும் நன்மையினை அவரே அனுபவிப்பார். மற்றவர்கள் அதன் நுகர்வில் இருந்து தடுத்து விடலாம். தனியார் பொருளுக்கு சொத்துரிமை என்பதுண்டு. இதன் காரணமாகவே அதனை நுகர்வதில் இருந்து மற்றவர்களை நீக்கிவிடலாம்.

பொதுப்பொருள் நுகர்வில் போட்டித் தன்மையற்றது. அதாவது ஒருவர் அப்பொருளை எவ்வளவு நுகர்வு செய்தாலும் அந்நுகர்வு மற்றவரின் நுகர்வைப் பாதிக்காது. ஆனால் தனியார் பொருள் அப்படிப்பட்டதல்ல. ஒருவர் குறிப்பிட்ட தனியார் பொருளில் குறிப்பிட்ட அலகுகளை நுகரும் போது அது மற்றவர்களால் நுகரக்கூடிய அலகுகளின் அளவினைக் குறைக்கின்றது. உதாரணமாக குறிப்பிட்ட ஆண்டில் கிடைக்கப்பெற்ற நெல் உற்பத்தியில் குறிப்பிட்டளவு நெல்லை ஒருவர் நுகரும் போது ஏனையவர்களால் மிகுதியையே நுகர முடியும். பொதுப்பொருளைக் குறித்து நுகர்வில் போட்டியற்ற நிலையில்லாததால் மேலதிகமாக ஒருவர் அதனை நுகர முன்வரும் போது அதற்கென மேலதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால் பொதுப் பொருள் குறித்த எல்லைச் செலவு பூச்சியமாக உள்ளது.

பொதுப் பொருட்களைப் பொறுத்தவரையில் விலை கொடுக்காதவர்களை அதன் நுகர்வில் இருந்து விலக்கி வைக்க முடியாதாகையால் அதனை உற்பத்தி செய்பவர்கள் அதனை நுகர்வோரிடமிருந்து கட்டணம் அறவிட முடியாத நிலை ஏற்படுகின்றது. இதனால் இந்த 'இலவசமாக சவாரி விடுபவர் பிரச்சனை' (Free Rider Problem) தோன்றுகின்றது. இதன் காரணமாக தனியார் இப்பொதுப் பொருட்களை உற்பத்தி செய்ய முன்வருவதில்லை. தனியார் இலாப நோக்கின் அடிப்படையிலேயே செயல்படுகின்றனர். உற்பத்தியை செய்து விட்டு அதனை நுகர்வோரிடமிருந்து கட்டணம் வசூலிக்க முடியாத நிலை உள்ளபோது எந்த தனியாரும் அப்பொருளை உற்பத்தி

செய்வதற்கு தூண்டப்படமாட்டார்கள். அதே வேளையில் இலவசமாகப் பெறக் கூடிய சேவைக்கு நுகர்வோரும் கட்டணம் செலுத்த முன்வரமாட்டார்கள். இந்நிலை யால் சந்தைப் பொறிமுறையின் அடிப்படை யில் இப்பொருளை உற்பத்தி செய்ய முடியாது. பொதுப் பொருள் மீது விலை விதித்து அதனை நுகரும் சிலரை கட்டுப்படுத்த நினைப்பதும் விருப்பத்தக்கதல்ல. ஏனெனில் அவர்களின் நுகர்வு குறிப்பிட்ட பொருளின் நிரம்பலில் குறைவினை ஏற்படுத்த மாட்டாது என்பத னாலாகும். இக்காரணங்களினால் தான் பல பொதுப் பொருட்களை (தேசிய பாது காப்பு, பொலிஸ் பாதுகாப்பு, வெளிச்ச வீடு, தெருவிளக்கு, பெருந்தெருக்கள்) அரசாங்கமே உற்பத்தி செய்கின்றது. அர சாங்கத் தலையீடு இல்லாமல் பொதுப் பொருட்களை உற்பத்தி செய்தல் என்பது இலகுவான காரியமன்று.

'விலை கொடுக்காதவர்கள் நுகர முடி யாது' என்ற தத்துவத்தின் அடிப்படையி லேயே சந்தைப் பொருளாதாரம் இயங்கு கின்றது. உத்தம சாதனப் பயன்பாடு என்பது ஒரு பொருளின் விலை அதன் எல் லைச் செலவுக்கு சமனாக உள்ளபோது ஏற் படுகின்றது என்று கூறப்படுகின்றது. ஒரு வர் மேலதிகமாக தேசிய பாதுகாப்பை நுகர முற்படுகின்ற போது ஏற்கனவே உள்ள பாதுகாப்பு சேவையையே நுகர்வு செய்கின்றார். அவருக்காக புதிய செலவு செய்யப்படுவதில்லை. எனவே தான் பொதுப் பொருள் குறித்த எல்லைச்செலவு பூச்சியமாகும் எனக் கூறுகின்றோம் எனவே பொதுப் பொருளை பூச்சிய விலையில் வழங் கும் போதே உத்தம சாதனப் பயன்பாடு நிலவ முடியும். இதனால் இப்பொருள் இல வசமாக வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இலவசமாக பொருட் களை வழங்க இலாப நோக்கமுடைய தனி யார் முன்வரமாட்டார்கள் என்றபடியால் அரசாங்கமே இதனை வழங்கவேண்டி உள் ளது. சமுகம் வாழ்வதற்கு பொதுப் பொருள் அவசியமென்றபடியால் அரசாங் கம் தலையிடுவதற்குரிய காரணங்களில் ஒன் றாக பொதுப் பொருளும் அமைகின்றது

தனியார் பொருளிலிருந்து அதனை நுகர்வோர் எவ்வளவு நன்மையினைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதை அப் பொருளுக்கு அவர்கள் கொடுக்கும் விலை யில் இருந்து அறிந்து கொள்ளலாம். ஆனால் பொதுப் பொருட்களின் நுகர்விலி ருந்து எவ்வளவு நன்மையினைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதை இலகுவாக கணிப்பிட்டுவிட முடிவதில்லை.

## இடைநிலைப் பொருட்களும் முடிவுப் பொருட்களும்

உற்பத்தியாளனால் ஏனைய பொருட்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்து கின்ற பொருட்களே இடைநிலைப் பொருட் களாகும். உதாரணமாக பேக்கரி உரிமையா ளர் ஒருவர் பாண் உற்பத்தி செய்வதற்காக கோதுமை மாவைப் பயன்படுத்துகின்ற போது கோதுமை மா இடைநிலைப் பொரு ளாக அமைகின்றது. இவ்வாறான இடை நிலைப் பொருட்களின் மீது செய்யப்படும் செலவு முடிவுப் பொருளின் விலையுடன் சேர்க்கப்படுகின்றது. பெரும்பாலான உள் ளீடுகள் இடைநிலைப் பொருட்களாகவே உள்ளன.

ஏனைய பொருட்களை உற்பத்தி செய்வ தற்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனல்லாது அவற்றைப் பயன் படுத்துவோரால் நேரடியாகவே நுகர்வு செய்வதற்காக கொள்வனவு செய்யப்படும் பொருட்களே முடிவுப் பொருட்களாகும். இம் முடிவுப் பொருட்களில் சிலவற்றை நுகர்வோர் உடனடி நுகர்வுக்காகவும் சில வற்றை நீண்டகாலநுகர்வுக்காகவும் கொள் வனவு செய்வர். நீண்டகால நுகர்வுக்காக கொள்வனவு செய்யப்படுபவற்றை நீடித்த வாழ்வுடைய பொருட்கள் என்பர். இடை நிலைப் பொருளின் மீதான செலவு முடிவுப் பொருளுக்கான விலையில் ஒரு பகுதியாக இருக்கும். ஆனால் முடிவுப் பொருளின் மீதான செலவு இன்னொரு பொருளின் விலை யில் ஒரு பகுதியாக இருக்கமாட்டாது. உதா ரணமாக உருக்கின் மீதான செலவு அதனைப் பயன்படுத்தி உற்பத்தியாக்கப்படும் இயந் திரத்தில் விலையில் சேர்க்கப்பட்டிருக்கும். ஆனால் இயந்திரத்தின் மீதான செலவு அத னைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருளின் விலையின் மீது இருப்பதில்லை. இவ் வகையான ஆய்வின்படிதான் நாம் நீடித்த வாழ்வுடையபொருட்கள்சிலவற்றை(அவை

ஏனையபொருட்களை உற்பத்திசெய்யப் பயன்படுத்தினுலும்) முடிவுப் பொருளாகக் கருதுகின்றோர். உதாரணமாக குறித்தவருடத்தில் இயந்திரமொன்றைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பொருளை உற்பத்திசெய்கின்றபோது அப்பொருளின் விலையில் இயந்திரத்திற்கான செலவு சேர்க்கப்படுவதில்லை. காரணம் அடுத்த சில வருடங்களிலும் அந்த இயந்திரத்தினை உற்பத்தியில் பயன்படுத்தலாம் என்பதாலாகும். அதாவது நீண்டகால மூலதனப் பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களின் விலையில் அம் மூலதனப் பொருட்களின் மீது செய்யப்படும் செலவில் மிகச்சிறிய பகுதியே உள்ளடக்கப்படுவதால் அதனைப்பெரிதும் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதில்லை. இதனுல்தான் இயந்திரமும் முடிவுப் பொருளாக கருதப்படுகின்றது.

மக்கள் நலனில் ஏற்படும் அதிகரிப்பு என்பது மக்கள் நுகர்கின்ற பொருட்களின் தரத்தினையும் தொகையினையும் பொறுத்தமையும், ஒரு நாட்டு மக்களின் நலனை அளவிடுவதற்கு முடிவுப் பொருட்களே கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஒரு நாட்டில் இடைநிலைப் பொருட்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படினும் அவற்றைத் திறமையான வகையில் பயன்படுத்தி தரமான முடிவுப் பொருட்களை பெருமளவில் உற்பத்தி செய்யாவிட்டால் மக்களால் அதிகளவு பொருட்களை பயன்படுத்த முடியாது போய்விடும். எனவேதான் மக்களின் நலனில் ஏற்படும் அதிகரிப்பை விளக்குவதற்கு முடிவுப் பொருட்களே கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

தேசிய வருமானக் கணிப்பீட்டின் போது முடிவுப் பொருட்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படுகின்றன என்பதும் இடைநிலைப்பொருட்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். இதனுல் முடிவுப் பொருள் மீதான செலவீடு மொத்த தேசிய செலவீட்டில் சேர்க்கப்படும். இடைநிலைப் பொருட்கள் மீதான செலவீடு மொத்த தேசிய செலவீட்டில் சேர்க்கப்படுவதில்லை. இடைநிலைப் பொருட்களின் பெறுமானத்தினையும் சேர்த்தாகவே முடிவுப் பொருளின் விலை அமைகின்றது. இந்நிலையில் இடைநிலைப் பொருட்களையும் முடிவுப் பொருட்களையும் கூட்டினுல் இரட்டைக் கணிப்பிடல் தவறு ஏற்பட இடமுண்டு. பின்வரும் அட்டவணையின் உதவியுடன் முடிவுப் பொருளையும் இடைநிலைப் பொருளையும் விளக்கலாம்.

### முடிவுப் பொருள் இடைநிலைப் பொருள் பற்றிய விளக்கம்

| விடயம் | விற்பவர் | வாங்குபவர் | விலை (ரூபா) |
|---|---|---|---|
| உரம், கிருமிநாசினி | உரம், கிருமிநாசினியை உற்பத்தி செய்பவர் | விவசாயி | 2 |
| கோதுமை தானியம் | விவசாயி | மில் உரிமையாளர் | 5 |
| கோதுமை மா | மில் உரிமையாளர் | பேக்கரி சொந்தக்காரர் | 9 |
| பாண் | பேக்கரி சொந்தக்காரர் | நுகர்வோர் | 10 |
| | | மொத்தம் = | 26 |
| | மொத்த தேசிய வருமானத்திற்கான பங்களிப்பு = | | 10 |

இவ்வுதாரணத்தில் உரம், கிருமிநாசினி கோதுமை தானியம், கோதுமை மா போன்றன ஒவ்வொரு துறையினது முடிவும் பொருளாக இருந்தாலும் அவை வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்துவதால் அவை இடை நிலைப் பொருட்களாகும். பாண் நேரடியாக நுகர்வோரால் உண்ணப்படுவதால் அது முடிவுப் பொருளாகும். அதனுடைய பெறுமதியே தேசிய வருமானக் கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படும். இடை நிலைப் பொருட்களையும் முடிவுப் பொருட்களையும் சேர்த்து தேசிய வருமானத்தைக் கணிப்பின் இங்கு அதன் பெறுமதி 26 ரூபாவாக இருக்கும். இது உண்மையாக உற்பத்தி செய்யப்பட்ட அளவிலும் பார்க்க மிகையாக உள்ளது. இரட்

டைக் கணிப்பிடலில் தவறு நேர்ந்ததே இதற்குக் காரணமாகும். இத் தவறை நீக்குவதற்கு கூட்டிய பெறுமான முறையை அல்லது முடிவுப் பொருளின் பெறுமதியை மட்டும் கணிப்பிடுவது என்ற முறையைக் கையாளலாம்.

பொருட்களை கோட்பாட்டு ரீதியாக இடைநிலைப் பொருட்கள், முடிவுப் பொருட்கள் என வேறுபடுத்தினலும் நடைமுறையில் அவற்றிற்கிடையே தெளிவான வேறுபாட்டைக் காண்பது கடினமாகும். சில பொருட்கள் இடைநிலைப் பொருட்களாக விளங்கும் அதே சமயத்தில் முடிவுப் பொருட்களாகவும் விளங்குகின்றன. உதாரணமாக பசுவின் பாலைக் கூறலாம். அதனை நேரடியாக பாலாக நுகரும் போது அது முடிவுப் பொருள் எனப்படும். அதனைப் பயன்படுத்தி சொக்கலேற், பாற்கட்டி (Cheese) போன்றவற்றை உற்பத்தி செய்யும் போது அது இடைநிலைப் பொருளாக கருதப்படும்.

## 1988ன் பாதீடு — சுருக்கம்

| | விடயங்கள் | மில்லியன் ரூபாவில் |
|---|---|---|
| (1) | மீண்டெழும் செலவு<br>கழி: குறைச் செலவு ($2\frac{1}{2}\%$) | — 41,716<br>(1.044)<br>—40,716 |
| (2) | அரசிறை | +49.260<br>8,544 |
| (3) | நடைமுறைக் கணக்கு மிகை | + 44.620 |
| (4) | மூலதனச் செலவினங்கள் | + 36,076 |
| | கூட்டு: முற்பணக் கணக்குகள் மீதான தேறிய கடன் | 100 |
| (5) | சமூல (மொத்த)ப் பற்றுக்குறை | + 36,176 |

இதில் பற்றுக்குறைக்கு நிதி திரட்டப்பட வேண்டும். அல்லது உத்தேசிக்கப்பட்ட தொகையைச் செலவு செய்ய முடியாது. பின்வரும் முறையில் நிதியீட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது

| | விடயங்கள் | மில்லியன் ரூபாவில் | |
|---|---|---|---|
| (1) | மொத்தப் பற்றுக்குறை | | 36,176 |
| (2) | நிதியீட்டம் | | |
| | 2.1 உள்நாட்டு மூலகங்கள் | | |
| | 2·1·1 வங்கியல்லாத்துறை | 11,000 | |
| | 2·1 2 வங்கித்துறை | 2.576 | |
| | 2.2 வெளிநாட்டு மூலங்கள் | | 13,576 |
| | 2·2·1 வெளிநாட்டுக் கொடைகள் | 5,000 | |
| | 2·2·2 செய்திட்டக்கடனும் பண்டக் கடனும் | 17,600 | 22,600 |

# 1988 பாதீட்டின் வரிமுறை மாற்றங்கள்

1988ம் ஆண்டுக்கான பாதீட்டில் அரசிறையாக 49,260 மில்லியன் ரூபா பெறப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் வரி வருமானம் 40,385 மில்லியனாகும். வரியல்லாத வருமானம் 8,875 மில்லியன் மாத்திரமேயாகும்.

இப்பாதீட்டில் வரி வருமானத்தை அதிகரிப்பது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றை பின்வருமாறு குறிப்பிடலாம்.

## 1. வருமானவரி (Income tax)

(i) அதிகூடிய வரி விதிப்பு வீதம் 50 லிருந்து 40 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

(ii) வரிவிதிப்பு எல்லைகள் 5 லிருந்து 4 ஆகக் குறைக்கப்பட்டுள்ளன.

பழையது

| | | | |
|---|---|---|---|
| முதல் | 27,000 | ரூபா | வரி இல்லை |
| அடுத்த | 21 000 | ,, | 10% |
| | 24,000 | ,, | 20% |
| | 21,000 | ,, | 30% |
| | 24,000 | ,, | 40% |
| மிகுதியில் | | | 50% |

புதியது

| | | | |
|---|---|---|---|
| முதல் | 27,000 | ரூபா | வரி இல்லை |
| அடுத்த | 21,000 | ,, | 10% |
| | 24,000 | ,, | 20% |
| | 24,000 | ,, | 30% |
| மிகுதியில் | | | 40% |

(iii) பல்வேறு அட்டவணைகளின்படியுமான வரி விதிப்பு எல்லை 150,000 ரூபாவிலிருந்து 50,000 ரூபாவுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

(iv) மொத்த வரிப்பொறுப்பு (வருமான வரியும் செல்வ வரியும்) எல்லை 60 வீதத்திலிருந்து 50 வீதத்துக்கு குறைக்கப்பட்டது. மதிப்பிடப்படும் வருமானம், இலாபம் தொடர்பாக வரி விலக்கு பெற்றவற்றின் மீது இவ்வாறு விதிக்கப்பட்டது.

(v) அனுமதிக்கப்பட்ட செயல்திட்டத்திலிருந்து மீளப்பெறப்பட்ட முதலீட்டு விகிதத்துக்கேற்ப, முதலீட்டு விலக்கு மீளப்பெறப்படும்.

(vi) கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் நிறுவனங்களுக்கு உதவும் உள்ளூர் விநியோகஸ்தர்கள் அந்நியச் செலாவணி வங்கி அலகுகளிடமிருந்து நிதி பெற்றிருந்தால் விலக்குப் பெறுவர்.

(vii) பழைய சொத்துக்களின் விற்பனையால் பெறப்படும் இலாபம் மாத்திரம் புதிய சொத்தின் கொள்வனவுப் பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டு பெறுமானத் தேய்வுக்கு அனுமதியளிக்கப்படும்.

(viii) இளைப்பாறியவர்கள் தமது ஊழியர் சேமலாப நிதி (E.P.F)யை முதலீடு செய்து பெறப்பட்ட வருமானமாக இருப்பின் வரி விலக்கு உண்டு.

## ஏற்றுமதித் தீர்வை (Export Duties)

(i) எல்லாவகையான சிறுவிவசாய ஏற்றுமதிகள், கடற் பொருட்கள் சார்ந்த ஏற்றுமதித் தீர்வை அகற்றப்பட்டுள்ளது.

(ii) தேயிலே ஏற்றுமதி மீதான தீர்வை பின்வரும் முறைப்படி குறைக்கப் பட்டுள்ளது.

| | பழையது (கிலோ கிருமில் ரூபாய்) | புதியது (கிலோ கிருமில் ரூபாய்) |
|---|---|---|
| பெருந்தொகையான தேயிலே | 5.00 | 3.50 |
| பொதிகளிடைக்கப் பட்ட தேயிலே | 3.50 | 2.00 |

(iii) பல்வேறு மரபுவழியல்லாத ஏற்று மதிகள் தொடர்பான அனுமதிப் பத்திரம் வழங்கும் முறை அகற்றப் பட்டது.

## இறக்குமதித் தீர்வை (Import Duties)

(i) கோதுமைத் தானியத்தின் மீதான இறக்குமதித் தீர்வை 10 வீதத்திலிருந்து 20 வீதத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

(ii) பிடவை மீதான இறக்குமதித்தீர்வை 100 வீதத்திலிருந்து 60 வீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது. எனினும் ஒரு சதுர மீற்றர் செயற்கை இழைத்துணியில் (Synthetic Textitles) ஆகக்குறைந்த தீர்வை 30 ரூபாவாகவும், பருத்தித்துணியில் 15 ரூபாவாகவும் விதிக்கப்படும்.

(iii) முன்பு 60 வீதத்திலும் கூடுதலான தீர்வை இருந்தவற்றுக்கு 60 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## புரள்மான வரி (விற்பனை வரி) (Turn Over Taxes)

(i) வரி விதிப்பு எல்லேக்குரியன ஐந்திலிருந்து நான்காக குறைக்கப்பட்டன.

(ii) முன்பு 3 வீதமாக வரி விதிக்கப்பட்டவை தற்போது 1 வீதமாக குறைக்கப்பட்டன.

(iii) பின்வருவன தொடர்பாக விற்பனை வரிகள் மாற்றியமைக்கப்பட்டன.

| | பழையது | புதியது |
|---|---|---|
| (அ) பயணிகள் போக்குவரத்து சேவை | 3% | 1% |
| (ஆ) முதலீட்டுக் கம்பனிகளினதும் கூட்டு நம்பிக்கை நிதியங்களினதும் பங்கு பரிவர்த்தனைகள் | 5% | 1% |
| (இ) பீடி உற்பத்தியாளர்கள் | 10% | 3% |
| (ஈ) செலவு குறைந்த கூரைக்கான பொருட்கள் | 10% | 5% |
| (உ) துண்டவடிவிலான மரம், தளபாடம் என்பவற்றின் கொள்வனவும், விற்பனையும் | 1% | 5% |
| (ஊ) பகுக்கப்படாத அழகுசாதனப் பொருட்கள் | 10% | 20% |

(iv) உள்நாட்டு நாணயக் கடிதங்களுக்குப் பதிலாக சர்வதேச நாணயக்கடிதங்களைப் பயன்படுத்தி ஏற்றுமதிக்காக பொருள் வழங்குபவர்களுக்கு வரிவிலக்கு வழங்கப்படும்.

## கலால் வரி (Excise Duties)

(i) மதுபானம் மீதான கலால் வரி பின்வரும் வீதப்படி அதிகரிக்கப்பட்டன.

(ஒரு லீற்றருக்கானது)
(Per Proof Litre)

| | பழையது ரூபா. | புதியது ரூபா. |
|---|---|---|
| தென்னஞ் சாராயம் | 78.00 | 86.90 |
| மொலஸ்ஸஸ் சாராயம் | 75.40 | 84.30 |
| வெளிநாட்டு மாதிரியிலான உள்ளூர் உற்பத்தி | 87.00 | 95 90 |
| பியர் (லீற்றருக்கு) | 12.00 | 14.90 |

(ii) புகையிலே மீதான தீர்வை கிலோகிருமுக்கு ரூபா 665 . 50 லிருந்து ரூபா 765.50க்கு அதிகரிக்கப்பட்டது.

(iii) கைத்தொழில்களுக்குப் பயன்படும் "எதைல் அல்க்ககோல்" மீதான தீர்வை Per Proof Litreக்கு ரூபா64.60லிருந்து ரூபா 1.50க்கு குறைக்கப்பட்டது.

## அனுமதிப்பத்திர வரிகள்
## (Licence Fees And Other Charges)

(i) மோட்டார் சைக்கிள்களின் பதிவுக் கட்டணம் ரூபா 100லிருந்து ரூபா 200க்கும் கார்களுக்கான கட்டணம் ரூபா 500லிருந்து ரூபா 1250க்கும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

(ii) மோட்டார் வாகன விற்பனையாளர் மீதான கட்டணம் 250லிருந்து ரூபா 10,000 மாக அதிகரிக்கப்பட்டது.

(iii) அரச திணைக்களங்கள் மீதான கட்டணமும், அறவீடுகளும் குறைந்தது 10 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது.

(iv) மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மீது குறைந்தது ரூபா 50 அறவிடப்படும்.

(v) சர்வதேச தொடர்பூட்டல் மீதான தீர்வைகளும் அதிகரிக்கப்படும்.

(vi) களியாட்ட நிறுவனங்கள் போன்றவற்றிலும் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படும். இவை வருடம் ஒன்றுக்கு 0 1 மில்லியனிலிருந்து ஒரு மில்லியன் ரூபா வரை விதிக்கப்படலாம்.

## ஏனைய வருமான முறைகள்
## (Other Revenue Measures)

(i) உணவுத் திணைக்களத்தின் வியாபாரத் தினல் கிடைக்கும் மிகையிலிருந்து ரூபா 500 மில்லியன் அரசிறைக்கு மாற்றப்படும்.

(ii) கட்டாய சேமிப்பு நிதியிலிருந்து திரட்டிய நிதிக்கு (Consolidated Fund) மிகுதி ரூபா 125 மில்லியனும் மாற்றப்படும்.

---

# அரசிறை மூலங்கள்

| வகைகள் | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | மொத்த அரசிறையின் சதவீதமாக | |
|---|---|---|---|---|
| | 1982 | 1986 | 1982 | 1986 |
| 1 வரி வருமானம் | 15.5 | 17.7 | 86.6 | 75.9 |
| 1 1 உற்பத்தியினதும் செலவினதும் வரிகள் | 12.5 | 15.0 | 69.8 | 64.1 |
| 1·1.1 பொதுவான விற்பனைகளினதும் மொத்த விற்பனைகளினதும் வரிகள் | 4.1 | 5.6 | 22.7 | 24.0 |
| 1·1·2 தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகள் | 2.3 | 2.5 | 12.8 | 10.7 |
| 1 1 3 இறக்குமதி தீர்வைகள் | 3.2 | 5.6 | 18.1 | 23.9 |
| 1 1 4 ஏற்றுமதி தீர்வைகள் | 2.5 | 0.9 | 13.9 | 3.8 |
| 1·2 கூட்டு, கூட்டல்லா வருமான வரிகள் | 2.9 | 2.6 | 16.4 | 11.4 |
| 2. வரியில்லா வருமானம் | 2.4 | 5.7 | 13.4 | 24.1 |
| மொத்த வருமானம் | 17.9 | 23.4 | 100,0 | 100,0 |

ஆதாரம் பொது திறைசேரி இலங்கை மத்திய வங்கி

## இலங்கையின் சனத்தொகை 1871 – 1986

| வருடம் | மொத்த சனத்தொகை (ஆயிரத்தில்) | பிறப்பு வீதம் | இறப்பு வீதம் | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| 1871 | 2,400 | — | — | — |
| 1881 | 2,760 | 27.4 | 22.7 | 1.42 |
| 1891 | 3,008 | 29.4 | 24.3 | 0.86 |
| 1901 | 3,566 | 34.4 | 27.6 | 1.72 |
| 1911 | 4,106 | 38.1 | 28.8 | 1.42 |
| 1921 | 4,498 | 37.6 | 30.4 | 0.91 |
| 1931 | 5,307 | 39.8 | 26.5 | 1.68 |
| 1946 | 6,657 | 36 8 | 23.0 | 1.52 |
| 1953 | 8,098 | 37.7 | 17.1 | 2.84 |
| 1963 | 10,582 | 37.3 | 10.4 | 2.65 |
| 1971 | 12,690 | 32.7 | 8.2 | 2.20 |
| 1981 | 14,988 | 28.0 | 6.0 | 1.90 |
| 1986 | 16,117 | 22.3 | 6.0 | 1.60 |

ஆதாரம். பதிவாளர் நாயகம் பகுதி

| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | 1983 | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|---|
| முதலீடு | 28 9 | 25 8 | 23.8 | 23.7 |
| மத்திய அரசாங்க முதலீடு | 4.9 | 4.6 | 4.8 | 5.3 |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 13.8 | 19.9 | 11 9 | 12 0 |
| தேசிய சேமிப்புக்கள் | 16.4 | 22.2 | 14.3 | 14.5 |
| சென்மதி நிலுவை | | | | |
| ஏற்றுமதிகள் | 20.6 | 24.2 | 22.0 | 18.9 |
| இறக்குமதிகள் | 37.2 | 31.9 | 34.2 | 30.6 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | –9.1 | –0.9 | –7.0 | –6.4 |
| அரசநிதி | | | | |
| அரசிறை | 20.7 | 24.5 | 24.0 | 23.4 |
| அரசாங்க செலவு | 38.5 | 34.8 | 39.8 | 37.6 |
| மீண்டெழும் செலவு | 21.0 | 20.7 | 20.8 | 19.4 |
| நடைமுறைக் கணக்கு மிகை | 0.1 | 3.8 | 3.0 | 4.1 |
| மொத்த வரவு செலவுத்திட்ட பற்றுக்குறை | 17.8 | 10.3 | 15.8 | 14.3 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான படங்களுக்கு



# பேபி போட்டோ

படப்பிடிப்பாளர்

சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

நவநாகரிக நங்கையருக்கான
வண்ண வண்ண ஆடைகளை பெற்றுக்கொள்ள
நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

# வைகை ரெக்ஸ்ரைல்ஸ்

இல. 5, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி — யாழ்ப்பாணம்

---

அறுசுவை உண்டிகளுக்கு

# அபிராமி விலாஸ்

212 - 214, இராமநாதன் வீதி
திருநெல்வேலி.



நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்.



# தீபா ஜுவல்லறி

**177, கஸ்தூரியார் வீதி, - யாழ்ப்பாணம்.**

**Space Donated by**

# SAMUEL SONS & Co. Ltd.

206, 208, Hospital Road, - JAFFNA.

வடமாகாணத்தின் தலைசிறந்த Super Grade ஆசிரியர்களினல்
15 வருட அனுபவ முத்திரை கொண்ட நிறுவனம்

# BITSMAN INSTITUTES

## MANIPAY

G.C.E. A/L
G.C.E. O/L

ஆண்டு 11ம், 10ம், 9ம், 8ம், 7ம், 6ம்
வகுப்புகளுக்குரிய சகல பாடங்களும்
நடைபெறுகின்றன.

விஞ்ஞானம்

பௌதிகம்: திரு. சௌந்தி B. Sc Hons
இரசாயனம்: திரு. மகாதேவா B. Sc. Hons
திரு. தில்லைநாதன் B. Sc. Hons
தூய பிரயோக கணிதம்: திரு. கமலசிங்கம் B Sc. Hons
தாவரவியல்: திரு. குகாதரன் B. Sc. Hons
திரு. செல்வநேசன்
விலங்கியல்: திரு. ஈசன் B. Sc. Hons

கலை, வர்த்தக, வகுப்புக்களும் தகுதிபெற்ற ஆசிரியர்களினுல் கற்பிக்கப்படுகின்றன.

## அபிவிருத்திப் பாதையில்

குளங்கள் யாவும் தோண்டப்பெறல் வேண்டும்.
மரங்கள் பலவும் நாட்டப்பெறல் வேண்டும்.
பனை மரங்கள் பல்லாயிரம் உண்டாதல் வேண்டும்.
சின்னஞ் சிறுர்களுக்குப் படிப்பகம் பரவுதல் வேண்டும்.
படிப்பகங்கள் நூலகங்கள் பல்கிப் பெருகுதல் வேண்டும்.
குடிசைத் தொழில்வளம் கூடியளவு வளரவேண்டும்.
நம்மவர் நாள்தோறும் நல்லன செய்தல்வேண்டும்.
எல்லோரும் தினமும் யோகாசனம் செய்தல் வேண்டும்.
கடமையை எல்லோரும் சரிவரச் செய்தல்வேண்டும்.

நாளும் நற்பணி செய்ய

உங்கள் ஆதரவை நாடும்

# மில்க்வைற்

---

யாழ்நகரில்...

க. பொ. த. (உயர்தரம்)
கலை வர்த்தக வகுப்புகள்

- ★ 1988 மீட்டல் வகுப்புக்கள்
- ★ 1989 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| பொருளியல் | — சின்னத்தம்பி |
| வர்த்தகம் | — தேவா |
| கணக்கியல் | — யோகராஜா |
| அளவையியல் | — சந்திரராஜா |
| இந்துநாகரிகம் / தமிழ் | நாகேஸ்வரன் |
| அரசியல் | — மனோகரன் |

# NEW MASTER INSTITUTE

B. M. C. Lane - Jaffna.

ASBESTOS SHEETS
BARBEDWIRE
WIRE NAIL
SANITARY WARES
BUILDING MATERIALS
CARPENTARY TOOLS

For all your requirments
Please Contact:

# MASCONS LIMITED

**35, Stanley Road, - Jaffna.**

☎ 24221

---

**Space Donated by**

*A Well Wisher*

வடமாகாணத்தின் தலைசிறந்த நிறுவனம்
சிறந்த ஆசிரியர்கள்
கண்ணியமான நிர்வாகம்
மெச்சத்தக்க பெறுபேறுகள்

★ ஆண்டு 5 லிருந்து ஆண்டு 10 வரை
★ க. பொ. த. (சாதாரணம்)
★ க. பொ. த. (உயர்தரம்)
கலை, வர்த்தகம், விஞ்ஞானம்

# நிரு கல்வி நிலையம்

புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

# உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வெளியீடுகள்

1. **கேள்வியும் நிரம்பலும்**
   ஆசிரியர் ந. பேரின்பநாதன் M. A.
   ப. சிவநாதன் M. A.
   (விரிவுரையாளர்கள் யாழ். பல்கலைக்கழகம்)
   விலை 18/-

2. **கேள்வி நெகிழ்ச்சி நிரம்பல் நெகிழ்ச்சி பற்றிய தத்துவங்கள்"**
   ஆசிரியர் ந. பேரின்பநாதன் M. A.
   விலை 12/50

3. **குறியீட்டு அளவைவியல்**
   ஆசிரியர் வே. புகபாலசிங்கம் B. A. (Hons)
   விலை

4. **விவரணப் புள்ளி விபரவியல்**
   ஆசிரியர் செ. இளங்குமரன் B Sc. (Hons) விலை 25/
   (பட்ட M. A., B. Com, Chartered மாணவர்களுக்கானது)

5. **விமான ஒளிப்பட விளக்கங்களுக்கான மூலாதாரங்கள்**
   ஆசிரியர் S. T. B. ராஜேஸ்வரன் M. A.
   விலை 25/-

## அடுத்த வெளியீடுகள்

அளவையியலும் விஞ்ஞான முறையும்
சந்தையமைப்பும் போக்குவரத்தும்
வெளிநாட்டு வியாபாரம்
நடைமுறை விடயங்கள் (திருத்திய பதிப்பு)
அரச நிதி ( ,, ,, )
வர்த்தக மாற்று விகிதம் ( ,, ,, )
பொது உளச்சார்பும் பொது அறிவும் ( ,, ,, )
"ஆக்கம்" மாத சஞ்சிகை.

வெளியீடு
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்நகரில்:

தரமான போட்டோஸ்ரற் பிரதிகளை
விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு

★

48 வருடகாலம் சேவை வழங்கும்
புகழ் பெற்ற நிறுவனம்

சன்லைற் றைக்கிளீனேர்ஸ்

கிறுன்ட் பஜார், யாழ்ப்பாணம்

யாழ்நகரில்:

தரமான மட்பாண்ட (செரமிக்) பொருட்கள்
எஸ் - லோன் பைப்புகள், இணைப்புக்கள்
ஓட்டுப் பலகைக் கதவுகள்
சுவரில் பதிக்கும் வண்ண மாபிள்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

யுனைற்றெட் செரமிக்ஸ் சென்ரர்

இல: 2-1/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சகல விதமான
கைக்கடிகாரங்கள்
சுவர் மணிக்கூடுகள்
மேசை மணிக்கூடுகள்
எலக்ரோனிக் கடிகாரங்கள்
மற்றும்
கல்குலேற்றர் முதலியவற்றை நவீன சாதனங்கள் மூலம் திருத்திக் கொள்வதற்கும் சர்வீஸ் செய்து கொள்வதற்கும்

# குணம் அன் கோ

21A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

---

Memorable events happen only once preserve it for ever by

# "EVERVISION"

Video Filming
Still Outdoor Photography

## EVERVISION

21A, Clock Tower Road,
JAFFNA.

யாழ் நகரில்...

நம்பகமான தரமான

தங்க ஆபரணங்களுக்குரிய சிறந்த இடம்



# இந்திரா ஜுவலர்ஸ்

185A, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம், 37 கண்டிவீதி யாழ்ப்பாணம்.